

கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI • 18.04.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்




சைபால் எல்லோர் வீட்டிலும் இருக்க வேண்டிய ஒன்று
இதம் தந்து
ரணம் ஆற்றும்...
70
சைபால்
FOR EXTERNAL USE ONLY
MAX. RETAIL PRICE Rs. 12.00
SAIBOL
for Cuts, Itches, Boils, Eczema, Scabies, Pimples Etc. Etc.
சைபால்
BEST SKIN OINTMENT
எரிச்சல் தரும் வெட்டுக்காயத்தின் மேல் சைபால் தடவுங்கள். எரிச்சலைப் போக்கி இதம் தரும். காயம் இருந்த சுவடே காணாமல் போகும்.
★ வெட்டுக்காயம் ★ முகப்பரு ★ சேத்துப்புண் ★ தேமல் ★ வேனல்கட்டி ★ பித்தவெடிப்பு முதலிய வியாதிகளுக்கு சிறந்தது.
உரிமையாளர் : சைபால். S. சங்கரநாராயணன்
Mfrs. : THE SOUTH INDIAN MFG. CO., MADURAI-20. Ph : 2534108

கல்கி

18.04.2010

ஆன்மிகம்

சிறுகதைகள்

அரசியல்

கல்வி ஸ்பெஷல்ஸ்

தொடர்கள்

சினிமா

அமரர் கல்கி பக்கம்

அடுத்த இதழ்
ஹார்ட் பீட்டை
எகிற வைக்கும்
தித்திக்
ஸ்பெஷல்



காலேஜ் துவங்குங்கறேன்

"ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்துக்குன்னு நல்ல காலேஜ் இல்லைங்கறேன். அதை உங்க குடும்பமே துவங்கி நடத்தலாங்கறேன். அந்த நல்ல காரியத்தை உடனே செய்யுங்க, பாக்கலாங்கறேன்'' என்று பெருந்தலைவர் காமராஜர் தமிழக முதலமைச்சராகப் பணியாற்றியபோது, கூறிய வார்த்தைகள்தான் தஞ்சை மாவட்டத்தில், பூண்டி திருபுஷ்பம் காலேஜ் துவங்க விதையாக இருந்தன.

''பதினான்கு துறைகளுடன் இயங்கி வருகிறது, எங்கள் காலேஜ். இங்குள்ள விளையாட்டுத் துறை, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் இணைந்துள்ள வேறெந்த கல்லூரியிலும் இல்லை'' என்கிறார் கல்லூரியின் தாளாளர் துளசி அய்யா வாண்டையார்!



புதிர் இணையதளம்

"ஒரு கப்பல் கடலில் சென்று கொண்டிருக்கிறது. கடலின் நீர் மட்ட அளவு ஒரு மணி நேரத்துக்கு பதினாறு அடியாக உயர்கிறது. கப்பலில் உள்ள ஏணி தண்ணீரில் நாலு அடி மூழ்கி விடுகிறது. ஐந்து மணி நேரத்துக்குப் பின், கப்பல் ஏணி தண்ணீரில் எவ்வளவு மூழ்கி இருக்கும்'' என்று புதிர் போடுகிறார் சீதாலட்சுமி. இவர் மட்டுமல்ல, இவரின் www.gymnasiumforbrain.com இணையதளம் முழுக்கப் புதிர்கள்தான். புதிர்களால் ஓர் இணைய தளம் எதற்காக என்று

பதனிடும் பணிக்கு

கேட்டால், பளிச்சென்று விடை தருகிறார், ''போட்டித்தேர்வுக்குதான்'' என்று. சபாஷ்... சுகமான புதிர்தான்.

விவசாயத்துக்கு தமிழில் இணையம்

வேளாண்மைத் துறையில் பயின்ற எஸ்.பாபு (தற்போது பேராசிரியர்) எஸ்.சுந்தரபாண்டியன் (கலிஃபோர்னியாவில்), ஜி.முருகன் (பேராசிரியர்), ராம. சுப்ரமணியன் (ஆராய்ச்சியாளர்)... ஆகிய நால்வரும் இணைந்து www.murutam.blogspot.com என்ற இணையதளத்தை நடத்தி வருகின்றனர். இது எளிய தமிழில் புதுமையான வேளாண் செய்திகளைக் கொண்டிருக்கிறது. விவசாயத்தில் புதுமை செய்ய ஆர்வமுள்ளோர் இதனைப் பார்க்கலாம்.

"**உ**ணவு பதனிடும் தொழில், தகுதிவாய்ந்த 4 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு தயாராக இருக்கிறது" - இப்படி சமீபத்தில் மத்திய அரசின் உணவுப் பதனிடும் அமைச்சகத்தின் இணைச் செயலாளர் அஜித்குமார், கூறியுள்ளார்.

தஞ்சாவூரில் உள்ள இந்திய தானியச் செயல் முறை தொழில்நுட்பக் கழகம் (Indian Institute of Crop Processing Technology) வரும் ஜூலை மாதத்திலிருந்து பி.டெக்., எம்.டெக் மற்றும் ஆராய்ச்சி மேற்படிப்பு ஆகியவற்றை அளிக்க உள்ளது. இதற்கான விண்ணப்பத்தை www.ppc.gov.in எனும் வலைத்தளத்திலிருந்து டவுன்லோடு செய்து கொள்ளலாம். புதுக்கோட்டை சாலையில் உள்ள இந்த நிறுவனத்தின் மின்னஞ்சல் iicpttnj@gmail.com.

நெல், சோளம், பருப்பு, எண்ணெய் விதைகள், உணவு ஆராய்ச்சி, விவசாயப் பொறியியல் ஆகிய ஆறு பிரிவுகளில், இந்த நிறுவனம் ஆராய்ச்சி செய்து வருகிறது .

ல லட்சம் பேர்!

தமிழ் படித்தாலும் கம்ப்யூட்டர்

"**பி**.ஏ. தமிழ், படிச்சாலும் சரி, பி.ஏ. ஹிஸ்டரி படிச்சாலும் சரி... எலெக்டிவ் சப்ஜெக்டாக கம்ப்யூட்டர் படித்து, அதிலும் தேறியாக வேண்டும். இல்லைன்னா டிகிரி கிடையாது. இந்த விஷயத்துல எங்க காலேஜ் வெரி ஸ்ட்ரிக்ட்'' என்கிறார், திருச்சி ஸ்ரீமதி இந்திராகாந்தி காலேஜ் முதல்வர் மீனா. இங்குள்ள கம்ப்யூட்டர் லேப்பில் உள்ள அதிநவீன கணினிகள் எண்ணிக்கை மட்டுமே எழுநூறு. ''வங்கி மேலாண்மை, மருத்துவமனை மேலாண்மை, பயோ கெமிஸ்ட்ரி, மைக்ரோ பயாலஜி போன்ற சப்ஜெக்ட்டுகளைச் சொல்லித் தரும்போது அதிக அளவில் கம்ப்யூட்டரைப் பயன் படுத்துகிறோம்'' என்கிறார்.

- ஜி.எஸ்.எஸ்., திருநாவு

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

நீங்கள் கேட்டவை

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

? ''நிலக்கரியின் தரம் குறைந்துவிட வில்லை; ஜெயலலிதாவின் தரம்தான் வேகமாகக் குறைந்து வருகிறது,'' என்று முதல்வர் கமெண்ட் அடித்துள்ளாரே?

! வாக்கியத்தின் முதல் பாதியை முதல்வர் ஆதாரபூர்வமாக நிரூபித்தாலே போதுமானது; ஜெயலலிதாவின் அரசியல் தரம் பற்றி மக்கள் முடிவுக்கு வருவதே நல்லது. தர விமர்சனம் என்பது இருவழிப் பாதை.

● ஜி.ஜெயராமன், கூந்தலூர்

? ''பட்டமளிப்பு விழாவின்போது அணியும் கவுன், காலனி ஆதிக்கத்தின் காட்டுமிராண்டித்தனமான அடையாளம்,'' என்று கூறி விழா மேடையிலேயே



* உணர்ந்தும் திருந்தாமல்...!

அதைக் கழற்றிப் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளாரே ஜெய்ராம் ரமேஷ்?

! விழாவுக்கு முன்னதாகவே அமைப்பாளர்களுக்குக் கடிதம் எழுதி, கவுன் கலாசாரத்தைப் புறக்கணிக்கும்படி வேண்டியிருக்கலாம். அது ஏன் அவசியம் இல்லை என்பதையும் விளக்கியிருக்கலாம். அமைப்பாளர்கள் ஒப்புக்கொள்ளாது போயிருந்தால், விழாவுக்கு வர விருப்பமில்லை என்று மறுத்தும்



* அவநம்பிக்கை அறிவிப்பு!

இருக்கலாம். அதை விடுத்து, மேடையில் புரட்சி நிகழ்ந்த முயன்றது மிகை என்பதுடன் 'barbaric' என்ற அவரது சொற்பிரயோகம் சிலரைப் புண்படுத்தியும் இருக்கிறது.

● அ.இராஜப்பன், கருமத்தம்பட்டி

? உடல் ஊனமுற்றவர்களை, 'மாற்றுத் திறனாளர்கள்' என அரசு அறிவித்துள்ளது பற்றி...?

! தாமதமாக வந்தாலும் வரவேற்கப்பட வேண்டிய மாற்றம்.

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு

? இளம் ஹீரோக்கள் எல்லோருடனும் நடிக்க வாய்ப்பு வருவதுடன் அதிகப் படங்களில் வாய்ப்பும் கிடைப்பதைப் பார்த்தால், தாம் உண்மையில் அழகாக இருப்பதாக நம்பிக்கை ஏற்படுகிறது என்று துள்ளிக் குதிக்கிறாரே தமன்னா?

துள்ளிக்குதிக்கிறாரே தமன்னா?

தராசு ! தமன்னா கூறியிருப்பது அவநம்பிக்கையின் வெளிப்பாடே! ''என் நடிப்புத் திறனில் எனக்கு நம்பிக்கை ஏற்படுகிறது'' என்று சொல்லித் துள்ளியிருந்தால், நாமும் மகிழ்ச்சி அடைந்திருக்கலாம்.

● **ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி** ★

? அதிகாரிகள் மீதான, பெயர் - முகவரி இல்லாத புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்கிற பிரதமரின் உத்தரவு பற்றி...?

! சரியான முடிவல்ல. மொட்டைக் கடிதங்களுக்கு மதிப்பளிப்பது பிரச்னையை வளர்க்கும்; புதிய பிரச்னைகளை உருவாக்கும். தகவல் அறியும் உரிமைச் சட்டம் இருக்கும்போது, இந்த உத்தரவுக்கு அவசியமும் இல்லை.

● **பா.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி**

? சானியா மிர்ஸாவுக்கு இந்தியாவில் மாப்பிள்ளையே கிடைக்கவில்லையா?

! கிடைக்காமலென்ன? ஆனால், ஆட்டத்தில் அவருக்குள்ள திறமை, மாப்பிள்ளை தேர்ந்தெடுப்பதில் இல்லை என்பது, அடுத்தடுத்து இரண்டுமுறை நிரூபணமாகி விட்டது!

● **பி.தர்சினி, குடந்தை** ❑


? காலாவதி மருந்துகள் விற்பனை தொடர்பான வழக்கில் கைதானவர்களை நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்கள் தாக்கியது குறித்து?


! வழக்கறிஞர்களின் கௌரவத்தைக் காலாவதியாக்கும் நடத்தை இது. வழக்கறிஞர்களை விலங்கிடக் கூடாது என்று சிறப்புரிமை கோருவோர், ஒரு விசாரணைக் கைதியை மொத்தித் தள்ள யாரிடம், எப்போது சிறப்புரிமை பெற்றனர்?


● **கல்யாணி பாலு, புதுக்கோட்டை**

? அடிக்கடி ஓய்வெடுக்காமல் பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவியாகச் செயல்பட வேண்டிய அவசியத்தை, அ.தி.மு.க. இழந்த டெபாஸிட், ஜெயலலிதாவுக்கு உணர வைக்குமா?

! உணர்ந்ததன் விளைவுதான் பையனூர் பங்களாவில் நடந்த உயர்மட்டக் கூட்டம் என்று எடுத்துக்கொள்ளலாம். கூடிப் பேசுவது பெரிதல்ல; ஆக்கப்பூர்வமான செயல் திட்டம் வேண்டும்; அலசல் அணுகுமுறை வேண்டும். பழையபடி சட்டசபையிலிருந்து வெளிநடப்புச் செய்வது,


• பிரச்னை பெருக்கும் உத்தரவு!


• அதிர்ச்சித் தகவல்!



• புண்படுத்திய பிரயோகம்

திருந்தாததையே உணர்த்துகிறது.

● ஜெ.துரைராஜ்,
சென்னை - 87

? ஷோயப் மாலிக் மீது ஹைதராபாத் போலீஸ் வழக்கு பதிவு செய்துள்ளதே?

★ தெரியாத ஆட்டம்!



★ வென்ற நியாயம்



! போலீஸில் புகார் கொடுத்தால் வழக்கு பதிவு செய்ய வேண்டியது காவல்துறையின் கடமை. அதில் வியப்பு ஏதுமில்லை. 'பாகிஸ்தானியரான அவர் மீது வழக்கு தொடர முடியுமா?' என்று காவல்துறை சந்தேகத்தையும் வெளியிட்டிருக்கிறது. கூடவே அவருடைய பாஸ்போர்ட்டையும் பறிமுதல் செய்திருக்கிறது! மாலிக் விஷயத்தில் காவல்துறை குழப்பத் துறையாகியுள்ளது.

● ராஜேஸ்வரி லோகநாதன், நெடுங்கல்

? அரசு கேபிள் டீ.வி என்ன வாயிற்று?

? கலைஞரோடு தயாநிதி சமரசம் ஆனது இன்னும் உங்களுக்குத் தெரியாதா?

● ஆர்.அஜிதா, கம்பம்

? இந்தியாவிலேயே அதிக விபத்து நிகழும் மாநிலங்களில் தமிழகம் இரண்டாம் இடத்தில் உள்ளது என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளாரே?

! அதற்கு ஆதாரமான அதிக மது விற்பனையும் இங்குதான். அதன் விற்பனைக்கு இலக்கு வைத்தால் விபத்தும் வியாதியும் இலக்கு இன்றியே உயரும்.

● ரேவதிப்ரியன், ஈரோடு

? ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் நளினியை விடுதலை செய்ய முடியாது எனத் தமிழக அரசு கூறிவிட்டதே?

! நளினி பற்றிய தகவல் அறிக்கை, அவர் விடுதலைக்குச் சாதகமாக அமையவில்லை என்பதுடன், தி.மு.க. காங்கிரஸ் நல்லுறவு என்கிற அரசியல் காரணமும் இருக்கலாம். எப்படியானாலும் கருணை என்பது கண்மூடித்தனமாக இருக்க முடியாது; கூடாது.

☐ ரூ.150/- பரிசு பெறுபவர்:
பி.தர்சினி, குடந்தை

★ ரூ.75/- பரிசு பெறுபவர்:
ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

● ஜெ.ஜெயராணி, மதுரை

? தி.மு.க. தலைமைப் பதவிக்குத் தேர்தல் நடத்தினால் தாம் கட்டாயம் போட்டியிடுவதாக அழகிரி கூறியுள்ளாரே?

! இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் ஒரு நாள் 'ஸ்டாலினா? அழகிரியா?' என்ற கேள்விக்கு தி.மு.க.வினர் விடை சொல்லியாக வேண்டும். பிரச்னை முற்றியுள்ள சூழலில், அதைத் தள்ளிப் போடாமல் இருப்பதே நல்லது.



ஜெர்மனி முதலான ஐரோப்பிய நாடுகளில் இலவசக் கல்வி!

Ph.D. படிப்புக்கு மாதம் 1 லட்சம் ரூபாய் வரை ஸ்காலர்ஷிப்!



அ.சுகுமாரன்

ஆச்சரியமாக இருந்தது!!

பல்கலைக்கழகங்களில் - அதுவும் ஐரோப்பா பல்கலைக்கழகங்களில் - இலவசக்கல்வி!!!

மேற்கொண்டு ஆராய்ச்சி செய்து பார்த்தோம். நூற்றுக்கும் அதிகமான பட்டப்படிப்பு, முதுகலைப்படிப்பு மற்றும் Ph.D. ஆராய்ச்சி படிப்புகளை பிரபல பல்கலைக்கழங்கள் முழுவதும் டியூஷன் ஃபீஸ் இல்லாமல் தருகிறார்கள்.

இந்த அலசல், உறுதி செய்தல், பாதுகாப்பானதா என்கிற விசாரணைகள் எல்லாம் முடிந்து ஊர்வாரியாக, நாடு வாரியாக, subject வாரியாகப் பிரித்துப் பட்டியலிட்டோம். இதை எல்லாம் தயார் செய்ய 5 மாதம் பிடித்தது.

ஆனால், பொறுப்பாக, குறைகளின்றி மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் எடுத்துச்சொல்லும் முன்னர் ஜெர்மனியில் சரியான பொறுப்பு அலுவலகம் ஒன்றை அடையாளம் கண்டோம். முறையான Work Permit மற்றும் Job ஏற்பாடு செய்யும் நிறுவனம் அது.

முடிவில், இதோ, மிகக் குறைந்த செலவில் பலநூறு subjectகளில் Degree மற்றும் Post Graduate படிப்புக்கான முழு சேவை தயார். ஆனால், மாணவர்கள், தங்கும் மற்றும் சாப்பாட்டுச் செலவுகளையும் ஆரம்பத்தில் செலுத்த வேண்டிய Placement Feesயையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதில் Part-time jobs மூலம் செலவுகள் கணிசமாகக் குறைந்துவிடும்.

வெகுவாகப் பழகிப்போன எலக்ட்ரிகல், மெக்கானிக்கல் எஞ்சினீயரிங், MBA, MBBS, கம்ப்யூட்டர் ஸ்டடீஸ் போக, பிரபலமாக பேசப்படாத ஆனால், மிக முக்கியமான Nanobio Technology, Biomedical Instrumentation, Robotics, Molecular Medicine போன்ற கோர்ஸ்களும் உள்ளன.

List of Countries Covered:

Austria, Denmark, Finland, Germany, Lithuania, Italy, Norway, Swedan, Poland, U.K.

Contact:
Prof. A. Sugumaran
"Foreign Studies Bureau"
C/o. Swarnalaya Jewellery,
5, Venkatanarayana Road,
(Near Panagal Park), T.Nagar,
Chennai - 600 017. Ph: 24358388
Mobile: 9962026302, 9381020107,

டிஸைன் ஸ்டடி

காலுக்குக் கிரீடம்!

காதில் அணியும் காதணி முதல் காலில் அணியும் காலணி வரை, எல்லாவற்றிலுமே ஒரு புதுவிதமான டிஸைன்களைத்தான் மக்கள் அதிகம் விரும்புகிறார்கள். சீனாவுக்கு அடுத்தபடியாக அதிக அளவு காலணிகளை டிஸைனிங் செய்வது இந்தியாதான். இத்துறையில் ஏற்றுமதியும் அதிகம்; எதிர்காலம் பிரகாசம். அதீத கற்பனை, எதையுமே கலைக் கண்ணோடு பார்க்கக்கூடிய திறமை இவை இருந்தால் போதும். டிஸைனிங் உலகில் வெகு சுலபமாக வெற்றிக் கொடிநாட்டிட முடியும்.

கடந்த சில வருடங்களாக ஃபுட்வேர் டிஸைனிங் எனச் சொல்லக்கூடிய ஷூக்கள் மற்றும் செருப்புக்களுக்குள் புதுவிதமான டிஸைன்களைப் புகுத்திச் செய்யும் தொழிலுக்கு ஏக கிராக்கி. இந்த ஃபுட் வேர் டிஸைனிங் என்பது இந்தியாவில் எந்தெந்த இன்ஸ்டிட்யூட்களில் நடத்தப்படுகிறது என்பதைப் பார்ப்போம்:

* **தி சென்ட்ரல் ஃபுட்வேர் ட்ரெயிங் இன்ஸ்டிட்யூட், ஆக்ரா...**

பத்தாம், பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றவர்கள், இந்த இன்ஸ்டிட்யூட்டில் சேர்ந்து இரண்டு வருடங்கள் காலணிகள் வடிவமைத்தல்



மற்றும் தயாரித்தல் தொடர்புடைய படிப்புக்களைப் படித்து டிப்ளமா பெறலாம்.

✱ ஃபுட்வேர் டிசைன் அண்ட் டெவலப்மென்ட்ஸ் இன்ஸ்டிட்யூட், நொய்டா;

இங்கே பத்தாம், பன்னிரண்டாம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்றுவிட்டு மூன்று வருட டிப்ளமா பயிற்சியை மேற்கொள்ளலாம். பட்டப்படிப்பை முடித்தவர்கள், காலணி தயாரித்தலில் மூன்று வருட மேற்படிப்பு டிப்ளமாவை இங்கு தொடரலாம்.

✱ நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபேஷன் டெக்னாலஜி, தரமணி, சென்னை:

காலணி வடிவமைத்தலைச் சிறப்புப் பாடமாக எடுத்துக் கொண்டு நான்கு வருட இளநிலை பட்டபடிப்பை இங்கே படிக்கலாம்.

✱ சென்ட்ரல் ஃபுட்வேர் ட்ரெய்னிங் இன்ஸ்டிட்யூட், கிண்டி:

இங்கே காலணி வடிவமைத்தலில் டிப்ளமா மற்றும் பி ஜி டிப்ளமா பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

✱ சென்ட்ரல் லெதர் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட், அடையாறு, சென்னை, மற்றும் இன்ஸ்டிட்யூட் ஆஃப் லெதர் ப்ராடெக்ட்ஸ், அம்பத்தூர்.

இவ்விரண்டு இடங்களிலுமே, காலணி வடிவமைப்பை பற்றிய பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

பிறகென்ன? நீங்களும் இன்றே காலடி எடுத்து வைங்க புதுசா ஒரு துறையை நோக்கி...

- என்.எஸ்.கே.

வட்டமேஜை

பிரஸ் சும்மா ஜெட் வேகப் போங்க. கவிதைகள், ஜோக்குகள் எல்லாம் சும்மா டக்கரா இருந்துச சிங்கோ.

-எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர

'பீட்ஸா விசிறிகள்' கட்டுரை யின் தகவல்கள் அனைத்தும் செம ஸ்வீட்!

- மு.மதிவாணன், அரூர்

வெளிச்சத்துக்கு வராத பல உண்மை களை எடுத்துக் காட்டிய



ஆன்மிக ஆவணம்

வசந்த பாலன் பேட்டி அருமை.

- ரேவதிப்ரியன், ஈரோடு-1

தெய்வீக மணங்கமழும் 'திருவிழா ஸ்பெஷலில்' கவிஞர் வேணு குணசேகரன் போர்த்தியது கவிதைப் பட்டாடை அல்ல, பாட்டாடை! கண்ணுக்கும் கருத்துக்கு இனிமை!

- டபிள்யூ.அப்பொலோக டேவிட், ஆலந்தூர்

"இந்த வார கல்கியை ஃப்ரீயா கேட்டேன். (அட்டையில் தேதியோ, விலையோ குறிப்பிடப்படவில்லை) தர முடியாதுன்னுட்டாரு கடைக்காரர். இதுக்கு நீங்களே ஒரு பைசல் பண்ணுங்க!"

- ஆர்.பிரகாஷ், பொன்மலை

"அட அட அடா... கல்லூரி எக்ஸ்

'ஹிஸ்டீரியா' நோயின் பிரதிபலிப்பே மனிதர்கள் 'சாமி' வந்து ஆடுவது. இதை மக்கள் ஆன்மிகத்தோடு (மூட)நம்பிக்கை களை வளர்த்து தொடர்புபடுத்தி வருவது விஞ்ஞானத்துக்குப் புறம்பான வேடிக்கை நிகழ்வு என்பதை வெகுவாக விளக்கியது மாண்புமிகு மனம்.

- மங்களம் மைந்தன், திருவெறும்பூர்.

முகப்பில் - அத்தனை அம்சமாய் - இறையருள் - தெய்வத் தேரோட்டம் மூலம் கிடைக்க வகைசெய்தது போல உள்ளேயும் உள்ளூர், வெளியூர் இவற்றைத் தாண்டி, ஜெர்மனியின் ஸ்ரீதேவி காமாட்சி அன்னை யின் தேரோட்டக் காட்சியையும் கண்முன்

நிறுத்தியது நிறைவு.

- மயிலை.கோபி, சென்னை-83

திருவிழாவுக்கு ஓர் அகராதி வெளியிட்டு ஐஸ்கிரீம் சாப்பிட்டது போல் ஆக்கிய த.கி.நீலகண்டனுக்கு தேங்க்ஸ்.

-ஜி.லக்ஷ்மி வாசுதேவன், வேளச்சேரி

பரிசுக் கடிதம்

திருவிழா ஸ்பெஷலின் முழு ஆனந்தக் கூத்தாடலின் ஆக்கிரமிப்பை, ஒருங்கிணைப்பாய் கூத்து ரசிகனின் டைரிக் குறிப்பில் வாசித்தோம்.

- மதுரை முருகேசன், தஞ்சாவூர்

"**கா**ற்றில் ஆடும் விழுது!" மராட்டிய சிறுகதை வாழ்க்கையின் யதார்த்தத்தையும், ஒரு தாயின் பாசமிகு ஆதங்கத்தையும், காட்டியிருந்தது.

- அன்னாமேரி இவான், விருகம்பாக்கம்

திருவிழா ஸ்பெஷல் தித்திக்கும் லட்டு உருண்டை என்றால் அதில் அதிகம் தித்தித்த கற்கண்டு பகுதி 'அன்னதானச் சிறப்பு'தான். அன்னதானத்தை சிரமேற் கொண்டு நடத்திய அன்னதான சிவன், மனிதனா? மகானா? என்று ஆச்சர்யப்பட வைத்தார்.

- உமா மோகன்தாஸ், திண்டுக்கல்.

கல்கி இணைய இதழில் சிறந்த கடிதம் எழுதி கிழக்குப் பதிப்பகத்தின் ரூ.250/- மதிப்புள்ள நூல்களைப் பரிசாகப் பெறுபவர் அறந்தாங்கியைச் சேர்ந்த பி.செந்தில்வேலன்

இதுவரை வெளிவராத புதுத் தகவல் கத்தி போடும் திருவிழா... த்ரில்லிங்கான புது ஆன்மிகப் படைப்பாகத் தந்த கல்கிக்கு, உரக்கக் கத்தி 'ஓ'போட்டுப் பாராட்டுகிறேன்.

-எஸ்.பொருநைபாலு, திருநெல்வேலி

பிறமொழிக் கதை அடுத்த இதழில்...

தூக்குத் தேர் கேள்விப்பட்டதே இல்லை. எங்களுக்குப் புதுமையான (பழைமையானது) விழாக்களை அறிமுகம் செய்தது மட்டுமின்றி, கும்பமேளா படங்களும் காணக் கிடைக்காத காட்சிகள்.

- எஸ்.மீனா, திருச்சி-6.


சமீபத்திய திரைப்பாடலான ஹோசன்னா பல்லவிக்கு குருத்தோலைத் திருவிழா அர்த்தம் கூறிவிட்டது!

- சாந்தி சுந்தர், நெய்வேலி

தேரும், தெய்வமும், திருவிழாக் கூட்டமுமாய் அட்டைப்படம் எம்மை ஆகர்ஷித்ததில் வியப்பில்லை! திருவிழாக்கள் - கோவில் வழிபாடு, வட்டாரங்களில் நடக்கும் பக்திப் பரவச ஆட்டபாட்டங்களையெல்லாம் விளக்கமாகவும், வண்ணப்படத்துடன் தந்து, அழகான ஆன்மிக ஆவணமாக இந்த வாரக் கல்கியைத் தயாரித்துத் தந்திருக்கிறீர்கள்!

- இரா.கல்யாண சுந்தரம், அனுப்பானடி

சமீபத்தில் செய்திகளில் பரபரப்பாகப் பேசப்படும் இந்த பாட்டி யார் தெரியுமா? 91-ம் பக்கம் பார்க்க...



டிசைன்.காம்!

ஹைதராபாதில், பஞ்சாப் யுனிவர்சிடியின் அங்கீகாரம் பெற்ற டிசைன் கல்லூரி ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றும் திருமதி அருணா தன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

"பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னால், ஆரம்பத்தில் டிசைன் கல்வி படிக்க வேண்டும் என்று திட்டமிடவில்லை. ஆனால், வித்தியாசமாகப் படிக்க வேண்டும் என்று மட்டும் விரும்பினேன். அப்போதுதான் என்.ஐ.எஃப்.டி. விளம்பரம் கண்ணில் பட்டது. பி.எஸ்ஸி., மேத்ஸ்/கெமிஸ்டிரி படித்திருந்தேன். அப்போதெல்லாம் டில்லியில் மட்டும்தான் இந்தக் கல்லூரி இருந்தது. நுழைவுத் தேர்வும் இருந்தது. நுழைவுத் தேர்வுக்கு என்று ஸ்பெஷலாகத் தயார் செய்ய வேண்டாம். ஓரளவு திறந்த மனதுடன் எதையும் அணுகும் பக்குவம் வேண்டும். நம் சிந்திக்கும் திறன், வித்தியாசமாகப் பதில் கண்டுபிடிக்கும் திறன், மற்ற தேர்வுகளில் உள்ளது போல் Aptitude, Verbal, Analytical என்ற வகையில்தான் தேர்வு இருக்கும். உங்கள் கற்பனைத் திறன் நிச்சயம் வளமாக இருக்க வேண்டும். எனக்குக் கொடுக்கப்பட்ட ஒரு சுவாரஸ்யமான கேள்வி, ஒரு கிராமச் சந்தையில் ஒரு ஒட்டகத்தை விற்க வேண்டும்! அந்த ஒட்டகத்தை எப்படி அலங்கரித்தால் விலை ஜாஸ்தியாகப் போகும் என்று கற்பனை செய்ய வேண்டும்!

க்ரூப் டிஸ்கஷனில் சேஃப்டி பின், கைதுடைக்கும் டிஷ்யூ என்று எதைக் கொடுத்தாலும் அதில் வடிவமைக்க தெரிகிறதா என்று பார்ப்பார்கள். தியரி டெஸ்டும் இருக்கும். டிசைன் துறையில் நிறைய வித்தியாசமாகச் சிந்திக்கும் திறன் இருக்க வேண்டும். thinking out of the box- மிக அவசியம்.

நான் படித்தது தோலுடைகள் வடிவமைப்பு -



பல்வேறு பிரிவுகள் :

1. மரச் சாமான்கள் உள்கட்டட வடிவமைப்பு (Furniture & Interior Design) 2. உடையலங்கார வடிவமைப்பு (Fashion Design) 3. கணினி வரைவு வடிவமைப்பு (Graphics Design) 4. பல் ஊடக வடிவமைப்பு (Multimedia Design) 5. செய்பொருள் வடிவமைப்பு (Product Design) 6. நகை வடிவமைப்பு (Jewellery Design) 7. அரங்கு வடிவமைப்பு (Exhibition (Spatial) Design) 8. நூலிழை வடிவமைப்பு (Textile Design) 9. பொம்மை மற்றும் விளையாட்டுச் சாமான்கள் வடிவமைப்பு (Toy Design) 10. தொழிற்சாலை வடிவமைப்பு (Industrial Design) 11. கல்வித் துறை வடிவமைப்பு (Instructional Design)

நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டிசைன்: தொழில் கல்விக்கு ஐ.ஐ.டி. மாதிரி, நிர்வாகத் துறைக்கு ஐ.ஐ.எம். மாதிரி, டிசைன் துறைக்கு இந்திய அரசால் அமைக்கப்பட்ட புகழ்பெற்ற நிறுவனம்; சுமார் 49 ஆண்டுகளாக, அகமதாபாதிலிருந்து இயங்குகிறது.

மேல் விவரங்களுக்கு: http://207.58.171.132.nid எனும் இணையதளத்தைப் பார்க்கவும். அணுகுக: The Registrar Phone: +91 79 26623462 Fax: +91 79 26621167 admissions@nid.edu

சென்னையிலும் பிற இடங்களிலும் டிசைன் பயிற்சி மையங்கள் உண்டு.

Leather Garment Designing. இந்தத் துறையில் மூன்று விதங்களில் வேலை வாய்ப்புகள் உள்ளன. ஒன்று, தாங்களாகவே சுயேச்சையாக டிசைனராக வருவது. கடினமான பாதை. ஆனால் மன சுக்கு நிறைவாக இருக்கும். எந்தத் துறையிலும் சுயேச்சையாகப் பெயர் சம்பாதிப்பதில் இருக்கும் சிரமங்கள் இதிலும் உண்டு.

இரண்டாவதாக, இன்று பெரிய கடைகளில்/மால் என்ற அமைப்புகளில் மெர்சண்டைசராக (merchandiser) நிறைய வாய்ப்புகள் உள்ளன. இன்று அனேக டிசைன் கல்லூரிகள், வளாக வேலை வாய்ப்புக்காக பெரிய பெரிய நிறுவனங்களை அழைக்கின்றனர்.

மூன்றாவது, என்னைப் போல் பிறருக்குக் கற்றுக்கொடுக்கும் வேலை. பல கல்லூரிகளில் இன்று டிசைன் கல்வி கற்றுத் தர வாய்ப்பு பெருகி வருகிறது. டிசைன் கல்வி படித்து வெற்றி பெற, திறமையுடன் கூட, அதீத ஆர்வம் இருக்க வேண்டும்" என்கிறார்.

- சூர்யா



கல்கி



2010 ஏப்ரல் 18
விக்ருதி சித்திரை 5
மலர் : 68
இதழ் : 38


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்


சட்டீஸ்கர் பயங்கரம்!

சட்டீஸ்கர் மாநிலம் முக்ரானா கானகப் பகுதியில், மாவோ தாக்குதலில் 74 சி.ஆர்.பி.எஃப் ஜவான்களைப் பறிகொடுத்திருப்பது, உள்துறை அமைச்சகத்துக்குப் புகட்டப்பட்டுள்ள கடுமையான பாடம். ''மே.வங்கத்தில் நக்ஸல் பிரச்னைக்கான தீர்வு, அம்மாநில முதல்வரிடத்தில் முட்டி மோதி நிற்கிறது!'' என்று நக்கல் பேசினார் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம். அதனை புத்ததேவ் பட்டாச்சார்யா கண்டனமும் செய்தார். ''மாவோயிஸ்டுகளை மூன்றாண்டுகளில் ஒடுக்கிவிடுவோம்'' என்றும் வெகு சமீபத்தில் கூறினார் ப.சிதம்பரம். வீராவேசப் பிரகடனங்களும், அரசியல் ரீதியான வேறுபாடுகள் காரணமாக எழும் அனாவசிய சர்ச்சைகளும், நக்ஸல்-மாவோ பிரச்னையை மேலும் தீவிரமாக்கவே செய்யும்.

பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கும் இயக்கத்தினரைக் கட்டுப் படுத்துவதோ, ஒழிப்பதோ சுலபமில்லைதான். ஆனால், அவர்கள் பேரில் விரோத பாவத்தை வெளிப்படுத்தி மார்தட்டுவதால், அவர்களை வழிக்குக் கொண்டுவருவது மேலும் கஷ்டமாகுமே தவிர, சுலபமாகிவிடாது! கூர்ந்த திட்டமிடல், சாணக்கியம், பிரச்னையைப் பல முனைகளிலிருந்து ஒரே சமயத்தில் அணுகித் தீர்க்கும் முயற்சி என்று பல விஷயங்கள் இணையும்போதுதான், நிலைமை கட்டுக்குள் வரும்; அதன் பிறகே தீர்வுக்கான வழி பிறக்கும்.

அரசாங்கத்தால் தொடர்ந்து உதாசீனப்படுத்தப்பட்ட பிரிவினர்தான் நக்ஸல் இயக்கத்தின் ராபின்ஹுட் அணுகுமுறையால் ஈர்க்கப்பட்டு, அதனை ஆதரிக்க ஆரம்பித்தனர். ஒரு கட்டத்துக்குப் பிறகு, அவ்





வியக்கத்தின் ஊமைக் கைதிகளாகவே மக்கள் மாறிவிடுகின்றனர். இவ்வாறு நடக்க அனுமதித்த பிறகு, விரைந்து பிரச்னையைத் தீர்ப்பது சாத்தியமில்லை.

நக்ஸல் முகாம்கள் அடர்காடுகளிலேயே பெரும்பாலும் இருப்பதாலும், அவர்கள் கொரில்லாப் போர் முறையைக் கையாள்வதாலும், மாநில காவல் துறையோ சி.ஆர்.பி.எஃப்போ அவர்களை வெற்றிகாண முடியாமல் பெருஞ்சேதமுறுகின்றன. ஆந்திராவில் இதற்கென ஏற்படுத்தப்பட்ட கிரேஹவுண்ட் சிறப்புப் போர்ப் படை மட்டுமே நக்ஸல்களை விரட்டுவதில் (ஒழிப்பதில் அல்ல!) வெற்றி கண்டுள்ளது. விரட்டப்பட்டவர்கள் ஆந்திரத்தின் அண்டை மாநிலங்களில் ஊடுருவித் தங்கள் கைவரிசையைக் காட்டி வருகின்றனர். மத்திய அரசும் நக்ஸல் பாதிப்பு உள்ள மாநில அரசுகளும் நக்ஸல்களின் கொரில்லா போர் முறையை எதிர்கொள்ள, பல்வேறு வித சிறப்புப் பயிற்சிகளைப் பெற்ற நவீன காவல்படைகளை உடனே உருவாக்க வேண்டும். இந்த முயற்சியில் அரசியல் வேறுபாடுகளைக் கடந்த ஒற்றுமை மிக அவசியம். நவீன ஆயுதங்கள், புலனாய்வு உபகரணங்கள், சிறப்புப் பயிற்சியாளர்கள், ஹெலிகாப்டர்கள் போன்றவற்றுக்கு நிறைய நிதியும் தேவைப்படும்.

முக்ரானாவில் இறந்துபோன வீரர்கள், கொரில்லாப் போர்முறையின் சில அடிப்படை விதிகளைக்கூடக் கடைப்பிடிக்கவில்லை என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இத்தகைய அவலங்கள் அனுமதிக்கப்படலாகாது. நக்ஸலைட்டுகளுக்கு அயல்நாட்டவர் உதவி எவ்வளவு தூரம் கிடைக்கிறது என்பதும் ஆராயப்பட்டு, அதைத் தடுக்க அயலுறவுத்துறை முனைய வேண்டும்.

ஒரே சமயத்தில் 74 வீரர்களின் உயிர்த் தியாகத்துக்குப் பிறகேனும், உள்துறை அமைச்சகம் பாடம் கற்று, விழிப்புடன் செயல்படட்டும்.

○



அட்டை டு அட்டை
கண்ணுல
விளக்கெண்ணெய்யை விட்டு
தேடு தேடுன்னு 'ஜாலி'
என்ற சொல்லை ஜாலியா தேடி...
ஒரு வழியா 66 முறை
வந்துள்ளதை
(அட! அதாங்க சரியான விடை!)
குறிப்பிட்டு ஜெயிச்சவங்க
விவரம் இதுதாங்க.

சரியான விடையை எழுதியதுடன்....
''பாரபட்சமில்லா பரப்பிரம்மம் - கல்கி!'' என்ற உற்சாக வாசகத்தையும் எழுதி ரூ.300/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

-மீனா முருகேசன், தஞ்சாவூர்

சரியான விடை எழுதிய இதர 17 வாசகர்களுக்கும் ரூ.100/- அன்பளிப்பு அளிக்கப்படுகிறது.

1. லக்ஷ்மிசங்கர் - வேலூர்
2. போ.வெங்கடலக்ஷ்மி - கோவில்பட்டி
3. பத்மினி - காட்பாடி
4. பி.கோபி - கிருஷ்ணகிரி
5. ச.பிரியா - வேலூர்
6. நளினி ராமசந்திரன் - கோவை
7. கே.சுப்பிரமணி - வேலூர்
8. சி.கஸ்தூரிரத்தினம் - கும்மிடிப்பூண்டி
9. என்.பாலகிருஷ்ணன் - மதுரை
10. எஸ்.சங்கர் - திருப்பரங்குன்றம்
11. அ.ராஜாரஹ்மான் - கம்பம்
12. எல்.ராஜேஸ்வரி - கிருஷ்ணகிரி
13. 'இனாம்' கேசவன் - கோவில்பட்டி
14. சி.இலட்சுமி - வேலூர்
15. ஜி.தாரிணி - மதுரை
16. ஜி.வெங்கட்ராமன் - சென்னை
17. பி.கோவிந்தசாமி - கிருஷ்ணகிரி

தவறான விடை எழுதி இருந்தாலும் நல்ல வாசகமாயிருந்ததால், எம்.எஸ்.கே. அருள்தேவன், முனியங்குறிச்சி ஆறுதல் பரிசாக ரூ.100/- பெறுகிறார்.

வாசகம்: **''நாங்க நினைப்பதெல்லாம் இருக்குது!
நீங்க கொடுப்பதெல்லாம் ஜொலிக்குது!''**

கலந்துக்கிட்டவங்களுக்கு தேங்க்ஸ்! ஜெயிச்சவங்களுக்கு கங்கிராட்ஸ்!



சோ எழுதிய

ஹிந்து மஹா சமுத்திரம்



வேதங்கள் தொடங்கி, உபநிஷத்துக்கள் வழியே வேதாந்த சிகரத்தில் ஏறி; சாத்திரம் கண்டு; புராணங்கள் வழங்கி, ஆலயங்கள் எழுப்பி; பக்தி வளர்த்து; சரித்திரம் எழுதி; நீதி பல வகுத்து; சட்டம் இயற்றி; சமூக சிந்தனையில் ஆழ்ந்து; விஞ்ஞானம்; கணிதம்; இலக்கியம்; வான சாத்திரத்தை அதன் கரையோரத்தில் நின்று பார்த்தவருக்கு ஏற்பட்ட பிரமிப்பை, மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

முதல் பாகம் ரூ.200.00

யுகங்களின் காலக்கணக்கு, பெயர்க்காரணம், யாகங்கள், தெய்வங்கள், உருவங்கள், வாஹனங்கள், வேதங்கள், உபநிஷத்துக்கள், தத்துவங்கள், எமதர்மன் உபதேசங்கள், மரணத்திற்குப் பின், வருணனின் உபதேசம், நாரதர் பெற்ற உபதேசங்கள், ப்ரம்ம ஸுத்ரம் – போன்ற பல தகவல்கள்.

இரண்டாம் பாகம் ரூ.250.00

ஷடங்கங்கள், ஸ்ம்ருதிகள், தர்மம், சட்ட தத்துவங்கள், அர்த்தசாஸ்திரத்தில் கூறப்படும் அரசு நிர்வாகம், பிரம்ம புராணம், பத்ம புராணம், விஷ்ணு புராணம், சிவ புராணம், நாரத புராணம், மார்க்கண்டேய புராணம், அக்னி புராணம், பவிஷ்ய புராணம், பிரும்ம வைவர்த்த புராணம், லிங்க புராணம், வராஹ புராணம், ஸ்கந்த புராணம், மத்ஸ்ய புராணம், கருட புராணம், ப்ரும்மாண்ட வாயு புராணங்கள், ஸ்ரீமத் பாகவதம் – போன்றவை அடங்கியது.

மூன்றாம் பாகம் ரூ.200.00

ராமாயணம், மஹாபாரதம், ஸ்ரீமத் பகவத் கீதை, யோக வாஸிஷ்டம், போன்றவை அடங்கியது.

நான்காம் பாகம் ரூ.150.00

மூன்று ஆச்சார்யர்கள் (ஆதி சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வாச்சாரியர்) வித்யாரண்யர், ஸ்ரீ வல்லபாச்சார்யர், ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் – ஆகியவர்களைப் பற்றியும் தெரிவிக்கிறது

ஐந்தாம் பாகம் ரூ. 250.00

அறுபத்து மூன்று நாயன்மார்கள், பன்னிரு ஆழ்வார்களைப் பற்றியது.

(அழகிய படங்களுடன், சிறந்த தாளில், நேர்த்தியான பைண்டிங் கொண்டது.)

அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
(ப.எண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மைலாப்பூர், சென்னை-4
தொலைபேசி: 24641314 www.alliancebook.com
email: srinivasan@alliancebook.com

வேணுமா... வேண்டாமா...

உஷார் ஸ்டூடண்ட்ஸ்

கேம்ப்ரிட்ஜ், ஹார்வர்ட் போன்ற பிரபல வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள், இந்தியாவில் நேரடி முதலீடு செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளன. வணிக அமைச்சகம் இதை வரவேற்பதாகவும், மனித வள அமைச்சகம் இதை ஏற்றுக்கொள்ள வில்லை என்பதாக வும் இருவேறு தகவல்கள் அடிபட்டுக் கொண்டிருக்கின்றன. இதுபோன்ற கல்வி நிறுவனங்கள் இந்தியாவில் அனுமதிக்கப் படுவதால் நமக்கு நன்மைதானா? இது தொடர்பாகச் சட்டம் ஒன்று அறிமுகமாக உள்ளதாமே?

கேள்விகளோடு ஐ.ஐ.டி. கான்பூர் மற்றும் சென்னை 'சைன்ஸ் சிடி' யின் தலைவர் பேராசிரியர் எம். ஆனந்தகிருஷ்ணனை அணுகினோம்.

"**இ**ந்தியாவிலுள்ள கல்வி நிறுவனங்களோடு இணைந்து இயங்கும் பல்கலைக் கழகங்கள் சுமார் நூற்றைம்பது உள்ளன. அவற்றை வழிமுறைப் படுத்தத்தான், சமீபத்தில் ஒரு சட்ட வடிவமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

'எந்தவொரு அமைப்பு இந்தியாவில் கல்வியை அளித்தாலும், அது முதலில் தன்னைப் பதிவுசெய்து கொள்ள வேண்டும்' என்கிறது புதிய சட்டம்.

இப்போதுள்ள பல பல்கலைக் கழகங்களைப் பற்றிய (முக்கியமாக வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள்) முக்கிய விவரங்கள் பலருக்கும் தெரிவதில்லை. அவை குறித்த அடிப்படை விவரங்கள் வெளிப்படையாக இருக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும், பல்வேறு பல்கலைக் கழகங்களின் திறமை, செயல்பாடு, பட்ட மதிப்பு ஆகியவை தெரியவரும். இப்போதுள்ள நூற்றைம்பது பல்கலைக்கழகங்களில் எழுபத்தைந்து சதவிகிதம் தரமற்றவை. (அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்று) ஏதோ ஒரு வெளிநாட்டின் பெயரைத் தங்கள் பெயரில் இணைத்துக் கொண்டு, அந்த வெளிநாட்டின் பெயரால் ஈர்க்கப்பட்டு, அவற்றில் சேர்ந்து பின் அவதிப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். அவற்றில் பலவும் அங்கீகாரம் பெறாதவை (non accredited) ஆகும்.

ஹார்வர்ட், கேம்ப்ரிட்ஜ், ஆக்ஸ்ஃபோர்ட்



யேல், ப்ரின்ஸ்டன், ஸ்டான் ஃபோர்ட் ஆகியவை முதல்நிலை ஆராய்ச்சிப் பல்கலைக்கழகங்கள் எனலாம். இவை அனைத்தும் வெளிப்படையாகவே, 'இந்தியா வில் பட்டப்படிப்பை வழங்குவ தில் நாங்கள் ஆர்வம் காட்ட வில்லை. படிக்க விரும்புபவர்கள் நேரடியாக எங்கள் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்கலாம்' என்று அறிவித்துவிட்டன.



* ஆனந்தகிருஷ்ணன்

அடுத்தகட்டப் பல்கலைக் கழகங்கள், பணம் பண்ணு வதற்காகவே இந்தியாவில் காலெடுத்து வைத்துள்ளவை. அவை இங்கு ஈட்டும் லாபத்தை, இனி தங்கள் நாட்டுக்கு எடுத்துச் செல்ல முடியாது (cannot repatriate) என்று சட்டம் வந்துள்ளது. எனவே, உதவாக்கரைப் பல்கலைக் கழகங்கள் இனி இங்கே ஏமாற்ற முடியாது.

இரண்டாம் உயர்ந்தநிலைப் பல்கலைக் கழகங்கள் (வர்ஜினியாடெக், ஜார்ஜியாடெக், மற்றும் சில ஆஸ்திரேலிய பல்கலைக்கழகங் கள்) இந்தியாவில் பல்கலைக்கழகங்களைத் தொடங்கினால், அவை சிறந்தவையாக இருக்கும். அவையும்கூட, தங்களையும் தங்கள் பாடத்திட்ட விவரங்களையும் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

வெளிநாட்டு முதலீடு என்கிற அளவில், இவற்றை அனுமதித்தால் என்ன என்ற கேள்வி எழுந்தது. பிரதம மந்திரியே இது குறித்துக் கணக்கிட்டு, அப்படியொன்றும் வெளிநாட்டு முதலீடு இதனால் கிடைப்ப தில்லை என்பதையும் அறிந்து கொண்டார்.

ஐ.ஐ.டி., இன்டியன் இன்ஸ்டிட்யூட்

வெளிநாட்டுப் பல்கலைக் கழகம்?



ஆஃப் சைன்ஸ் போன்ற நம் நாட்டுக் கல்வி நிறுவனங்கள், சிறந்த வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து, சில ஆராய்ச்சிகளில் ஈடுபடலாம். இருதரப்பிலும் மாணவர்கள் பரி வர்த்தனை செய்யலாம். இதற்கு இருதரப்பிலிருந்தும் நிதி அளிக்கலாம். உதாரணத்துக்கு எய்ட்ஸ் குறித்த ஆராய்ச்சியில், இருதரப்பிலும் உள்ள விஞ் ஞானிகள் இணைந்து செயல் படும்போது பயனுள்ள விளைவு கள் நேரவாய்ப்புண்டு.

- ஜி.எஸ்.எஸ்.

பிரபு, தம் மகள் கீர்த்தனாவுக்கு பயோடெனாலஜி படிக்க சீட் கிடைத்தபோது சந்தோஷப்பட்டார். மகளின் படிப்புக்காகக் கோவையில் ஒரு வங்கியில், இரண்டே கால் லட்சம் ரூபாய் கல்விக் கடன் கேட்டு விண்ணப்பித்தார். லோன் கிடைக்கவில்லை; கேட்டால், வங்கி தரப்பிலிருந்து சரியான தகவலும் இல்லை.

தர்மபுரி, பொய்யாப்பட்டியைச் சேர்ந்த கூலித் தொழிலாளி குப்புசாமியின் மகன் பிரபாகரன். ஆசிரியர் பயிற்சி பெற்றால் சுலபமாக வேலை கிடைக்கும் என்று நம்பி, கோவையைச் சேர்ந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றில் சேர்ந்தார். பயிற்சிக் கட்டணம் கட்ட வசதி இல்லாமல், அருகில் உள்ள வங்கிக்கிளை ஒன்றை கல்விக் கடனுக்காக அணுகினார். கிராமத்து ஏழை குடும்பத்தின் முதல் பட்டதாரியான இவரது வேண்டுகோள், வங்கி அதிகாரிகளின் காதில் ஏறவில்லை.



• எஸ். கோபாலகிருஷ்ணன்

தனியார் பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் ப்ளஸ் டூ ரிசல்ட் வருவதற்கு முன்பாகவே, அட்வான்ஸ் கொடுத்து சீட் முன்பதிவு செய்யும் வசதியானவர்கள் ஒரு பக்கம். தேவையான மார்க் வாங்கி, கல்லூரியில் படிக்க இடம் கிடைத்தாலும், தேவையான பணமில்லாத காரணத்தால் படிக்க முடியாமல் போகிற மாணவர்கள் இன்னொரு பக்கம். இவர்களது பிரச்னைக்குத் தீர்வு - பொதுத்துறை மற்றும், தனியார்



நாலரையிலிருந்து ஏழரை!



✱ டி.எஸ்.ராகவன்



✱ கார்த்தீபன்



வங்கிகள் தகுதி வாய்ந்தவர்களுக்கு தாராளமாகக் கல்விக் கடன்களை அளிப்பது ஒன்றுதான்.

ப.சிதம்பரம் மத்திய நிதி அமைச்சராக இருந்தபோது, பட்ஜெட் உரையில், ''கல்விக் கடன்களுக்கு செக்யூரிடி தர வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்பட்டுவிட்டது. வங்கிக்குத் திருப்தியளிக்கும் வகையில் ஒருவர் க்யாரண்டி வழங்கும் பட்சத்தில் நாலரை லட்சம் முதல் ஏழரை லட்சம்வரை செக்யூரிடி எதுவும் இல்லாமலேயே கடன் கிடைக்கும்'' என்று அறிவித்தார். கடன் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வங்கிகளுக்குச் சென்று ஏமாந்த மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்ட சம்பவங்களும் நடந்தன.

''வங்கிகளில் கல்விக்கடன் பெற முயற்சி செய்து முடியாமல் போனவர்கள் பலரும் எங்களை அணுகுகிறார்கள். இவர்களில் பலருக்குக் கடன் பெறத் தகுதி இருந்தும் தரப்படவில்லை. இத்தகைய கேஸ்களை நாங்கள் எடுத்துக்கொண்டு தொடர்புடைய வங்கிக் கிளைகளை அணுகி, சரியான விளக்கங்களைக் கூறிட, பலருக்குக் கடன் அளிக்கப்பட்டுள்ளது'' என்கிறார் எவரெஸ்ட் தொண்டு அமைப்பைச் சேர்ந்த கார்த்தீபன்.

''கல்விக்கடன் விஷயத்தில் வங்கிகளின் நிலைப்பாடு சரியா?'' என்று சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியாவில் பணியாற்றி ஓய்வு பெற்ற எஸ்.கோபாலகிருஷ்ணனிடம் கேட்டபோது, ''முன்பைவிட இப்போது அதிக அளவில் வங்கிகள் கல்விக்கடன் வழங்குகின்றன. இதற்குக் காரணம் இளைஞர்கள், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுதான். வாகனக்கடன், வீட்டுக் கடன் போன்ற மற்ற கடன்கள் கொடுத்தால், அடுத்த மாதத்திலிருந்து கடன் திரும்பி வர ஆரம்பித்துவிடுகிறது. ஆனால், கல்விக்கடன் அப்படி இல்லை.

படிப்பை முடித்து, வேலை கிடைத்த பிறகு, கடன் பெற்ற மாணவர் கடனைத் திருப்பிச் செலுத்த ஆரம்பிப்பார். அப்போதுகூட தன்

கல்விக்கடன்: சில தகவல்கள்

பட்டப் படிப்புகள், முதுகலை படிப்பு, மருத்துவம், சி.ஏ., சட்டம் மற்றும் நிர்வாகவியல் படிப்புகளுக்கு கல்விக்கடன் அளிக்கப்படுகிறது.

முக்கியமாகக் கல்விக் கட்டணம், ஹாஸ்டல் கட்டணம், தவிர லேபரட்டரி, லைப்ரரி மற்றும் பரீட்சைக் கட்டணம் ஆகியவற்றுக்கும் கடன் பெறும் தகுதி உண்டு.

இந்தியாவில் படிக்க மட்டுமில்லாமல் அயல்நாடுகளில் படிக்கவும் கடன் பெறலாம்; இந்தியாவில் படித்தால் அதிக பட்ச கடன் அளவு; 10 லட்சம் ரூபாய்; 4 லட்சத்துக்கு மேல் கடன் பெற 'மார்ஜின் மனி' கட்ட வேண்டும்.


படித்து முடித்து வேலை கிடைத்த ஆறு மாதத்தில் கடனைத் திருப்பிச் செலுத்த ஆரம்பிக்க வேண்டும். இல்லையெனில் படிப்பு முடித்த ஓராண்டு முடியும்போது, வேலை கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், ரீபேமெண்ட் தவணை ஆரம்பித்துவிடும். - ***சி.எம்.***

வாழ்க்கைச் செலவுக்கும், வட்டியும், அசலுமான கடன் தவணைக்குமாகச் சேர்த்து சம்பளம் கிடைக்குமா? ஒருவேளை அவருக்கு வேலை கிடைக்காவிட்டால்? அவரது எதிர்காலமே கேள்விக்குறியாக இருக்கும்போது, கடன், வட்டி இதுபற்றி அவரால் யோசித்துப் பார்க்கமுடியுமா? கொடுத்த கடன் திரும்ப வரவில்லை என்றால், நடவடிக்கைக்குள்ளாக நேரிடுமே என்ற பயத்தில் வங்கி மேனேஜர்கள் ரிஸ்க் எடுக்க முன் வருவதில்லை'' என்றார்.

''இந்தப் பிரச்னைக்கு என்ன தீர்வு?''

வோட்டு அரசியலுக்காகக் கடன் ரத்து என்று அறிவித்து, மக்கள் மத்தியில் வாங்கின கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியது கட்டாயமில்லை என்ற கலாசாரத்தை ஏற்படுத்தி விட்டார்கள்.

அதேசமயம், வாராக் கடன்களுக்காக வங்கி மேனேஜர்கள் மீது நடவடிக்கை எடுப்பதும் அதிகமாகி இருக்கிறது. ''நியாயமான விதிமுறைகளின்படி, நேர்மையாகச் செயல்பட்டு வழங்கப்படும் கல்விக்கடன்கள், திரும்பி வராமல் போனால், வங்கி மேனேஜர்கள் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்ற ஆரோக்கியமான சூழ்நிலை ஏற்பட்டால், தகுதியானவர்களுக்குக் கல்விக் கடன்கள் வழங்க வங்கி மேனேஜர்கள் தயங்க மாட்டார்கள்!'' என்கிறார் இந்தியன் வங்கியின் முன்னாள் தலைவரான டி.எஸ்.ராகவன். ○



“பெருமாளே.

அதிரஸம், வடை பாயாசம்...
எல்லாம் பண்ணி வெச்சிருக்கேன்...







'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்
விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு-' -குறள்.

இந்தியாவிலேயே இருக்கும் இந்தியர்களைக் காட்டிலும், வெளிநாட்டுக்குக் குடியேறின முதல் தலைமுறை இந்தியர்களுக்கு, இந்தியாவிலிருந்து வருகை தரும் இந்தியர்களிடம், தாங்கள் எப்படி நூறு சதவிகிதம் இந்தியப் பண்பாட்டைப் பேணி வரும் இந்தியர்களாக இருக்கின்றோம் என்று காட்டிக் கொள்ளவேண்டும் என்ற ஆசை எப்போதுமே உண்டு.

1984-ல் போலந்து வார்ஸாவிலிருந்து நான் கானடா சென்றிருந்தேன். எனக்குப் பல சுவாரஸ்யமான அனுபவங்கள். கானடியப் பல்கலைக்கழகங்களில் சொற்பொழிவாற்றுவதற்கான வாய்ப்பு அப்போது எனக்குக் கிடைத்தது.

டொரண்டோ பல்கலைக்கழகம் போனபோது, சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்திருந்த பேராசிரியர் டாக்டர் ஹார்ட்ஸ், என்னை ஓர் இந்தியப் பேராசிரியரிடம் அழைத்துச் சென்றார். அவருக்கு ஐம்பது வயதிருக்கக்கூடும்.


'நீங்களும் தென்னிந்தியர்தான் என்று நான் அவரிடம் நேற்று சொன்னபோது, டாக்டர் வெங்கட் உங்கள் பேச்சைக் கேட்க மிகுந்த ஆவலாக இருப்பதாகத் தெரிவித்தார். கூட்டம் முடிந்ததும் உங்களைத் தம் வீட்டுக்கு மதிய உணவு சாப்பிட அழைத்துக்கொண்டு போகிறார். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?' என்றார் டாக்டர் ஹார்ட்ஸ்.

'ஓ! யா! உங்கள் பெயரைப் பார்த்தால் ஸ்ரீவைஷ்ணவப் பெயராகத் தெரிகிறது. இந்தியாவிலிருந்து வந்திருக்கிறீர்கள். க்ரேட்! என் மனைவிக்கு நம் பண்பாடு என்றால் உயிர்... நீங்கள் என் வீட்டுக்கு விருந்துண்ண வந்தால் சந்தோஷமாக இருக்கும். ஒரு வாரமாக, நீங்கள் வருகின்றீர்கள் என்று செய்தி வந்ததிலிருந்து, உங்களை நானும் என் மனைவியும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்...' என்றார் டாக்டர் வெங்கட்.

நான் போலந்து வார்ஸாவிலிருந்து வருகிறேன் என்று சொல்லி, அவர் சந்தோஷத்துக்குத் தடையாக இருக்க விரும்பவில்லை. பதில் கூறாமல் புன்னகை செய்தேன். அவர் வீட்டில்

இந்திரா பார்த்தசாரதி

ஏர்த்து அனுப்பியிருக்கார்!"



விருந்துண்ண ஸ்ரீ வைஷ்ணவனாக இருந்தால்தான் தகுதியா என்று கேட்கலாமென்று நினைத்தேன்; கேட்கவில்லை.

'நீங்கள் எந்தத் தலைப்பில் இன்று பேசுகிறீர்கள்?' என்றார் டாக்டர் வெங்கட்.

'மகாகவி பாரதியார் பற்றி..'

'ஓ! ஐ வுட் லவ் இட்'

'டாக்டர் வெங்கட், டெமொகிராஃபியில் அத்தாரிட்டி' என்றார் டாக்டர் ஹார்ட்ஸ்.

அவர் சொன்னதை மௌனப் புன்னகையுடன் ஏற்றுக்கொண்டார் டாக்டர் வெங்கட்.

நாங்கள் கூட்டம் நடக்கவிருந்த 'ஹாலு'க்குப் போனோம்.

'ஹால்' என்று சொல்லமுடியாது. ஒரு வகுப்பறை. ஐம்பது பேர் உட்கார்ந்திருந் தார்கள்.

'இவர்தான் பேராசிரியர் பாஷம், இவர் தலைமையில்தான் பேசப் போகிறீர்கள்' என்றார் டாக்டர் ஹார்ட்ஸ்.

நான் இதை எதிர்பார்க்கவில்லை. 'தி வொண்டர் தட் வாஸ் இண்டியா' ('பிரமிக்கத்தக்கதாக இருந்த இந்தியா') என்ற அந்த அற்புதமான நூலை எழுதியிருக்கும் பேராசிரியர் பாஷம், டொரண்டோவிலிருந்தார் என்று எனக்குத் தெரியாது.

அவருக்கு எழுபத்தைந்து வயதுக்கு மேல் இருக்கும்.

'தி வொண்டர் தட் வாஸ் இண்டியா?' என்று கேட்டுக்கொண்டே அவர் கைகளை நான் குலுக்கினேன்.

'எஸ். தட் வாஸ்..' என்று 'வாஸி'ல் ('இருந்த'வில்) அழுத்தம் கொடுத்து, ஒரு மர்மப் புன்னகை யுடன் சொன்னார் டாக்டர் பாஷம்.

நான் பாரதியைப் பற்றி ஒருமணி நேரம் பேசினேன். டாக்டர் வெங்கட்டின் கண்கள் மூடியிருந் தன. தூங்கிவிட்டாரா அல்லது, ஸ்ரீவைஷ் ணவர் என்பதால் 'அறிதுயிலா' என்று எனக்குப் புரியவில்லை.

பாரதத்தின் தென்கோடியிலிருந்த பாரதிக்கு, அந்தக் காலத்திலேயே சர்வதேச அரசியல் அத்துபடியாக இருந்தது என்பது பலருக்கு ஆச்சர்யமாக இருந்தது. அதைப் பற்றிச் சிறிது நேரம் விவாதம் நிகழ்ந்தது. பாரதியைப் பற்றி அரவிந்தர் ஏதாவது சொல்லியிருக்காரா என்று டாக்டர் பாஷம் கேட்டார். 'எனக்குத் தெரிந்தவரை இல்லை, ஆனால், அரவிந்தருக்குத் தமிழ் பக்திப் பாடல்களைப் பற்றிச் சொன்னவர் பாரதி என்று தெரிகிறது' என்றேன்.

டாக்டர் வெங்கட்டின் கண்கள் நான் பேசி முடித்தவுடன் திறந்தன. ஏதாவது கேட்பார் என்று எதிர்பார்த்தேன். ஒன்றும் கேட்கவில்லை.

வெளியே பனி பெய்துகொண்டிருந் தது. என்னை இந்தியாவிலிருந்து வந்தவனாகப் பாவித்துக்கொண்டு, அவர் கனடிய பனிக் காலத்தைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார்.

இளமைபாலம் 4

அவர் வீட்டைச் சென்றடைந்ததும், அவர் மகள்- பதினெட்டு வயதிருக்கும்- ஜீன்ஸ், டீஷர்ட் - கதவைத் திறந்து கொண்டே, 'ஹாய்-டாட்' என்றாள்.

'என் டாட்டர்.. நிவேதிதா.. மாமா இந்தியாவிலேந்து வந்திருக்கார், நமஸ்காரம் பண்ணும்மா' என்றார் வெங்கட் தமிழில்.

நிவேதிதா, ஒன்றும் புரியாமல் என்னையும் அவளுடைய அப்பாவையும் மாறி மாறிப் பார்த்தாள். பிறகு, 'ஹாய்' என்று கைக் கூப்பினாள்.

உள்ளே 'ஹாலி'ல் ஒலித்துக்கொண்டிருந்த பாப் இசை திடீரென்று நின்று, எம்.எஸ்-ஸின் விஷ்ணு சஹஸ்ரநாமம் காதில் தேனாகப் பாய்ந்தது.

உள்ளே நுழைந்ததும் ஊதுவத்தி மணம்...



டாக்டர் வெங்கட்டின் மனைவ 'வாங்கோ, வாங்கோ' என்று வரவேற்ற பட்டுப்புடைவையில். மைலாப்பூரி இருக்கிறோமோ என்ற பிரமை உண்ட கும்படி நகை அலங்காரம். நிவேதிதாவே ஆச்சர்யத்துடன் அம்மாவைப் பார்த்தா என்று எனக்குத் தோன்றிற்று.

'போன வாரத்திலேர்ந்து இவ சொல்லிண்டிருக்கார், நீங்க இந்திய விலேந்து வரப் போறேள்னு.. இ ருக்கு ரொம்ப சந்தோஷம்' என்றா அவர்.

'அப்படியா?' என்றேன் நான்.

'கை கால் அலம்பிண்டு வாங்கோ சாப்பிடலாம்' என்றார் அவர் மனைவி.

ஸுட் போட்டுக்கொண்டிருந்த என க்கு கை கால் அலம்பிப்பது எப்படி என்று புரியவில்லை.

'வேஷ்டி தரவா?' என்றார் அவ மனைவி.

'வேஷ்டியா?'


'இந்தியாவிலிருந்து வந்திருக்கேள் ஸ்ரீவைஷ்ணவாள். இவரோட அப்பா வோட திதின்னு பாத்து இன்னிக்கு நீங்க வந்திருக்கிறது ரொம்ப விசேஷம்..நாங்க கொடுத்து வெச்சிருக்கோம். அதிர்ஸம், வடை, பாயஸம் எல்லாம் பண்ணி வெ சிருக்கேன். மூணு வருஷம் கழிச்ச இப்படி நேர்ந்திருக்கு. பெருமாளே பார்த்து, ஸ்ரீவைஷ்ணவாளா பார்த்து, இந்தியாவிலிருந்து அனுப்பிச்சு வெச் சிருக்கார்...என்னத்தைச் சொல்லறது?' என்றார் அவர் மனைவி.

விஷ்ணு சஹஸ்ரநாமம் திடீரென்று நின்றது. வெங்கட்டும் அவர் மனைவியும் ஒரே சமயத்தில் கோபத்துடன் மாடியை நோக்கினார்கள்.

பாப் இசை மறுபடியும் ஒலிக்கத் தொடங்கியது.

(அடுத்த வாரம்: சமூகம்)

ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!



ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் தீமை உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திர முண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் மறையகம் பாபா. உடனே அணுகவேண்டிய முகவரி:

அருள்

மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட், நெ.3, அப்துல் ரசாக் தெரு, நூர்ஜஹான் தியேட்டர் எதிரில் (தற்போது ராஜ் தியேட்டர் என்று மாற்றப்பட்டுள்ளது), சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
☎ : 2435 1190, 2433 2047. செல்போன் : 98404 11551

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சனை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சனைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.

ஆல்ஃபா மைண்ட் பவர்

ஆழ்மனதின் சக்தி!

ALPHA™ MIND POWER

"Unwind Your Mind & Empower Yourself"

மனோ சக்தி நிபுணர் டாக்டர் விஜயலக்ஷ்மி பந்தையன்
அளிக்கும் ஒரு நாள் இந்தியாவின் பழம்பெரும் சித்தர்களின் சக்தியுடன் கூடிய ஒரு நாள் ஆல்ஃபா தியானப் பயிற்சி



- மன அழுத்தம் குறைக்க
- பண வரவை அதிகரிக்க
- உறவுகளை சீர்படுத்த
- குடும்பத்தில் அன்பு நிலவச் செய்ய
- நோய் தீர்க்க, நிம்மதியாகத் தூங்க
- பரீட்சையில் அதிக மார்க் வாங்க
- மகிழ்ச்சியுடன், தன்னம்பிக்கையுடன், வெற்றியுடன் வாழ

தபால் மூலம் கற்கலாம்
ஆல்ஃபா மைண்ட் பவர்
ஆடியோ சிடி
மற்றும் பயிற்சிப்
புத்தகம் ஆங்கிலம்
மற்றும் தமிழில் தபால்
மூலம் பெறலாம்.

ஒரு நாள் பயிற்சி மட்டுமே!

ஆர்.எஸ்.ஆர்.பிளாசா, 3வது தளம், 50, 51 ஆற்காடு ரோடு, சாலிகிராமம், சென்னை - 600 093. இந்தியா ஃபோன்:+91-44-23760007, 23768555 மொபைல் : 98414 02000, 98412 72146
e-mail : amp@alphamindpower.net www.alphamindpower.net

ஆல்ஃபா தியான அனுபவம் இதோ ஒரு கடிதம்

என்னுடைய அண்ணன் மகளுக்கு கேன்சர் என்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். அதற்கான பரிசோதனை செய்வதற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். நான் ஆல்ஃபா தியானத்தின் மூலம், நடக்கவிருக்கும் பரிசோதனையில் அவளுக்கு கேன்சர் இல்லை என்று ரிசல்ட் இருப்பதுபோல் தியானம் தொடர்ந்து செய்து வந்தேன். என்ன ஆச்சர்யம்! அவளுக்குக் கேன்சர் இல்லை என்று ரிசல்ட் வந்தது. ஆல்ஃபாவிற்கு நன்றி! குருஜிக்கு நன்றி!

– கல்யாணி, திருச்சி

மே 4, மதியம் 12.05 மணிக்கு பொதிகை டி.வி.யில் காணத்தவறாதீர்கள்!
மாதம் தோறும் ஒளிபரப்பைக் கண்டு பயன்பெறுங்கள்.

அடுத்து வரும் பயிற்சி வகுப்புகள்

கோவை : 9.5.10 பாண்டிச்சேரி : 16.5.10
சென்னை : 23.5.10

ஒரே ஷாட்... ஒரே கதை... ஓஹோன்னு வாழ்க்கை!

"சினிமா இண்டஸ்ட்ரியில் கோலோச்சுவதற்குத் திரைப்படக் கல்லூரியில் படிப்பதோடு மட்டுமில்லாது அசிஸ்டெண்ட், அசோஸியேட்டாக கண்டிப்பாகப் பணியாற்ற வேண்டும். இந்த விஷயம் பக்குவங்களையும், நிறையத் தொடர்புகளையும் பெற்றுத் தரும். அனைத்து மொழிகளிலும் உள்ள சிறந்த படங்களையும் தினம் ஒரு படம் என்ற விகிதத்தில் வருடத்தின் 365 நாட்களும் பார்க்க வேண்டும். இது சினிமாவைப் புரிந்துகொள்வதற்கு அடிப்படையான அம்சம்'' என்கிறார் 'விண்ணைத்தாண்டி வருவாயா' படத்தில், நுட்பமான காதலை கேமிராவில் அழகாகப் படம்பிடித்த மனோஜ் பரமஹம்சா.



* மனோஜ் பரமஹம்சா

"ஒரு மாணவன் திரைப்படக் கல்லூரியில் படிக்க விரும்பினால், பத்தாவது படிக்கும்போதே அதற்காகத் திட்டமிட வேண்டும். டைரக்ஷன், சவுண்ட் ரிக்கார்டிங், எடிட்டிங், ஒளிப்பதிவு, ஃபிலிம் ப்ராஸஸிங் (Film Processing)... என்ற ஐந்து பாடப் பிரிவுகளில் சென்னை தரமணியில் உள்ள திரைப்படக் கல்லூரியில் DFT பட்டம் வழங்கப்படுகிறது. இதில் டைரக்ஷன் தவிர மற்ற பிரிவுகளில் சேர்வதற்கு ப்ளஸ்டுதான் கல்வித் தகுதி. ப்ளஸ்டுவில் இயற்பியல், கணிதம், வேதியியல் பிரிவுகளில் அறுபது சதவிகிதத்துக்கு மேல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். டைரக்ஷனுக்கு பட்டப் படிப்பில் அறுபது சதவிகிதத்துக்கு மேல் பெற்றிருக்க வேண்டும்.

ஃபிகர், காபி ஷாப், க்ளாஸைக் கட் அடிப்பது என்று... கல்லூரி கலாட்டாக்களைக் கற்பனை செய்து கொண்டு திரைப்படக் கல்லூரிக்குள் நுழைந்தால், மாணவர்கள் ஏமாந்துதான் போவார்கள். மற்ற கலைக் கல்லூரிகளுக்கு உரிய முகங்கள் எதுவும் திரைப்படக் கல்லூரி கேம்பஸ்ஸுக்குள் இருக்காது. ஒவ்வொரு பிரிவுக்கும் பதினான்கு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவதால், ஒவ்வொரு மாணவரும் ஆசிரியரின் நேரடிப் பார்வையில் இருப்போம்.

திரைப்படக் கல்லூரியில் மூன்றாண்டுகள் படிப்பது கிட்டத்தட்ட குருகுலவாசம் மாதிரி. இந்தக் குருகுல வாசத்தில் நான் ஒளிப்பதிவு பயின்றதால்தான் இரண்டு படங்களிலேயே பெயர் பெற முடிந்திருக்கிறது" என்கிறார் மனோஜ்.

"சினிமோட்டோஃகிராபி படிக்கும் மாணவர்களுக்கு இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் கொடுக்கப்படும் பயிற்சி மிக முக்கியமானது. இரண்டாம் ஆண்டில் மாண வர்களிடம் கேமிராவைக் கொடுத்து ஒரே ஷாட்டில் ஒரு கதையைச் சொல்லச் சொல்வார்கள். இதற்கு 'மிசான்சி' (Missence) என்று பெயர். மறுநாள் இதே கதையைப் பல்வேறு ஷாட்டுகளில் சொல்ல வேண்டும். இதற்கு ப்ரேக்-டவுன் என்று பெயர்.

மூன்றாமாண்டு மாணவர்கள் குறும்படங்கள் இயக்க வேண்டும். இந்தக் குறும்படங்களுக்குத் தற்சமயம் தேசிய அளவிலான விருதுகள் கிடைக்கின்றன. மணிகண்டன் என்ற மாணவரோடு இணைந்து நான் இயக்கிய அனாமிகா என்ற குறும்படமும், 'ஈரம்' பட இயக்குநர் அறிவழகன் இயக்கிய 'ஒரு மனிதன் ஒரு புதினம்' என்ற குறும்படமும் 2001-ம் ஆண்டின் மிகச் சிறந்த குறும்படங்களாகத் தேர்வாகின'' என்கிற மனோஜ்,

''அரசு திரைப்படக் கல்லூரியில் இடம் கிடைக்காத சூழலில் - எல்.வி.பிரசாத், ராஜீவ்மேனன் ஃபிலிம் இன்ஸ்டிடியூட் போன்ற தனியார் திரைப்படக் கல்லூரி களில் மாணவர்கள் சேர முயற்சிக்கலாம். தற்சமயம் பி.எஸ்ஸி., விஷுவல் கம்யூனிகேஷன் (Visual Communication) என்ற கோர்ஸ் சென்னையில் பல கலை அறிவியல் கல்லூரிகளில் நடத்தப்படுகிறது. இந்தக் கோர்ஸ் முடிப்பவர்கள் பத்து சதவிகிதத்தினர் மட்டுமே ஃபீல்டில் பணியாற்றும் திறமை பெற்றவர்களாக இருக்கிறார்கள். காரணம், இந்தக் கோர்ஸின் பாடங்கள் ஆழமாக இல்லாததுதான். எனவே, விஷுவல் கம்யூனி கேஷன் படிக்கும் மாணவர்கள், படிக்கும் காலத்திலேயே நிறைய விஷுவல் ஒர்க் ஷாப், கருத்தரங்குகள் போன்ற வற்றில் பங்குபெற வேண்டும். இதன் மூலம் இன்னும் ஆழமாகப் பாடத்தைப் புரிந்துகொண்டு ஃபீல்டில் பிரகா சிக்க முடியும்'' என்கிறார்.

இன்று நவீன டிஜிட்டல் தொழில்நுட்பம் பழைய 16MM, 35MM கேமிராவுக்கு மீண்டும் புத்துயிர் அளித் துள்ளது. உதாரணமாக 16MM கேமிராவில் ப்டத்தை முழு வதும் எடுத்துவிட்டு, 'டிஜிட்டல் இன்டர்மீடியட்' என்ற நவீன முறையில் சினிமாஸ் கோப்பில் மாற்றிவிடலாம். பார்ப்பவர்களுக்குப் பெரிய வித்தியாசம் எதுவும் தெரி யாது. 'சுப்பிரமணியபுரம்' இது போன்று எடுக்கப்பட்டதுதான். குறைந்த பட்ஜெட்டில் சிறந்த படங்கள் தயாரிக்க நல்ல வாய்ப்பைத் தரும் டெக் னாலஜி இது.

ரெட் ஒன் என்ற புதிய வகை கேமிராவைப் பயன் படுத்தி நாமே தனியாக ஒரு படத்தை எடுத்துவிட முடியும்.

ARI D21 என்ற கேமிரா வில், படம்பிடித்ததை உட னுக்குடன் பார்க்க முடியும். தவறுகள் இருந்தாலும் உடனே திருத்திக் கொள்ள முடியும். விளம்பரங்களுக்கு மிகவும் உதவும் கேமிரா இது.

I Max என்னும் கேமிரா மிக மிக ஃபாஸ்ட் மூவ் மெண்ட்ஸையும் படம்பிடிக் கக்கூடியது. இந்தக் கேமிரா வில் படம்பிடித்ததைத் திரை யிட, அதற்கெனப் பிரத்யேக I Max தியேட்டர்கள் தேவை. தற்சமயம் மும்பையிலும், ஹைதராபாத்திலும் இது போன்ற தியேட்டர்கள் உள் ளன. ஹாலிவுட்டில் மட்டும் பயன்படுத்தப்படும் I max தொழில்நுட்பம் எதிர்காலத்தில் தமிழ் சினிமாவிலும் வரும்'' என்கிற மனோஜின் கண் களில் நம்பிக்கை பரவுகிறது.

- ராகவ்குமார்



பையா

எத்தனையோ காதல் கதைகளைப் பார்த்துப் பழக்கப்பட்ட ரசிகர்களுக்கு, காரைச் சுற்றிப் பின்னப்பட்ட காதல் கதை கொஞ்சம் புதுசுதான். ஒரு கறுப்புக் கலர் லேன்சர் காரில் கார்த்தி, தமன்னா... இவர்களை இரண்டு பொலேரோ கார்களில் துரத்தும் குண்டு குண்டான வில்லன்கள். முதல்பாதி ஐ.பி.எல் மேட்ச்; இரண்டாம் பாதி டெஸ்ட் கிரிக்கெட்டின் டொக் டொக்...

● அழுத்தமான கேரக்டரில் பார்த்துப் பழக்கப்பட்ட கார்த்தியை, ஜீன்ஸ், டீ ஷர்ட்டோடு அழகாகப் பார்க்கலாம். சண்டைக் காட்சிகளில் லிங்குசாமி பட ஹீரோக்களுக்கே உரித்தான ஆக்ரோஷம்.

● தகதக தங்க தமன்னா. பாடல் காட்சிகளில் பளிங்குபோல் தெரிகிறார். மத்தபடி நெம்பர் ஒன் இடத்தைத் தக்க வைக்க நோ ப்ளீஸ்.

● நெடுஞ்சாலையில் பயணிக்கும் லேன்சர் கார் கண்ணாடியையும் தாண்டி, கூலிங்கிளாஸ் போடுகிறது மதியின் கேமரா.

● படத்தை ஓர் அடி தூக்கி நிறுத்துகிறது யுவனின் இசை. நா.முத்துக்குமாரின் வரியில் ஓர் 'அடடா அடடா அட மழடா அழகா சிரிச்சா அடை மழடா' பாடல் கொளுத்தும் வெயிலையும் தாண்டி தியேட்டருக்குள் சோவென மழை பெய்தது போல் உணர்வு.

● ஹீரோ ஹீரோயினைப் பார்த்ததும் காதல் வருவதெல்லாம் அரதப்பழசான அப்பத்தா காலத்துப் புளிக்கப்போன திரைக்கதை.

● கதாநாயகியைக் கண்டுபிடிக்க வரும் தாதா கும்பல், நான்வெஜ் சாப்பிடுவதிலேயே குறியாக இருக்கிறது.

● படத்தின் ஆரம்பத்திலேயே மும்பைக்குப் புறப்படும் கார் பயணம், இடைவேளையிலாவது போய்ச் சேருமா எனப் பார்த்தால் ம்...ஹூம். இரண்டாம் பாதியிலும் இழுவை மிட்டாய்தான்!

\- பி.ஆர்.ஆர்.

'வெயில்' என்றொரு பாச ரச படத்தைக் கொடுத்த வசந்தபாலனின் மற்றும் ஒரு பெயர் சொல்லும் படைப்பு 'அங்காடித் தெரு'. மெழுகு பொம்மைகளுக்கும் வண்ண வண்ணப் பட்டுகளுக்குமிடையே சருகாகிக் கிடக்கும் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பதிவு.

❖ புதுமுகம் மகேஸ், நடிப்பில் மனசு முழுக்க அப்பிக்கொள்கிறார். துள்ளல், விம்மல், விசும்பல், அழுகை... ஆத்தாடியோவ் அஞ்சலி காட்சிக்குக் காட்சி கலைடாஸ்கோப். என்னாகுமோ, ஏதாகுமோ என்று க்ளைமாக்ஸ் காட்சியில் பதறிக்கிடக்கையில், கனமான இதயங்களையும் ரணமாக்கிக் கண்களோரம் இரண்டு சொட்டு கண்ணீர் விட வைக்கும் அஞ்சலியின் நடிப்பு அபாரம். ❖ இயக்குனர் வெங்கடேஷ், பிளாக் பாண்டி, பழ.கருப்பையா, குப்பை பொறுக்கும் குள்ள மனிதன், பாய், துணிக்கடை தொழிலாளர்கள் என்று அத்தனை புதுமுகங்களும் மனத்தை விட்டு நீங்காது நிலைக்கின்றனர்.

❖ எடுத்துக்கொண்ட கருவைக் கச்சிதமாகச் செதுக்கியிருக்கிறார் வசந்தபாலன். கண்ணாடியை வெட்டும்போது எவ்வளவு கவனம் செலுத்துவோமோ, அவ்வளவு கவனமாகத் திரைக்கதையைச் செதுக்கியிருக்கிறார். ❖ திருநெல்வேலி மண்ணின் வட்டார மொழியைக் கொஞ்சமும் சொதப்பாமல் கையாண்டிருப்பது படத்தின் மண்மணக்கும் மல்லிகைப் பதிவு. ❖ பனைமரக் காட்டையும், தி.நகர் மக்கள் நெரிசலையும் ஒரே தீவிரத்துடன் அள்ளிக் காண்பிக்கிறது ரிச்சர்டு எம்.நாதனின் கேமரா. ❖ ஜெயமோகன் உரையாடல், நா.முத்துகுமார் கவிதை வரிகள் என அத்தனையும் ஆவாரம்பூ. ❖சில இடங்களில்இசை கதையோடு கைகோக்கிறது. பிற இடங்களில் 'லொட லொட'. ❖ இதுவரை இந்திய சினிமா தொட்டிராத கதைக்களம். இனி யதார்த்த தமிழ் சினிமாக்கள் முந்தும் என்பதற்கு அறிகுறி இப்படம்.

❖ வசந்தபாலனும், அஞ்சலியும் அவரவர் வீட்டு அலமாரியை விரிவு படுத்தி வைக்கவும், அள்ளப் போகும் விருதுகளுக்காக.

- பி.ஆர்.குமார்



நூல் அறிமுகம்

மந்திரச் சொற்கள்!







உன்னோடு ஒரு நிமிஷம்: ஆசிரியர்: வெ.இறையன்பு, வெளியீடு: விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை- 600 002, விலை ரூ.75/-

மிளகாயைவிடச் சிறுத்திருந்தாலும் மிளகின் காரம் வீரியமாகவும் இருக்கும்; ஜீரணத்தையும் சரிப்படுத்தும். அப்படி அமைந்த சின்னச் சின்னக் கட்டுரைகள், வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்வது எப்படி என்று ஒரு கேள்வியை எழுப்பிக்கொண்டு, படிக்க ஆரம்பித்தால் - ஒவ்வொரு பக்கமும் நம்மில் ஒரு பதிவை உண்டாக்கும்; நம்முடைய எண்ணங்களை, மேம்படுத்தும் ஆற்றலை பரிமளிக்கச் செய்யும். இவை இளைஞர்கள் பின்பற்ற வேண்டிய, பெரியவர்கள் அவசியம் அறிந்திருக்க வேண்டிய மந்திரச் சொற்கள்.

நோர்வே: ஆசிரியர் தமிழ்ச் செல்வன், வெளியீடு: பூர்ணிமா பதிப்பகம், 6/23, மணியக் காரத் தெரு, பென்னாகரம் - 628 002, விலை ரூ.50/-

நோர்வே நாட்டிலுள்ள ஃபெர்கன் பல்கலைக் கழகத்தில் ஆய்வு மாணவராகச் சென்ற ஆசிரியர், தம்முடைய அனுபவங்களை விவரிக்கின்ற அழகு நூலெங்கும் பனிச்சிதறுகிறது. இங்கு வாழும் மக்களின் மொழிப்பற்று, கருத்துச் சுதந்திரம், பாடம் போதிக்கும் முறை, வாழ்க்கை நிலை, தொழில்கள், இயற்கையின் வசீகரம், மக்களின் குணம்... என்று, போகிற போக்கில் வாசகனின் மனத்தில் பதியனிடுகிற லாவகத்தை புத்தகமெங்கும் காண முடிகிறது.

கிருஷ்ணன் நம்பி ஆக்கங்கள்: தொகுப்பாசிரியர்: ராஜ மார்த்தாண்டன், வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி.சாலை, நாகர்கோவில் விலை ரூ.350/-

சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், இலக்கியக் குறிப்புகள், குழந்தைப் பாடல்கள்,... என எழுத்தின் பல்வேறு வடிவங்களிலும், ஆளுமை செலுத்தியவர் கிருஷ்ணன் நம்பி. தம் நாற்பத்து நான்காம் வயதிலேயே மறைந்துவிட்ட அவரது எழுத்துகளின் ஒட்டு மொத்தத் தொகுப்பாக வெளிவந்துள்ள நூல் இது. பெரிய மனிதரின் சின்ன புத்தியைக் காட்டும் 'கள்ள நாணயம்' கதையானாலும் சரி; 'பூவிலிருந்து தேனை எடுப்பது திருட்டல்லவா?' என்று குழந்தை வழியே கேள்வி எழுப்பும் பாட்டானாலும் சரி; 'சுருக்'கென்று தைக்கின்றன வார்த்தைகள்.

- ராகவன்

பண்பாட்டுக் கல்வி!



அருள்வாக்கு

நம்முடைய புராதன தர்மங்களைக் காப்பாற்ற நாமேதான் ஆனதைச் செய்ய வேண்டும். எனவே, உங்களில் கற்றறிந்து, அனேக இடங்களில் நல்ல பதவிகள் வகித்து, ஓரளவு செல்வமும் செல்வாக்கும் பெற்று, தற்போது நிறைய ஸாவகாசம் பெற்றுள்ள பென்ஷனர்களான பெரியோர்களே, இந்த விஷயத்தில் தங்களால் இயன்ற பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஸ்கூல் பாடத்தை விடாமல், அதோடேயே வேதாப்யாஸத்துக்கு உரியவர்களுக்கு வேதத்தையும், மற்றவர்களுக்கு இதர புராதன சாஸ்திரங்கள், கலைகள் இவற்றையும் சேர்த்துக் கற்றுக்கொடுப்பதற்காக ப்ரைவேட் ஸ்கூல்கள் ஆரம்பிக்கலாம். தினமும் அரை மணி, ஒரு மணி ஸ்கூல் டயத்தை நீட்டி, லீவ் நாட்களையும் கொஞ்சம் குறைத்துக்கொண்டால், இந்த மாதிரி ரெகுலர் சிலபஸோடு கூடவே சாஸ்திரங்கள், தேசியக் கலைகள் இவற்றையும் சொல்லிக் கொடுக்க முடியும். இப்படி பசங்களைத் தயார்பண்ணிக் கால விரயமில்லாமல் 'மெட்ரிக்' தேர்வுக்கு அனுப்புவதாக ஏற்பாடு செய்தால், அனேகப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இப்படிப்பட்ட ஸ்கூல்களில் சேர்க்க முன் வருவார்கள்.

பென்ஷன்தாரர்கள் மாத்திரந்தான் இதைச் செய்ய வேண்டும் என்பதில்லை. எல்லோரும் சேர்ந்து செய்யலாம். மனப்பூர்வமாக ஈடுபட்டு, 'பிற்பாடு டிகிரி, டிப்ளோமாவுக்கு ஹானியில்லாமலே, நம்முடைய புராதன சாஸ்திரங்கள், பக்தி நூல்கள், நீதி நூல்கள், கலைகள் ஆகியவை அழிந்து போகாமல் சொல்லிக் கொடுக்கிறோம்'' என்று பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொன்னால், அவர்கள் நிச்சயம் தங்கள் பிள்ளைகளை இப்பள்ளிக்கூடங்களில் சேர்ப்பார்கள். நம்முடைய தொன்றுதொட்ட மகத்தான நாகரிகத்துக்கு வாரிசாக வருங்காலப் பிரஜைகளை உருவாக்குகிற பேருபகாரம் இது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

மெல்லினத் தொடர்கதை

ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள் மனோகரி. அவளுக்கு மிகவும் விருப்பமான பன்னீர்ப் பூக்கள் தரையெங்கும் உதிர்ந்து கிடந்தன. அலுவலகத்தின் சந்தடியையும் மீறி அந்தப் பூக்களில் மனத்தைப் பறி கொடுத்தாள். வீட்டில்கூட முன்பக்கம் நிறைய இடமிருக்கிறது. அதில் பன்னீர்ப் பூ மரம் ஒன்றை வைக்கலாம்.



உள்ளம்

ஆனால், மாமாவுக்குப் பன்னீர்ப் பூ வாசனை ஒத்துக்கொள்ளாது. அவருக்கு கத்தரிக்காய்த் துவையல் பிடிக்கும். ஆனால், கிருஷ்ண பாரதிக்குப் பிடிக்காது. இப்படியே மற்றவர்களுக்காக மனத்தைச் சுருக்கிக் கொள்ள வேண்டியதிருக்கிறது. கத்தரிக்காய்த் துவையல் சாப்பிட்டு எவ்வளவோ காலமாகிவிட்டது. அம்மா கத்தரிக்காய்த் துவையல் அரைத்தால் ருசியாக இருக்கும். ஆனால், துவையல் சாப்பிடுவதற்காக திருநெல்வேலிக்கா போக முடியும்? திருநெல்வேலியில் என்னதான் இல்லை? அம்மா, அப்பா, தம்பி, தங்கை எல்லோரும் இருக்கிறார்கள். பன்னீர்ப் பூ மரத்தில் ஒரு காகம் வந்து உட்கார்ந்தது. அலகை மரக் கிளையில் தேய்த்தது.

''என்ன மனோகரி மரத்தையே பார்த்துண்டு இருக்கறே?''

திரும்பிப் பார்த்தாள். லெட்சுமி நின்று கொண்டிருந்தாள்.

''எவ்வளவு பூ உதிர்ந்து கிடக்குது பாரு'' என்றாள் மனோகரி. நாசி பசபசத்தது. தும்மல் வரும் போலிருந்தது.

வண்ணநிலவன்



''உக்கார வரலை... அந்த மீனாட்சி டிரேடர்ஸ் ஃபைலைக் குடு... சூப்பிரண்ட் கேட்கிறார்'' என்றாள் லெட்சுமி. நின்று கொண்டே பேசினாள். மனோகரி ஸீட்டிலிருந்து எழுந்து பக்கத்திலிருந்த பீரோவைத் திறந்தாள். பீரோவுக்குள்ளிருந்து பெயிண்டும், காகிதமும் கலவையாக மணம் வீசியது. அந்த வாசனையை நுகர்ந்து கொண்டே ஃபைலைத் தேடினாள். ஃபைல் வழக்கமாக இருக்கிற இடத்தில் இல்லை. ஒவ்வோர் அறையாகத் தேடினாள்.

அட்டெண்டர் தாண்டவன் லெட்சுமியை நோக்கி வந்தான். அவளிடம், ''ஐயா



இட்டாரச் சொன்னாரு...'' என்றான். பீரோ கத விடுக்கினூடே யாரென்று பார்த்தாள் மனோகரி. அவளைப் பார்த்துத் தாண்டவன் சிரித்தான். அவனுடைய தெற்றுப் பற்கள் வெளியே தெரிந்தன.

''ஃபைலை எடுத்து வை மனோகரி. அதுக்குள்ளே சூப்பிரண்ட் கூப்பிட்டுட்டார்'' என்று சொல்லிக்கொண்டே, லெட்சுமி தாண்டவனுடன் சென்றாள். கீழ் அறையில் தேடும்போதே, ஃபைல் கிடைக்காது என்று மனோகரிக்குத் தோன்றியது. எங்கோ காகம் கத்தியது. ஆஃபீஸின் கலவையான சளம்பல் சத்தத்திலும், அதன் கரைச்சல் கேட்டது. மேஜை இழுப்பறைகளைத் திறந்து காகிதக் கற்றைகளைப் புரட்டினாள். மேஜையின் மீது அடுக்கியிருந்த கம்ப்யூட்டர் பிரிண்ட் அவுட் கற்றையிலும் ஃபைல் அகப்படவில்லை. அது சற்றுக் கனமான ஃபைல். எங்கேயிருந்தாலும் பளிச்சென்று தெரிந்துவிடும். எங்கேதான் போயிருக்கும்? சூப்பிரண்டுக்குத் தெரிந்தால் குதிப்பாரே.

ஏற்கெனவே அவருக்கு ரத்தக் கொதிப்பு உண்டு. ஃபைலைக் காணவில்லை என்றால் யாருக்குத்தான் ஆத்திரம் வராது? தினசரி அவரிடம் எதற்காகவாவது வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒருவேளை ஸ்ரீதர் எடுத்துச் சென்றிருப்பாரோ? லெட்சுமியும், ஸ்ரீதரும்தான் அவளுடைய டேபிளுக்கு அடிக்கடி வருகிறவர்கள். ஸ்ரீதர் அவளிடம் பேசுவதற்காகவே வருகிறவன். இப்போது ஃபைலைத் தேடி அவனுடைய ஸீட்டுக்குப் போனால் பேச ஆரம்பித்து விடுவான். அவனும் அவள் ஸீட்டுக்குப் பக்கத்திலிருக்கிற கிருஷ்ணவேணியம்மாளும் ஒன்றுதான். கிருஷ்ணவேணியம்மாளுக்குப் பாடு (பாடு-ஊர்க் கதை பேசுதல்) பேச ஓர் ஆள் வேண்டும். ஸ்ரீதருக்கு அவன் ஆஃபிஸிலிருக்கிற நேரமெல்லாம் ஏதாவது சாக்கிட்டு அவளைப் பார்க்க வேண்டும்.

ஸ்ரீதர் மட்டும்தானா? நேரடியாகவே அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்க ஆசைப்படுகிறவர்கள், பிறருக்குத் தெரியாமல் அவளைப் பார்க்க ஆசைப்படுகிறவர்கள் என்று பல ரகம். பல நேரங்களில், ஆண்களின் இந்த அற்பச் சபலம் மனோகரிக்கு வெறுப்பாக இருக்கும்.வருண்கூட அவள் கஞ்சி போட்ட சேலை உடுத்திக் கொண்டால், 'அம்மா நீ ரொம்ப அழகா இருக்கேம்மா' என்பான். இனி ஃபைலைத் தேடிப் பிரயோஜனமில்லை என்று தோன்றிற்று. சூப்பிரண்டிடம் சொல்லிவிட்டு, வாங்க வேண்டியதை வாங்கிக் கட்டிக் கொள்வோம் என்று இருக்கையை விட்டு எழுந்தாள்.

பர்ச்சேஸ் செக்ஷனில் கந்தசாமியும், ஆனந்தும் உரத்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீதரின் மேஜையைத் தாண்டிப் போகும்போது, எதற்கும் அவனிடம் கேட்டுப் பார்ப்போமே என்று



''பார்க்கறது நாலஞ்
சரியா மெயின்டெய்
தெரியவேன்னா எதுக்

தயங்கி நின்றாள். ஸ்ரீதர், ஆச்சரியத்தோடு சந்தோஷம் கண்களில் வடிய அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

''ஸ்ரீதர், என் டேபிள்ளே இருந்து மீனாட்சி டிரேடர்ஸ் ஃபைலை எடுத்துக்கிட்டு வந்தீங்களா?'' என்று கேட்டாள் மனோகரி.

ஸ்ரீதரின் கண்கள் அகல விரிந்தன. புருவங்கள் மேலே உயர்ந்தன. ''ஃபைலா? நான் எடுக்கலியே...'' என்றான். மனோகரிக்கு அவன் வழக்கத்தைவிட தாழ்ந்த குரலில் பேசுவதாகத் தோன்றியது. தன்னுடன் பேசுகிற பரவசத்தில் குரல் வரவில்

லையோ என்னவோ என்று நினைத்தாள். அவளுக்குச் சலிப்பாக இருந்தது.

அவனுக்கு நன்றிகூடச் சொல்லாமல் நகர்ந்தாள். விதவிதமான ஓசைகளை எழுப்பிக்கொண்டு ஃபேன்கள் ஓடிக்கொண்டிருந்தன. ரமாவும், சியாமளாவும் பேசிக்கொண்டிருந்தனர். ராகவன் மூக்குக் கண்ணாடியைக் கைக்குட்டையினால் துடைத்துக் கொண்டிருந்தார். அவர் அருகில் சென்றால் புகையிலை வாசனை வீசும்.

சூப்பிரண்டை எப்படிச் சமாளிப்பது? அவரைத் தேடி யாராவது விஸிட்டர்ஸ் வந்து உட்கார்ந்திருந்தால், இப்போதைக்குத் தப்பித்து விடலாம். அதற்குள் எப்படியாவது தேடி எடுத்துவிட முடியாதா? ஆனால்,

ஃபைல். அதையும்
ண்ணத்
ஆஃபீசுக்கு வர்றே?"



சந்தர்ப்பம் நமக்குச் சாதகமாகவா அமையும்? எதிரே லட்சுமி வந்தாள்.

"என்னடி சும்மா வர்றே? அவர் ஃபைல் கேட்டாரே?"

"ஃபைலைக் காணலை லெட்சுமி."

"காணலையா? நல்லாத் தேடினியா?"

"பார்த்தாச்சு."

"நரசிம்ம அவதாரத்தை எப்படிச் சமாளிக்கப் போறே?"

மனோகரி பேசாமலிருந்தாள்.

"போ... போ... என்னமோ சொல்லிச் சமாளி..." என்று சொல்லிவிட்டு லெட்சுமி தன் கேபினுக்குச் சென்றுவிட்டாள். ஜன்னலோரத்துப் பன்னீர் மரம், அம்மா அரைக்கும் கத்தரிக்காய்த் துவையல் எல்லாம் மனோகரிக்கு மறந்துவிட்டன. சூப்பிரண்ட் எதிரே யாருமில்லை. அவர் மட்டும் குனிந்து எதையோ பார்த்துக்கொண்டிருந்தார். மனோகரியின் கண்கள் பஞ்சடைவது போலிருந்தன. யாரென்று நிமிர்ந்து பார்த்தார்.

"அந்த மீனாட்சி டிரேடர்ஸ் கொட்டேஷன் எவ்வளவு?" என்று அவளைப் பார்த்துக் கேட்டார் சங்கரன்.

"சார் வந்து..." என்று மனோகரி தயங்கினாள். மூக்குக் கண்ணாடி பிரேமுக்கு மேல் அவளை ஏறிட்டுப் பார்த்தார். அவள் தயங்கி நிற்பதைப் பார்த்ததும், அஸ்திரங்களை எடுத்து வீச அவர் மனம் தயாரானது. இன்னும் ஏதாவது சொல்லப் போகிறாளா? எரிந்து விழ ஆரம்பித்து விடலாமா? வேகமும், எரிச்சலும்தானே அவருக்கு அழகு?

"ஃபைலை எங்கேயோ மிஸ் ப்ளேஸ் பண்ணிட்டேன் ஸார்..."

"மிஸ் ப்ளேஸ் பண்ணிட்டியா?"

"எப்படியாவது தேடிக் கண்டு பிடிச்சுடுறேன் ஸார்..."

"தேடிக் கண்டுபிடிக்க நாள், நட்சத்திரம் பார்க்கணுமா?"

"இதோ இப்பவே தேடறேன் ஸார்..."

"பார்க்கறது நாலஞ்சு ஃபைல்... அதையும் சரியா மெயின்டெய்ன் பண்ணத் தெரியலேன்னா எதுக்கு ஆஃபீஸுக்கு வர்றே?"

"தெரியாமே நடந்துட்டுது ஸார்..."

"அது எப்படித் தெரியாமே நடந்துரும்...? வேலையிலே அக்கறை இல்லே... வேறென்ன? இப்படி ஃபைலைத் தொலைக்கிறதுக்கா சம்பளம் தர்றான்?"

மனோகரிக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது. அவள் ஒரு குடும்பத் தலைவி. கிருஷ்ண பாரதியின் மனைவி. இரண்டு குழந்தைகளின் தாய். சண்முகத்தின் மருமகள். அவளுக்கும் முப்பத்தேழு வயதாகிறது. இது எவ்வளவு பெரிய அவமானம்? சிறுபிள்ளை போல் ஃபைலைத்

தொலைத்துவிட்டு வந்து நிற்கிறோமே.

"ஒரு வேலையாவது ஒழுங்காகச் செய்யறயா?" என்றார் சங்கரன்.

வேலையை ராஜினாமா செய்துவிட்டால் என்ன? பன்னிரண்டாயிரம் ரூபாய்க்காக இவரிடம் தினசரி வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டுமா? ஸ்ரீதர் மாதிரி ஆட்களுக்கு ஏன் கண்ணுக்கு விருந்தளித்துக் கொண்டிருக்க வேண்டும்? நேற்றுகூடச் சங்கரன் தான் எதற்கோ, "நீ உன்னை அழகு படுத்திக் கிடறதிலே செலவழிக்கிற அக்கறையை வேலையிலே காட்டு" என்றார். அவள் தன்னை மெனக்கிட்டு அழகு படுத்திக் கொள்வதில்லை. இயல்பாகவே மூக்கும் முழியுமாக இருக்கிறாள். இந்த அழகுக்காகத் தான் அப்பா மனோகரி என்று பெயரிட்டாரோ? ஏன், அப்பாவே அழகுதான். அவருடைய அழகு மகளிடம் இல்லாமல் போகுமா? இந்த 'லட்சணத்தை' எங்கே கொண்டு போய்த் தொலைத்துவிட்டு முகத்தை அவலட்சணமாக்கிக் கொள்வது?

"சரி... சரி... ஏன் நின்னுண்டு இருக்கறே? தேடி எடுத்துண்டு வா..." என்றார் சங்கரன். தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே கேபினை விட்டு வெளியேறினாள். சங்கரனுக்கும் அவளுடைய அப்பா வயது இருக்கும். சாயந்திரம்வரை ஒவ்வொரு டேபிளாகச் சென்று கேட்டுப் பார்த்து விட்டாள். நல்ல காலம் சங்கரன் இடையே கூப்பிட்டு விடவில்லை.

அலுவலகம் முடியப் போகிற நேரம். மொபைல் அடிக்கிற சத்தம் கேட்டது. ஹேண்ட் பேக்கில் மொபைலைத் தேடினாள். அவசர அவசரமாக எடுத்து பச்சை பட்டனை அழுத்தினாள். கிருஷ்ணபாரதி தான் பேசினான். ஆச்சரியமாக இருந்தது. அவன் பொதுவாக ஆஃபீஸ் நேரத்தில் அவளுக்கு ஃபோன் செய்யவே மாட்டான்.

"மனோகரி... இன்னைக்குச் சாயந்திரம் ஃபிலிம் சேம்பர்லே ஒரு ஸ்வீடிஷ் ஃபிலிம் இருக்கு. நீயும் வந்தா நல்லா இருக்கும்..."

"ஸ்வீடிஷ் படமா? நான் எதுக்கு?"

"இல்லே மனோகரி... பெரிய டைரக்டர் ஒருத்தரோட படம்... பெர்க்மன்னு ஒரு பெரிய டைரக்டர். நீயும் வந்தா நல்லா இருக்கும்..."

அவனுடைய பாந்தம் அவள் மனத்தைத் தொட்டது. "ஃபாரின் ஃபிலிம் எல்லாம் எனக்கு எங்கேங்க புரியப் போவது? நீங்க போயிட்டுச் சீக்கிரமா வீட்டுக்கு வாங்க."

"பாஷைத் தெரியணும்கிறது இல்லே. இங்லீஷ்லே சப் டைட்டில்



எல்லாம் இருக்கும்."

"ஐயோ... என்னாலே முடியாதுங்க. ராத்திரி சமைக்க வேண்டாமா?"

"அம்மாகிட்டே ஃபோன் பண்ணிச் சொல்லிடு. அம்மா சமைச்சு வைச்சுடுவா."

"அத்தையா? பாவம் அவங்களே ஒடம்புக்கு முடியாதவங்க. கார்த்திகாவாவது உக்காந்து படிப்பா. வருண் நான் இல்லேன்னா உக்கார மாட்டான். என்னை எதுக்குங்க இதுக்கெல்லாம் இழுக்கிறீங்க...?"

"சரி...உன் இஷ்டம்..." என்று முடித்து விட்டான். ஸ்விட்ச் ஆஃப் செய்தாள். மீண்டும் தொலைந்த ஃபைல் ஞாபகம் வந்தது.

(ஃபைல் கிடைத்ததா?)

பாஷைக்கு அடிமைகள்!

'இந்தப் பாழாய்ப் போன தேசத்திலே ஏன் பிறந்தோம்?' என்று ஒவ்வொரு சமயம் உங்களுக்குத் தோன்றுவதுண்டு. ஸ்விட்சர்லாந்திலோ, பல்கேரியாவிலோ, மெக்ஸிகோ நாட்டிலோ, எஸ்கிமோக்களின் தேசத்திலோ, ஸஹாரா பாலைவனத்திலோ, சைபீரியா சுடு காட்டிலோ பிறந்திருந்தாலும் பாதகமில்லையே; இந்த இந்திய தேசத்தில், அதிலும் தமிழ்நாட்டில் வந்து பிறந்தோமே என்று ஏக்கமடைகிறீர்கள். 'எப்பொழுதோ கடல் பெருகி வந்து தமிழ்நாட்டின் ஒரு பகுதியைக் கொண்டு போனதாகச் சொல்கிறார்களே, தமிழ்நாடு முழுமையுமே அது கொண்டு போயிருக்கக்கூடாதா? இப்பொழுதுதான் வங்காளக்குடாக் கடல் பொங்கி வந்து திருவேங்கடம், குமரிமுனை, மேற்குத் தொடர்ச்சி மலை இவைகளுக்கு இடையிலுள்ள பாகத்தைக் கொண்டு போகட்டுமே' என்று ஆத்திரப்படுகிறீர்கள்.

அநேக சமயங்களில் எனக்கும் இப்படித்தான் தோன்றுவதுண்டு. முக்கியமாக, தமிழர்கள் அரசியலிலும், சமூக வாழ்விலும் அடிமை பூண்டிருப்பது போதாதென்று, கேவலம் பாஷைகளுக்கும் அடிமைப்பட்டிருப்பதையும் நினைக்கும்போது மேற்சொன்னது போன்ற தேசபக்தி குறைவான எண்ணங்கள் உண்டாகின்றன.

பாஷைக்கு அடிமைத்தனம் இங்கே பலவிதமாக உருக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். நமது படித்த வகுப்பாரில் 100-க்கு 90 பேர் ஆங்கிலத்தின் அடிமைகள். வேறு சிலர் தமிழுக்கும், செந்தமிழுக்கும், தனித் தமிழுக்கும், உயர்தனித் தமிழுக்கும், உயர்தனிச் செம்மொழியாகிய தமிழுக்கும் அடிமைகள். இவ்வடிமைத்தனங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவாக இருக்கும் அம்சம் என்னவென்றால், உயிரைவிட உடல் பெரிது என்று கருதப்படுவதே ஆகும். பாஷை என்பது உடல்; பொருள்தான் உயிர் என்பதை பாஷைக்கு அடிமைகளாகிய நாம் மறந்துவிடுகின்றோம். உடலை வளர்க்கும் முயற்சியில் உயிருக்குக் கேடு சூழ்கிறோம். உயிரின் சக்தி குன்றும்போது உடலும் பலவீனமடையும் என்னும் சாதாரண உண்மையைக் கூட உணர்வதில்லை.

(பாஷைக்கு அடிமைகள்
கட்டுரையிலிருந்து...)
ஆனந்த விகடன் (01.09.32)



அமரர் கல்கி



கேஸ் ஸ்ட

இந்தியன் இன்ஸ்டியூட் ஆஃப் மானேஜ்மெண்ட் (Indian Institutes of Management- சுருக்கமாக ஐ.ஐ.எம்.) களில் காம்பஸ் இண்டர்வியூகள் முடிந்திருக்கின்றன. சுமார் ஆயிரம் மாணவர்களுக்கு வேலை கிடைத்துவிட்டது. சம்பளம் வருடத்துக்கு லட்சக் கணக்கில், சில யோகசாலிகளுக்குக் கோடிக் கணக்கில். மற்றக் கல்லூரிகளுக்கும் ஐ.ஐ.எம்.க்கும் என்ன வித்தியாசம்? ஐ.ஐ.எம் என்பது கல்வி நிலையம் மட்டுமல்ல, அது ஒரு பட்டறை. அங்கே பாடங்கள் போதிக்கப்படுவதில்லை, விவாதிக்கப்படுகின்றன. மிகச் சிறந்த பேராசிரியர்களும் துடிப்பான மாணவர்களும் சங்கமிக்கும் அபூர்வ இடம்.

அப்படிப்பட்ட ஐ.ஐ.எம். அகமதாபாதில், மார்க்கெட்டிங் துறைப் பேராசிரியராக இருந்து அண்மையில் மறைந்தவர் எம். என். வோரா. உலகின் பல நாடுகளில், பல முன்னணி நிறுவனங்களின் தலைவர்களாக இருக்கும் ஐ.ஐ.எம். அகமதாபாத் மாணவர்கள் அத்தனை பேருக்கும் வோரா கடவுள்.

ஐ. ஐ. எம். படிப்பில் பயன்படுத்தும் முறை கேஸ் ஸ்டடி (Case Study) முறை. இந்தக் கேஸ்கள் கம்பெனிகளின் நிஜ அனுபவங்கள். உதாரணத்துக்குச் சில:

● கஸன்பாய் பட்டேல் என்ற அகமதாபாத் இளைஞர், நிர்மா சோப் பவுடர் தயாரித்தார் (1970-ல்). பன்னாட்டு நிறுவனமான ஹிந்துஸ்தான் லீவரின் ஸர்ஃப் சோப் பவுடரோடு மோதி வெற்றி கண்டார். இன்று நிர்மா 1000 கோடி மதிப்புள்ள கம்பெனி. எப்படி நடந்தது இது? ● நீங்கள் சென்னையில் ஒரு தொழிற்சாலையில் உற்பத்தி நிர்வாகி. ஊழியர்கள் ஐம்பது சத விகித உற்பத்திதான் செய்கிறார்கள். என்ன நடவடிக்கைகள் எடுப்பீர்கள்?

இந்த விவரங்களை முன்னாடியே கொடுத்துவிடுவார்கள். வகுப்பில் இந்த விவரங்கள் விவாதிக்கப்படும். நீங்கள் பங்கேற்க வேண்டும். இது வகுப்புப் பங்கேற்பு (Class Participation) என்று அழைக்கப்படுகிறது.

இந்தப் பங்கேற்பு கோர்ட் விசாரணை மாதிரி. எடக்கு மடக்காகக் கேள்விகள் கேட்டு, பேராசிரியர் உங்களை ஒரு வழியாக்கிவிடுவார். வோரா இந்தக் குறுக்கு விசாரணையில் எமகாதகர்.

இன்றைய கேஸ் ஸ்டடி, கோகோ கோலா விற்பனை பற்றி. முதலில் மாட்டுபவர் அருண்.

''அருண், உங்கள் கோகோ கோலாவுக்கு யார் போட்டி?''

''பெப்ஸி, தம்ஸ் அப், காளி கோலா போன்ற கோலாக்கள்.''

''ஏன், ஃபாண்ட்டா, மிராண்டா போட்டி இல்லையா?''

''ஆமாம், அவையும்தான்.''

''உங்கள் போட்டிப் பொருட்கள் அவ்வளவுதானா?''

''ஆமாம், அவ்வளவுதான்.''



கில்லாடி!



● வோரா

''ஆரஞ்சு ஜூஸ், சாத்துக்குடி ஜூஸ், இவை போட்டியா, இல்லையா?''

''ஸாரி, நான் இவற்றை மறந்துவிட்டேன். இவையும் போட்டிதான்.''

''அருண், உங்களுக்குப் பயங்கரத் தாகம். பக்கத்தில் கடையே இல்லை. ரோட்டில் கார்ப்பரேஷன் தண்ணீர்க் குழாய் மட்டுமே. தாகம் தணிக்க அந்தத் தண்ணீரைக் குடிப்பீர்களா, மாட்டீர்களா?''

''குடிப்பேன்.''

''அந்த வேளைகளில் கார்ப்பரேஷன் தண்ணீர் கோகோ கோலாவுக்குப் போட்டியா இல்லையா?''

''போட்டிதான்.''

அடுத்தது மாட்டுவது விஜய்.

''விஜய், கோகோ கோலாவுக்கு யார் போட்டி? .

''பெப்ஸி, தம்ஸ் அப், காளி கோலா, ஃபாண்டா, மிரிண்டா, ஆரஞ்சு ஜூஸ், சாத்துக்குடி ஜூஸ், தண்ணீர்.''

''கூல் டிரிங்க்ஸ் போட்டி என்று ஒத்துக்கொள்கிறேன். தண்ணீர் போட்டியென்று, நீங்கள் உறுதியாக நம்புகிறீர்களா?''

''ஆமாம், ஆமாம்.''

''நான் கோகோ கோலா குடிக்கிறேன். ஏன் தெரியுமா? அது ஒரு ஃபாஷன், ஸ்டைல். உங்கள் நண்பர்களோடு வெளியே போகிறீர்கள். பந்தாவாக கோக் குடிப்பீர்களா அல்லது தண்ணீர் குடிப்பீர்களா?''

''கோக் தான்.''

''அப்போது, தண்ணீர் கோகோ கோலாவுக்குப் போட்டி இல்லையே?''

''இல்லை.''

நீங்கள் எப்படி விவாதித்தாலும், வோரா உங்களை மடக்கிவிடுவார். அவரை யாரும் ஜெயித்ததாகச் சரித்திரமே இல்லை.

நாங்கள் அவரிடம் கேட்டோம், ''அருணிடம் கோகோ கோலாவுக்குத் தண்ணீர் போட்டி என்று சொன்னீர்கள். விஜயிடம் கோகோ கோலாவுக்குத் தண்ணீர் போட்டியில்லை என்று சொன்னீர்கள். எது சரி?''

வோரா சொன்னார்,

''சரியான விடை, தப்பான விடை என்பவை கணிதத்திலும் விஞ்ஞானத்திலும் தான். மானேஜ்மெண்ட் என்பது அறிவியலும் உணர்ச்சிகளும் கலந்த சப்ஜெக்ட். மானேஜ்மெண்டில் சூழ்நிலைதான் முடிவுகளைத் தீர்மானிக்க வேண்டும். நீங்கள் கிராமத்தில் கோகோ கோலா விற்றால், உங்களுக்குத் தண்ணீர் போட்டி. நகரங்களில் விற்றால் மற்றக் குளிர் பானங்கள் போட்டி. புரிந்ததா?''

வோராவின் பதில் எங்களைச் சிந்திக்க வைத்தது. ஐ.ஐ.எம். மாணவர்களின் அட்டகாச வெற்றிகளுக்குக் காரணம், இந்த வித்தியாசச் சிந்தனைதான்!

- எஸ்.எல்.வி. மூர்த்தி

ஆயிரம் ரூபாய் வேட்டு மாலை!

ஆயிரம் ரூபாய் நோட்டு மாலை அணிவிப்பு விழாவுக்கு இன்கம்டாக்ஸ், எதிர்க்கட்சி இடித்துரைப்பு இத்யாதி களுக்கெல்லாம் பயப்படாமல் தலைவர் தனசேகரன் ஒப்புக்கொண்டிருந்தாலும், சில சில்லறையான சந்தேகங்கள் அவ ருள் குலுங்கிக்கொண்டுதான் இருந் தன.

''தலைவா! அந்த எம்.எல்.ஏ. யம காதகன். கொஞ்ச நாளா எதிர்க்கட்சியை சப்போர்ட் பண்ணிப் பேசிக்கினுக் கிறான். ஏதாவது கள்ளநோட்டு மாலை யைப் போட்டு உங்களை மாட்டிவுட்டுடப் போறான்.'' சில அனுதாபிகள் பீதியைக் கிளப்பினர். உடனே தனசேகரன் அந்த எம்.எல்.ஏ.வைத் தொடர்புகொண்டு கேட்டே விட்டார்.

''தலைவா! எவனோ என்னமோ சொன்னான்னு இப்படிச் சந்தேகப்பட லாமா? எல்லாமே 'நாசிக் பாலிமர்' நோட்டுங்க... வேணும்னா கொண்டு வந்து காட்டிட்டே மாலையைக் கட்ட றேன்'' - அந்த எம்.எல்.ஏ. உறுதியாகச் சொன்னதில் தலைவருக்குப் பரம திருப்தி!



''அதெல்லாம் வேணாம்யா... நீ விழா வேலையெல்லாம் கவனி'' என்று சொல்லி விட்டார். இருந்தாலும் இப்படிப்பட்ட மாலைகள் சுமார் 60,70 கிலோ எடையாகக் கனக்கும் என்று யாரோ சொன்னதில், தன் ஸ்பான்டாலிஸிஸ் கழுத்துக்குக் கூடுதலாகப் பட்டைப் போட்டுக் கொள்ளலாமா என்று பர்ஷனல் டாக்டரிடம் ஆலோசனை கேட்டுக்கொண்டார்.



இப்படிப்பட்ட விழா இந்த மாநிலத்தில் இதுதான் முதல் என்று அறிவித்திருந்ததால் லட்சக்கணக்கான கூட்டம். விழாக் கூட்டமே லட்சமென்றால் விழப் போகும் மாலை குறைந்தது இருபது லட்சமாவது தேறாதா? அதை எப்படிக் கோத்திருப்பார்களோ? அத்தனை நோட்டுக்களையும் பிரித்து மேய்ந்து அடுக்கவே நாள் கணக்காகுமே... அதற்கு நம்பிக்கையாக யாரைச் செய்யச் சொல்வது என்றெல்லாம் யோசித்தபடி தலைவர் அமர்ந்திருந்தார்.

''ஆமாம் எத்தினி தேறும்'' - ஆவலை அடக்க முடியாமல் தலைவர் பக்கத்தில் அமர்ந்திருந்த விழா எம்.எல்.ஏ. காதில் கிசுகிசுக்கக் கேட்டார்.

''ஒரு நோட்டுக்கு பத்து ரூபா மேனிக்கு ஆயிரம் ரூபாய்க்கு எத்தினின்னு நீங்களே கணக்குப் போட்டுக்கங்க தலைவா.''

புதிராகக் காதில் வந்து விழுந்த பதிலால் குழம்பிப்போன தலைவர், அடுத்து கழுத்தில் வந்து விழுந்த மாலையைப் பார்த்ததும் மயங்கி விழுந்தே விட்டார்.

தலைவர் வீட்டில் குவிந்துக்கிடந்த 'நாசிக் பிராண்ட்' பாலிமர் அட்டைப் போட்ட அத்தனை நாற்பது பக்க நோட்டுகளின் நடுவிலும், யார் ஓட்டைப் போட்டு நாசமாக்கியது என்று தலைவரின் கொள்ளுப்பேரன் கவலை பட்டுக்கொண்டிருக்க, மேற்படி மாலை போட்டுத் தலைவரை அவமானப்படுத்திய எம்.எல்.ஏ.வை யாரோ போட்டுத் தள்ளிவிட்டதில், அந்தத் தொகுதியில் இடைத்தேர்தல் பொற்காலம் மலர, வோட்டைப் போடாமல் போய் விடுவார்களோ என்ற கவலையில், ஒவ்வொரு வாக்காளர் கழுத்துக்கும், மெய்யாலுமே ஆயிரம் ரூபாய் மாலைகள் விழக் காத்திருந்தன. ○

அகிலா கார்த்திகேயன்



"சத்தியமா சொல்றேன் காமாட்சி... ஆயிரம் ரூபாய் நோட்டு மாலை போடலை. என்னை நம்பு. எல்லாம் அஞ்சு ரூபா, பத்து ரூபா நோட்டு மாலைதான் போட்டாங்க."

-எ.டபிள்யூ.ரபீஅஹமத்,
சிதம்பரம்


"மேடையில என்னை அவமதிச்சுப் பேசின, அந்தத் தலைவர் மேல நான் 'மான'நஷ்ட வழக்குப் போடப் போறேன்!"

"எதுக்கு தலைவரே, இப்படி 'இல்லாததை'ப் பெரிசுபடுத்தறீங்க?"

- வெ.சீதாராமன்,
சென்னை-5



"இல்லாததுக்கு



"தலைவருக்கு நோட்டு மாலை போட்டும் ஏன் கோபமா இருக்கிறார்?"

"நோட்டு மாலை என்று சொல்லி விட்டு, பள்ளியில் மாணவர்கள் எழுதும் நோட்டுப் புத்தகத்தைத் தொடுத்து மாலையாக்கி அணிவித்துவிட்டார்களாம்."

-என்.காளிதாஸ்,சிதம்பரம்

"இந்தத் திருவிழாவுக்கு வித்திட்டவரே நம்ம தலைவரு தானாமே?"

"இந்தக் கோயிலையே வித்துட்டவரும் இவரு தானேய்யா!"

- கிரிஜா மணாளன், திருச்சி





"கோடைக்காலம் ஆரம்பமாயிடுச்சு... வெயில் கடுமையா இருக்கப் போகுது. மக்கள் நலனுக்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கீங்க...?"

"ஆறு ஏழு எம்.எல்.ஏ.களை சுவிட்சர்லாந்துக்கு அனுப்பி, மக்கள் அங்கே எப்படி வெயிலைச் சமாளிக்கிறார்கள் என்று கண்டறிய உள்ளோம்!"

-ஆர்.ஆர்.பூபதி, திண்டுக்கல்

எதுக்கு வழக்கு?"



"உங்க பையன் பிற்காலத்தில் பெரிய அரசியல்வாதியா வருவான்!"

"எப்படிச் சொல்றீங்க?"

"பின்னே? வீட்டுப் பாடம் எழுதிட்டு வரலேன்னு ஒரு குட்டுக் குட்டினதுக்கே, 'கொலை வெறித்தாக்குதல்'னு ஸ்கூல் சுவர் பூரா எழுதிட்டானே!"

- சம்பத்குமாரி

அமரர் கல்கி நினைவுச்

படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தேவிட்டது!

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 500 சன்மானம் பெறும்.

யார் வேண்டுமானாலும், எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம். என்றாலும், எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு.

விதிமுறைகள்:

* கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.

* சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.

* அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தரவேண்டும்.

* படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராக இருந்தால், அதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பள்ளியிறுதிச் சான்றிதழ் போன்றவை. நகல் மட்டுமே அனுப்பவும்) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

* முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.

* தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

* போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும் வரை வேறு

சிறுகதைப் போட்டி 2010

முதல் பரிசு - ரூ.10,000/-
இரண்டாம் பரிசு - ரூ.7,500/-
மூன்றாம் பரிசு- ரூ.5,000/-



இதழுக்கோ, இணையதளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக்கூடாது.

✱ பரிசுக்குரிய கதைகளை, நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

✱ முடிவு வெளியாகும் வரை, எவ்விதக் கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.

★ 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2010' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :


ஆசிரியர், கல்கி,
கல்கி பில்டிங்ஸ், 47-NP ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

✱ கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : ஜூன் 15.

✱ போட்டி முடிவும், முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 1 (01.08.2010) ஆண்டு மலரில் வெளியாகும்.

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

- ஆசிரியர்



தமிழ்ச் சித்தர் மரபு

350 பக்கங்களுக்குமேல்

பேராசிரியர் முனைவர் டி.என். கணபதி

சித்தர்களைப் பற்றித் தமிழில் நூல்கள் பல வெளி வந்திருக்கின்றன என்றாலும் அவை சித்தர்களைப் பற்றி மேலெழுந்தவாரியாகவே பேசுகின்றன. அவற்றிலிருந்து மாறுபட்டு, சித்தர்களைத் தத்துவ நோக்கில் ஆய்வு செய்கிறது இந்த நூல். இந்நூல் தனிப்பட்ட எந்தச் சித்தரைப்பற்றியும் குறிப்பிட்டுப் பேசாது. ஒட்டு மொத்தமாகத் தமிழ்ச் சித்தர்கள் அனைவரைப்பற்றியும், அவர்களது தத்துவநிலைப்பாட்டைப்பற்றியும் பேசுகிறது.

யோக சாதனைக்குள்ளே நுழைந்து விட்டால், உடம்பினுள் யோகியால் உணரப்படும் சக்கரம், நாடி என்ற நுண்ணிய உறுப்புக்களும், குண்டலினி சக்தியும், பிராணாயாமம் என்ற மூச்சுப் பயிற்சியும், ஆசனம், முத்திரை, பந்தம் என்ற ஹடயோகப் பயிற்சிகளும், மந்திரம், மண்டலம், யந்திரம் என்ற தியான முறைகள் ஆகியவைப் பற்றி இதுவரை யாரும் விளக்கியிராத முறையில் தந்திர சாத்திரம், சித்தர் பாடல் மேற்கோள்களுடன் தெளிவாக தந்துள்ளார் ஆசிரியர்.



திருமந்திர நூலினை ...
யுமான திருமூலர் ஆவ...
பரம்பரையை உருவாக்...
பதஞ்சலி முனிவருடன் இ...
களித்தவர்; திருவாவடுது...
தடியில் மூவாயிரம் ஆ...
ஆண்டுக்கு ஒரு பாடலாச...

இத்திருமந்திரமே ...
இதனைக் கொண்டே ப...
எழுந்தன. சித்தாந்தம் எ...
வழங்கியது இந்நூல்.

அனைத்து நூ...
மொத்த விலை
சலுகை வி...
ரூ.790

சித்தர்களின் குறியீட்டு மொழியும் திருமூலரின் சூனிய சம்பாஷணையும்

பேராசிரியர் முனைவர் டி.என். கணபதி 200 பக்கங்களுக்குமேல்

சித்தர் பாடல்கள் வெளிப்பார்வைக்கு எளியவை போலத் தோன்றினாலும் உள்ளே மிகவும் ஆழமான பொருள்களை அடக்கி வைத்திருப்பவை. சாதாரண மனிதர்கள் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது என்னும் நோக்கில் உருவாக்கப் பெற்றதுதான் இந்நூல்.

இந்நூலில், சந்தியா பாஷை; தலைகீழ் மொழி; பஞ்ச மகாரங்கள்; எண் பதினெட்டு; சித்தர் இலக்கியத்தில் குறியீட்டு மொழி; திருமந்திரத்தின் குறியீட்டு வளம்; திருமூலரின் சூனிய சம்பாஷணை போன்ற பல்வேறு தலைப்புகளில் இதுவரை அறிந்திராத அற்புத விளக்கங்களைத் தருகின்றார் பேராசிரியர்.



பேராசிரியர் டி.என். கணபதி எழுதிய இவ்விரு நூல்களையும்
ரவி பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தினர் வெளியிட்டு
விற்பனைக்கு வழங்குபவர்கள் வித்தியாசன் பதிப்பகத்தார்.

முன்பதிவிற்கு முகவரி மட்டும் போதும்!
முன்பணம் அவசியமில்லை!!

சலுகை மேல் சலு...
தபால் செலவு முற்றிலு...



திருமந்திரம்

மூலமும் தெளிவுரையும் • 3 தொகுதிகளில் • 1800 பக்கங்களுக்குமேல்

சித்தரும், சிவயோகி
த்தில் ஒரு ஞானப்
யோகி. தில்லையில்
திருக்கூத்தைக் கண்டு
யிலில் ஓர் அரசமரத்
யாகத்தில் அமர்ந்து,
ம் பாடல் பாடியவர்.

த முதல் நூலாகும்.
சித்தாந்த நூல்களும்
_ரை முதல் முதலில்

திருமூலரின் தலையான கொள்கை 'அன்பே சிவம்' என்பதாகும். இதனை அறியாதார், அறிவிலார் என்பது அவருடைய கருத்து. சிவன் அன்பு வடிவானவன் என்னும் உண்மையை வற்புறுத்தும் இந்நூலில் அறம் பேசப்படுகிறது; தத்துவம் பேசப்படுகிறது; சமயம் பேசப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக இதன் ஆசிரியர் யோகத்துக்கு தனி இடம் கொடுத்துள்ளார். அதாவது, இந்நூலில், இல்லாத எப்பொருளும் இல்லை எனலாம்.

தோத்திரமாகவும் – சாத்திரமாகவும் – வாழ்க்கை நூலாகவும் அமைந்த திருமந்திர நூலினை அனைவரும் கற்றுணர வேண்டும் எனும் நோக்கில், 3000 பாடல்களுக்கும் தெளிவான உரையினை எழுதியிருப்பவர் பேராசிரியர் **அ. மாணிக்கம்** அவர்கள். **திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின்** தமிழ்க் கல்லூரியில் பயின்ற இவர், சென்னை ஜெயின் கல்லூரியில் 30 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.



பேராசிரியர் முனைவர் டி.என். கணபதி அவர்கள், சென்னை விவேகானந்தா கல்லூரியின் தத்துவத்துறையில் முதுநிலைப் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும், ஸ்ரீசத்ய சாயி கல்வி நிறுவனத்தில் வருகைதரு பேராசிரியராகவும் மொத்தம் 54 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்தவர்.
- தற்போது தமிழ் யோக சித்தர் ஆய்வு மையத்தின் இயக்குநர்.
- மலேசிய முதலாவது உலக சித்தர் நெறி மாநாட்டில் சிறப்புப் பேச்சாளர்
- சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலக சித்தர் நெறி மாநாட்டின் பொதுச் செயலாளர்
- பல கருத்தரங்குகளில் கலந்து கொண்ட அனுபவம் வாய்ந்தவர்
- திருமந்திரம் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலாக்கப்பணியில் இவர் உரையாசிரியராகவும், தொகுப்பாசிரியராகவும் இருந்தவர்
- ஆங்கிலத்திலும், தமிழிலும் பலநூல்களை படைத்தவர்
- இவரது நூல்கள் ஜெர்மன், பிரெஞ்சு, ரஷ்ய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ு தொலைபேசி அல்லது கடிதம்
ஷரியை தெரிவிக்கவும். நூல்கள்
ே மாதம் முதல்வாரத்தில் ஒரே
.பி.பி.யில் அனுப்பப்படும்.
ர் பார்சலை தரும்போது
_டும் செலுத்தினால் போதும்.

முன்பதிவு செய்யத் தொடர்பு கொள்க

ர்த்தமானன் பதிப்பகம்
ிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை -17.
க்கு உஸ்மான் சாலை JOY ALUKKAS அருகில்;
Kences Towers பக்கத்தில்)

☎ : 2814 0347 / 2814 4995
2434 5581 / 4350 2995
செல் : 99418 63542 / 93806 30192
இ–மெயில் : vartha@aol.in 90949 63125

ம்!

23.4.2010 தேதிக்குள் பதிவு செய்வோர்க்கு மட்டுமே இந்நூல்கள் கிடைக்கும்!





வாமன தேசங்கள் 14

தெருவில் குப்பை? கூடாது. சூயிங் கம் விற்பனை? மூச். தீவிரமான பெண்ணியக் கருத்துக்கள் கொண்ட கட்டுரைகள்? கூடவே கூடாது. மருத்துவக் கல்வி? படிக்கலாம், ஆனால், அதற்குப் பிறகு சில ஆண்டுகள் கட்டாயம் சிங்கப்பூரில்தான் மருத்துவத் தொழில் செய்ய வேண்டும். ஆளும்கட்சிக்கு எதிரான அழுத்தமான தலையங்கம்? விளைவுகளை நிச்சயம் சந்திக்க வேண்டும்.

இப்படிச் சட்டங்களாலும், கடலாலும் சூழப்பட்ட நாடு சிங்கப்பூர். மலாய் தீபகற்பத்தின் தெற்கு நுனியிலுள்ள தென் கிழக்கு ஆசியாவின் மிகச் சிறிய நாடு. ஆசிய நாடுகளிலேயே ஆங்கிலத்தை அதிகாரபூர்வ மொழியாகக் கொண்ட ஒரே நாடும் இதுதான். (பிற மூன்று அதிகார பூர்வ மொழிகள் சீனமொழி, மலாய் மற்றும் தமிழ்).

1819 ஜனவரி 29 அன்று சர் தாமஸ் ரஃபில்ஸ் என்ற பிரிட்டிஷ்காரர் தமது வலது காலை சிங்கப்பூரில் வைத்தார்.

ப்ளீஸ்... எங்களைப் பிரிக்காதீங்க!



சிங்கப்பூர்





'ஆஹா, தெற்காசியாவில் வணிகம் செய்ய எவ்வளவு அருமையான இடம்!' உடனடியாக அப்போது அப்பகுதியை ஆண்டு வந்த சுல்தான் ஹுசேன் ஷா என்பவருடன் ஓர் ஒப்பந்தம் போட்டுக்கொண்டார், கிழக் கிந்தியக் கம்பெனியின் சார்பில்! தொடர்ந்து என்ன நடந்திருக்கும் என்பது நாம் அறியாததா? வணிகத்தில் தொடங்கி நாட்டையே வளைத்துப் பிடித்தது பிரிட்டன். ஆக, ஐந்தே வருடங்களில் சுல்தானுடன் வேறோர் ஒப்பந்தம். சிங்கப்பூர் பிரிட்டிஷ் காலனியானது.

இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பான் நாடு, மலேயாவை ஆறே நாட்களில் வெற்றி கண்டது. 'சிங்கப்பூர் யுத்தம்' என அழைக்கப்பட்ட இதில், சிங்கப்பூரில் வாழ்ந்த பல சீனர்கள் உயிர் இழந்தனர். ஒரு மாதத்துக்குப் பிறகு பிரிட்டன் மீண்டும் இழந்த பகுதியை மீட்டது. ஆனால், தன் தோல்வியை அதனால் நெடுங்காலத்துக்கு ஜீரணிக்க முடியவில்லை.

அதற்கு அடுத்த ஆண்டு (சிங்கப்பூரில் சுதந்திரக் குரல்கள் வலிமை அடைந்ததைத் தொடர்ந்து) சிங்கப்பூரில் பொதுத் தேர்தல் நடத்த பிரிட்டன் அனுமதித்தது. தேர்தலில் பிரதமரான டேவிட் மார்ஷல் தொடர்ந்து சிங்கப்பூரைத் தனி நாடாக்க முயற்சிகள் மேற்கொண்டார்.

ஆகஸ்ட் 1963-ல் சிங்கப்பூர் தனி நாடானது. அதாவது மலேயா, சபா, சராவக் ஆகியவற்றுடன் மலேஷியக் கூட்டமைப்பில் இணைந்தது. இப்படிப் போராடிச் சுதந்திரம் பெற்ற சிங்கப்பூர், பின்னொரு காலத்தில் சுதந்திரம் வேண்டாமே என்று கெஞ்சிய வியப்பையும் சரித்திரம் கண்டது.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபட்டவுடன் மலேசியா, சிங்கப்பூர் இரண்டும் ஒன்றாக நடைபோடத் துவங்கின. சிங்கப்பூருக்குத் தன்னாட்சி வழங்கப்பட்டது. ஆனால், வேறுபாடுகள் பூத உருவெடுத்தன. அவற்றில் முக்கியமானவை இரண்டு. ஒன்று, இனம். மற்றொன்று, பொருளாதாரம். சிங்கப்பூரில் அதிக அளவு இருப்பது சீனர்கள். மலேசியாவில் முஸ்லிம்கள்.

1964-ல் இனக் கலவரங்கள் நடைபெற்றன. முகமது நபிகளின் பிறந்த நாளன்று சிங்கப்பூரிலுள்ள பதங் என்ற பகுதியிலிருந்து, கேலாங் என்ற பகுதியை நோக்கி ஓர் ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது. அதிலிருந்து ஒரு குழு தனியாகப் பிரிந்து செல்ல, காவல் துறையினர் அவர்களை ஒழுங்குபடுத்த முயற்சித்தனர். இதற்கு ஒத்துழைக்காததோடு, பிரிந்து

ஜி.எஸ்.எஸ்.

கிராமங்களே கிடையாது!

✱ மலேசியாவுக்கு தெற்கே, இந்தோநேசியாவிற்கு வடக்கே அமைந்த நாடு.

✱ நாடு முழுவதுமே நகரம்தான். அதாவது, கிராமங்கள் கிடையாது.

✱ தென்கிழக்கு ஆசியாவின் முக்கிய துறைமுகம் என்பது மட்டுமல்ல; உலகிலேயே மிகவும் பிசியான துறைமுகமும் கூட.

✱ தலைநகரம் - சிங்கப்பூர். தேசிய சின்னம் - சிங்கம்.

✱ மக்களில் 78 சதவிகிதம் பேர் சீனர்கள். 14 சதவிகிதம் மலாய்க்காரர்கள். இந்தியர்கள் ஏழு சதவிகிதம்.

✱ ஆட்சி மதம் என்று எதுவுமில்லை. மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அரசு.

✱ கல்வியறிவு 90 சதவிகித மக்களுக்கு உண்டு: தென்கிழக்கு நாடுகளிடையே இது ஒரு சாதனை.

✱ 36 சதவிகிதம் வெளிநாட்டினர். முக்கியமாக சீனர்கள், மலாய்க்காரர்கள், தமிழர்கள் (இந்த வரிசையில்).

✱ பாராளுமன்றக் குடியரசு.

✱ ஜுராங் பறவைகள் சரணாலயம், மிருகக் காட்சி சாலையில் இரவுப் பயணம், அறிவியல் பூங்கா போன்ற காந்தங்கள் வெளிநாட்டினரை ஈர்க்கின்றன. அத்தனையும் செயற்கை முறையில் உருவாக்கப்பட்டவை என்பது சிங்கப்பூரின் வணிக சாமர்த்தியம்.

✱ சிங்கப்பூரில் தயாரிப்பு என்று அங்கே எதுவும் கிடையாது. தண்ணீரைக்கூட மலேசியப் பகுதியிலிருந்துதான் பெற வேண்டும் என்கிற அளவிற்கு ஏதுமற்ற பகுதி அது.




சென்றவர்கள் காவல் துறையினரைத் தாக்கவும் செய்தார்கள். இந்தத் தாக்குதலில், சாலையில் நடந்து கொண்டு இருந்த சீன இனத்தவர் மீதும் அடிகள் விழ, வெடித்தது கலவரம். சட்டம் ஒழுங்குப் பிரச்சனை இன, மதக் கலவரமாகப் பரிணாமம் பெற்றது.

மூன்றே மாதங்களில் மீண்டும் கலவரம். இந்தோனேசியாவும் கம்யூனிஸ்டுகளும்தான் கலவரங்களைத் தூண்டிவிடுகின்றன(ர்) என்று கருதினார் மலேசிய துணைப் பிரதமர் டுன் அப்துல் ரஸாக். தவிர, ஏற்கனவே மலேசியாவில் சந்தேக விதைகள் முளைவிட்டிருந்தன. பொருளாதாரத்தில் குதிரைப் பாய்ச்சலுடன் சிங்கப்பூர் முன்னேறிக்கொண்டிருக்க, மலேசியாவின் அதிகாரக் கேந்திரம் கோலாலம்பூரிலிருந்து சிங்கப்பூருக்கு இடம் மாறிவிடுமோ என்ற அச்சம் கூட ஏற்பட்டிருந்தது.



இனியும் கலவரங்கள் வேண்டாம் என்று முடிவு எடுத்த பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான், நாடாளுமன்றத்திற்கு ஆலோசனை கூறினார் - 'சிங்கப்பூர் பிரிந்து விடட்டும்'. சேர்ந்திருக்கவே விரும்புவதாக சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ கூறினார். நாடாளுமன்ற வாக்கெடுப்பில் சிங்கப்பூர் பிரிந்து செல்ல வேண்டும் என்பதற்கான ஆதரவு ஓட்டுகள் மிக அதிக அளவில் விழுந்தன (சிங்கப்பூர் நாடாளு மன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை).



கண்ணீர் வழிய 'சிங்கப்பூர் தனி நாடாகி விட்டது' என்று அறிவித்த லீ, அதன் பிரதமரானார். இன்று அதன் துறைமுக வணிகத்தினாலேயே பெரும் பணக்கார நாடாகி விட்டது சிங்கப்பூர். எனினும் (அல்லது எனவே) மிகவும் அதிக அளவில் செல வழிக்க வேண்டிய நாடு. உலகிலேயே பத்தாவதாகவும் ஆசியாவிலேயே மூன்றாவதாகவும் (டோக்கியோ மற்றும் ஒசாகாவுக்கு முதல் இரண்டு இடங்கள்) 'வாழ்வதற்கு அதிகத் தொகை தேவைப்படும் நாடு-நகரம்'.

(அடுத்த இதழில் - அலெக்ஸாண்டரால் திண்டாடும் நாடு)

புதுசா படிச்சேன்... பெரிசா ஜெயிச்சேன்-1



• சித்தார்த்



• விஜய் விஸ்வநாதன்

ஆல்கெமி தயாரிப்பு...

"எல்லோரையும் போலத்தான் எனக்கும் சினிமா கனவு இருந்தது. அடிப்படையில சாஃப்ட் வேர் என்ஜினியர் நான். கல்லூரியில் படிக்கும்போதே சினிமா பாடமும் பயின்றேன். கோயமுத்தூரிலிருந்து சென்னைக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கிளம்பி வந்துடுவேன். சனி, ஞாயிறுகளில் சினிமாவும் அதைச் சார்ந்த கல்வியுமா பொழுது போகும். எனக்குள் இருந்த சினிமா தாகத்துக்குச் சரியான களம் அமைத்துக் கொடுத்தது, நான் படித்த ஆல்கெமி இன்ஸ்டிடியூட் (www.alchemyindia online. com). அதற்கு ஒரு பெரிய சல்யூட் என்கிறார் சித்தார்த். 'ஆனந்த தாண்டவம்' திரைப்படத்தின் ஹீரோ இவர். சினிமாவுக்கு வருவதற்கு முன்பு அதுசார்ந்த கல்வி அவசியம் என்கிறார்.

சித்தார்த்தைப் போலவே ஆயிரக்கணக்



கான இளைஞர்கள்/இளைஞிகள் தங்கள் கண்களில் செல்லுலாய்டு கனவுகளைச் சுமந்தபடி, தமிழகம் முழுவதுமிருந்து சென்னை நோக்கி வருகிறார்கள். சினிமாவில் காலடி எடுத்து வைக்க யத்தனிப்பவர்களுக்கு, எங்கே படிக்கணும், என்ன படிக்கணும், என்னென்ன தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே மிகப் பெரிய புதிர்தான். அந்தப் புதிர்களை அவிழ்க்கிறார் சென்னை ஆல்கெமி இன்ஸ்டிடியூட் நிர்வாக இயக்குனர் விஜய் விஸ்வநாதன்.

"நடிப்புக் கலையின் மீது அதீத ஈடுபாடு, தளராத நம்பிக்கையோடு கூடிய உழைப்பு, உள்ளம் நிறைய உற்சாகம்... இவை இருந்தால் போதும்; இந்தத் துறையில் நிச்சயம் நிறையவே சாதிக்கலாம். சினிமாவில் சேர வேண்டுமென்றால், அதற்கு நல்ல பண வசதி படைத்தவர்களாக இருக்க வேண்டும், குடும்பத்தில் யாராவது சினிமாவில் இருப்பவர்களாக இருக்க வேண்டும் என எண்ணியே பல இளைஞர்கள் சோர்ந்து போகிறார்கள். ஆனால், அது நிஜம் அல்ல என்பதை, நாங்கள் கடந்த ஏழு ஆண்டுகளாக நிரூபித்துக் கொண்டிருக்கிறோம். பன்னிரண்டாம் வகுப்பு பாஸ் செய்தவர்கள் எங்களிடம் ஒரு வருடம் ஆக்டிங், மாடலிங் கோர்ஸ்களில் சேரலாம். பார்ட் டைமாகக் கூட சனி, ஞாயிறுகளில் இந்த டிப்ளோமா பயிற்சியை மேற்கொள்ளலாம். வயதைத் தாண்டியவர்கள் ஒரு மாத வொர்க் ஷாப்களில் சேர்ந்து நடிப்பு, மாடலிங், ரேடியோ ஜாக்கி போன்ற தங்களுக்குப் பிடித்த பாடங்களில்,

ஆக்டிங் லாங்வேஜ் கத்துக்கங்க!

பயிற்சி எடுத்துக் கொள்ளலாம். நடிப்பு என்பது வெறும் வெளிப்புறத் தோற்றத்தை மட்டுமே சார்ந்தது அன்று. உள்ளத்தில் என்றுமே பாஸிட்டிவ்வான எண்ணங்கள், கலைத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு இருக்க வேண்டும். ஆக, உள்ளும் புறமும் ஒருசேரப் பளிச்சென மின்ன, நாங்கள் பிரத்யேகமாகப் பயிற்சி அளிக்கிறோம்" என்கிறார் விஜய் விஸ்வநாதன்.



* 'ஆனந்த தாண்டவம்' படத்தில்...

- நளினி சம்பத்குமார்

ஸ்ரீ லலிதா
நான்காம் பாகம்

ஆத்மானந்தத்தில் லயிப்பவள்!

25

சுதா சேஷய்யன்

பகிர்முகஸுதுர்லபா - பகிர்முகமாக ஆராதிக்கும் போது அவ்வளவு சுலபமாக வசப்படமாட்டாள். இந்தத் திரு நாமத்துக்கு அர்த்தம் சொல்ல, கௌலாசார - சமயாசார வழி பாட்டு முறைகளை ஒப்புநோக் கிப் பேசுவது உண்டு. ஆனால், அப்படிச் செய்வதை விட, வேறு ஓர் அணுகுமுறையில் பாஷ்யம் சொல்வதே சிறந்தது: 'வெளி விஷயங்களில் ஆர்வம் காட்டி னால், அப்போது அம்பாள் வசப் படமாட்டாள்' என்று அர்த்தம் கொள்வதே பொருத்தம். அந் தர்முகமாக (உள்முகமாகப்) பார்த்து, ஆத்மானுபவத்தில் அம் பாளை ஆராதிக்கும்போது, ஆராதிப்பதற்காகவே ஆராதிக் கும்போது - அதற்கு வெகு சீக்கிரமே வசப்படக்கூடியவள்.

ஆனால், ''அம்மா! உன்னை நான் ஆராதிப்பதற்கு என்ன காரணம் தெரியுமா? எனக்கு இன்னது வேண்டும்; அன்னது வேண்டும்...'' என்று வேறு ஏதோ ஒரு நோக்கத் துடன் அம்பாளை ஒரு கருவியாக நினைத்து வழி படுவோருக்கு, அவள் அவ் வளவு சீக்கிரம் வசப்படமாட் டாள். ஆராதிப்பது, ஆராதிப் பதற்காகவே இருக்க வேண்டும்.

த்ரயீ - மூன்று வேதங்களின் வடிவமாக இருக் கக்கூடியவள். ஆதி காலத்தில் மூன்று வேதங்கள் என்றுதான் கணக்கு இருந்தது - ரிக், யஜுர், ஸாம வேதங்கள். அதர்வண வேதத்தை அப்புறம்தான் சேர்த்தார்கள். வியாஸர் தொகுத்து வைத்தார் நான்கு வேதங்களை என்று சொன்னால்கூட, த்ரயீ வேதம் என்பதுதான் ஆரம்ப நிலை. அந்த மூன்று வேதங் களில் இருக்கக்கூடிய விஷயங்கள்தான் மீண்டும் அதர்வண வேதத்தில் இடம்பெறுகின்றன என்பதால், த்ரயீ என்று சொல்வதுண்டு. இந்த மூன்று வேதங்களின் ஸாரமாக இருக்கக்கூடியவள். அது மட்டுமல்ல; த்ரயீ என்று எடுத்துக் கொண்டால் மும்மூன்றாகக் காணப்படும் எல்லாவற்றின் நிலையமாகவும் இருக்கக்கூடியவள்:

மூன்று குணங்கள்
மூன்று தன்மைகள்
முப்புரங்கள்

முப்புரை என்பதற்கு எப்படியெல்லாம் அர்த்தம் பிரிக்கலாமோ, அதே மாதிரி த்ரயீ என்பதற்கும் பிரிக்கலாம்.

த்ரிவர்கநிலயா - அக்ஷர வர்க்கங்கள் மூன்று உண்டு. குண வர்க்கங்கள் மூன்று - திரிபுரம் என்றால் அதுவும் மூன்று. அவ்வாறு முப்பிரிவுகள் உடைய நிலைகளில் உறைபவள். அவற்றைத் தன்னுள்ளே கொண்டவள்.

த்ரிஸ்தா - மூன்று ஸ்திதிகளில் இருக்கக்கூடியவள். இதைச் சாதாரணமாக எப்படிச் சொல்வது என்றால், முக்காலங்களிலும் உறைபவள் என்று. கடந்த காலம், இப்போது நடந்துகொண்டிருக்கக்கூடிய நிகழ்காலம்,


ஸ்ரீஆனந்தவல்லி அம்மன்
பெரம்பூர்
(நாகை மாவட்டம்)

வரக்கூடிய பவிஷ்யகாலம் - இந்த மூன்றிலும் நிலைப்பட்டு இருக்கக்கூடியவள்.

த்ரிபுர மாலினி - திரிபுரத்துக்கு நடுவில் பிந்துஸ்தானத்தில் இருக்கக்கூடியவள். திரிபுரங்களைத் தனது மாலையாக அணிந்திருப்பவள். மேரு நிலையா என்ற நாமத்துக்கு ஏற்ப, தான் உறைகின்ற ஸ்ரீசக்கரத்தில், ஸ்ரீநகரத்தில் இருக்கும் போது, முப்புரங்கள் சூழ இருக்கிறாள் அவள். பிந்துஸ்தானம் - சிவ-சக்தி ஐக்கிய ஸ்வரூபம்- இந்த ஸ்வரூபத்தில் உறைகிறபோது, அவளைச் சூழும் மாலை என்ன...? பிரம்மம் தனியாக இருக்கிறது; அஹம் தனியாக இருக்கிறது; இதம் தனியாக இருக்கிறது. இந்த மூன்றும் சேர்ந்து ஒரு மாலை மாதிரி இருப்பதனாலே திரிபுரங்களையும் மாலையாகக் கொண்டவள் என்ற திருநாமம் பொருந்துகிறது.

சஞ்சலமற்றவள்

நிராமயா - எந்த சஞ்சலமும் சலனமும் இல்லாதவள்.

நிராலம்பா - முருகப் பெருமானைப் பற்றிப் பாடுகிறபோது, அருணகிரிநாதர், நிராமய என்று பாடுவார். நிராமயன் என்றால் சஞ்சலமோ துன்பமோ இல்லாதவன் என்று பொருள். நிராலம்பா என்பது ஆலம்பம் இல்லாத - அதாவது பிடிப்பு இல்லாத - என்று அர்த்தம் தரும். 'ஏன் பிடிப்பு இல்லை?' என்று கேட்டால், அவள்தானே எல்லாவற்றுக்கும் பிடிப்பாக இருக்கக்கூடியவள். அவளிடமிருந்துதான் சிருஷ்டி தொடங்கியது; எல்லாமே ஆரம்பித்தது என்றால், அவள்தானே எல்லாவற்றுக்கும் பிடிமானம்? தனியாக அவளுக்கு ஆரம்பம்- முடிவு என்பது கிடையாது. நிராலம்பாவாக இருக்கிறாள். ஆலம்பம் - பிடிப்பு, தொடக்கம், பிடிமானம் என்று பொருள் படும். இவற்றுள் எந்த அர்த்தத்தை எடுத்துக் கொண்டாலும் இத் திருநாமத்துக்குப் பொருத்தமானதே.

ஸ்வாத்மாராமா - தன்னுடைய ஆத்மத்தையே தன் நிலையமாகக் கொண்டவள். சிவ-சக்தி ஐக்கியம் என்பதை உணர்த்துவதற்கு, தன்னுடைய ஆத்மத்துக்குள்ளே தன்னையே ஆராதிக்கக்கூடிய நிலைமையில், அந்த ஆனந்த அனுபவத்தில் லயித்தபடி இருக்கக்கூடியவள்.

சுதாச்ருதி - அம்ருதத்தை வர்ஷிக்கக்கூடியவள்.

வராஹமூர்த்திபோல...

ஸம்ஸாரபங்கநிர்மக்ன ஸமுத்தரண பண்டிதா - ஸம்ஸார பந்தத்துக்குள் போய் விட்டவர்கள்,



ஸம்ஸார வெள்ளத்தில் மூழ்கி விட்டவர்கள், அவர்களை உத்தாரணம் செய்யக்கூடியவள் - தூக்கி விடக் கூடியவள். கரையேற்றக்கூடியவள். ஆசார்யர் ஆதிசங்கரர் பாடுகிறபோது - அவித்யையின் இருட்டில் உழல்பவர்களுக்கு தீப ஒளியாக இருந்து வழிகாட்டுகிறாள் என்று பாடுகிறார். அவளே - அதே அம்பிகையே- 'ஸம்ஸார ஸாகரத்துக்குள் விழுந்துவிட்டவர்களைத் தூக்குகிறாள்' என்றும் சொல்கிறார் ஆதி

சங்கரர். எப்படித் தூக்குகிறாள்...? முராரிபு மாதிரி தூக்குகிறாளாம். மஹாவிஷ்ணு, வராகமாக அவதாரம் எடுத்து வந்தாரே, அப்போது தனது கோரைப் பல்லால் பூமியைக் கெந்தி எடுத்துத் தூக்கி வந்தார் அல்லவா...? அந்த மாதிரி, ஸம்ஸாரக் கடலில் விழுந்தவர்களைத் தூக்கிவிடக்கூடியவள் அம்பிகை என்றார். அவர்களை உத்தாரணம் செய்வதில் பண்டிதையாகவே (ஸம் உத்தரண பண்டிதா) இருக்கிறாளாம் அம்பாள்! அதிலேயே நிபுணத்துவம் படைத்தவள்!

கடலுக்குள்ளே விழுந்தவர்களைத் தூக்குவது ரொம்ப கஷ்டமான விஷயம். தூக்க வருகிற நபரையும் சேர்த்துக் கீழே இழுத்துவிடுவார் தத்தளிப்பவர். அவ்வளவு வீரியம் இருக்கும் வெள்ளத்துக்கு. ஸம்ஸார வெள்ளம் பற்றியோ கேட்கவே வேண்டாம்! 'அதிலிருந்து நம்மை யார் தூக்கிவிட முடியும்?' அம்பாளால் மட்டுமே தூக்கிவிட முடியும்.

> **மஹாவிஷ்ணு, வராக அவதாரத்தில் கோரைப் பல்லால் பூமியைக் கெந்தி எடுத்துத் தூக்கி வந்ததுபோல ஸம்ஸாரக் கடலில் விழுந்தவர்களைத் தூக்கிவிடக் கூடியவள் அம்பிகை.**

யக்ஞப்ரியா - யக்ஞங்களினால் ப்ரீதி அடையக்கூடியவள். அவற்றை நடத்துவிக்கக்கூடியவள். அந்த யாகங்களுக்கு **யஜமான ஸ்வரூபிணி**யாகவும் இருக்கக் கூடியவள். எந்த யாகம்...? அவரவர் அகத்திலே - உள்ளத்திலே செய்யும் யாகத்தினால் ப்ரீதி அடையக்கூடியவள்.

தர்மாதாரா - தர்மத்துக்கெல்லாம் ஆதாரமாக இருக்கக்கூடியவள்.

தனாத்யக்ஷா, தனதான்ய விவர்த்தினி - அம்பாளுடைய அக்ஷம் - கண் பார்வை - தனத்தைத் (செல்வத்தை) தரக்கூடியது. தான்யத்தை, நிறைவான செல்வத்தைத் தரக்கூடியவள் அவள்.

உணர்ந்தோரை உவப்பவள்

விப்ரப்ரியா - விப்ர தன்மை என்று சொல்வதுண்டு. சாதாரணமாக ஒருவர் பிறக்கிறார். பிறப்பவர் ஆசார்யரிடமிருந்து உபதேசம் பெறுகிறார். அப்படி ஆசார்ய உபதேசம் பெற்ற பிறகு 'த்விஜா' என்ற நிலையை எய்துகிறார். அவரே, தாம் கற்றவற்றையெல்லாம் தானே உணர்கிற நிலைமை அதற்கு அப்புறம் ஏற்படும். இந்த நிலைக்குத்தான் விப்ர தன்மை என்று பெயர் - ஆசார்ய உபதேசத்தின் பொருளை உணர்வுபூர்வமாக அனுபவிக்கின்ற நிலைமை.

எந்த மனிதனும் இந்த விப்ர நிலைமைக்குப் போக வேண்டும். 'அதற்குப் பிறகு என்ன?' என்று கேட்டால், பரப்பிரம்மத்தை முழுமையாக உணர்ந்து அதனுடன் ஐக்கியப்படக்கூடிய கட்டம்தான். ஆனால், விப்ர நிலைமை என்பது, பரப்பிரம்மம் என ஒன்று உள்ளது என்பதை உணர்கின்ற தன்மை. இந்தத் தன்மையை அடைந்தவர்களும் அம்பாளுக்கு ப்ரீதியை அளிக்கிறார்கள்; அவளுக்கு உகந்தவளாக இருக்கிறார்கள். ஆகவேதான் **விப்ரப்ரியா** என்ற திருநாமம்.


இதைச் சாதாரணமாகப் பொருள் கொண்டால், இந்தப் பிறவியில் இருக்கக்கூடிய ஜீவர்களால் ப்ரீதி அடைகிறவள் அம்பாள் என்றும் கொள்ளலாம். தன்னுடைய குழந்தைகள் தன்னை எப்படிக் கூப்பிட்டாலும், எப்படி ஆராதித்தாலும், அதற்காகச் சந்தோஷம் அடையக்கூடியவளே **விப்ரப்ரியா**.

(வளரும்)

இரண்டாம் உலக யுத்தம் முடிந்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகியிருக்கக் கூடும். இன்னும் வெளிப்படையாகப் பனிப்போர் துவங்கவில்லை. ஐரோப்பிய நாடுகளில் இடிபாடுகள் மத்தியில் மக்கள் பட்டினியாலும் குளிருக்குப் போதிய உடை, கணப்பு இல்லாமலும் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

இவ்வளவுக்கும் மத்தியில் விஞ்ஞான ஆய்வாளர்கள் அவர்கள் பணியைச் செய்து கொண்டிருந்தார்கள். பெனிசிலின் என்ற விந்தை மருந்து பல நோயாளிகளுக்கு ஆறுதல் அளித்தது. மருத்துவ நிபுணர் செபாஸ்டியன் தாமஸ், ஐம்பது வயது தாண்டியவர்களுக்கு வரும் இதய நோய்க்கு அறுவைச் சிகிச்சை மூலம், இன்னும் இருபது முப்பது ஆண்டுகள் அவர்கள் ஆயுள் நீடிக்க வழி கண்டுபிடித்து விட்டார். ஒரே ஒருமுறை அமெரிக்கா சென்று, அங்கு ஓர் கருத்தரங்கில் கட்டுரை படித்து, உலகெங்கும் இதய நோய்ச் சிகிச்சையில் புதிய பாதை ஏற்பட வைத்தார். அந்தக் கருத்தரங்குக்குத் தென் ஆப்பிரிக்காவிலிருந்து கிரிஸ்டியன் பர்னார்ட் என்ற மருத்துவ

நிஜம்





அசோகமித்திரன்

நிபுணரும் வந்திருந்தார். அவர் தான் பிற்காலத்தில் இதய மாற்று சிகிச்சையை முதன் முதலாக வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.

செபாஸ்டியனுக்குத் தருஸ்யா என்ற நாட்டிலிருந்து அழைப்பு வந்தது. அந்த நாட்டுத் தூதரே நேரில் வந்து அழைத்து இரு வழி விமானச் சீட்டையும் தந்தார். செபாஸ்டியனுக்குத் தன் உதவியாளரையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்று விருப்பம். ஆனால், செபாஸ்டியனுக்கு மட்டும்தான் விசா தர முடியும் என்று தருஸ்யா நாடு கூறிவிட்டது.

தருஸ்யா ஓர் இருண்ட நாடு என்று பெயர் பெற்றது. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சர்வாதிகாரி ஆட்சி நடத்தி வந்தான். 'எல்லாவற்றையும் ஜான் பார்த்துக் கொள்வார்' என்பது அந்த நாட்டின் ஆதார கோஷம். தலைநகரில் மட்டுமல்லாது கிராமப்புறத்திலும் ஜானின் முகம் இதைக் கூறிக் கொண்டிருக்கும். ஆனால்



கோஷத்திற்கு வேறு பொருள் உண்டு என்றும் எல்லாருக்கும் தெரியும். 'ஜாக்கிரதை. உன் உயிர் என் கையில்' என்று ஜான் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தான்.

ருஷ்யாவின் தலைநகரில் செபாஸ்டியனின் உரைக்கு இருபது பேர் வந்திருந்தனர். எல்லாரும் ஒரே மாதிரி உடை. ஒரே மாதிரி முகத் தோற்றம். கைகுலுக்கும்போது புன்னகை கூட மிகவும் அடக்கமாக இருந்தது. செபாஸ்டியனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. அவருடைய உரைகளுக்குப் பத்துப் பன்னிரண்டு நபர்கள் கூட வரமாட்டார்கள். இங்கு இருபது பேர்! உரை முடிந்தபின் ஒருவர் கூட வினா எழுப்பவில்லை. அது கூட சாத்தியம்தான். ஆனால், அவர்கள் மருத்துவர்கள்தானா என்ற ஐயம், அவர்களில் ஆங்கிலம் சிறிது அறிந்தவருடன் செபாஸ்டியன் பேச முற்பட்ட போது ஏற்பட்டது. ஆனால், அதிகாரிகள் அவரை உடனே வெளியே அழைத்து வந்து ஒரு காரில் ஏற்றி விட்டார்கள்.

கார் அவர் தங்கியிருந்த விடுதிக்குப் போகவில்லை. மாறாக, ஒரு பெரிய மாளிகை உள்ளே சென்றது. செபாஸ்டியனை இருபுறமும், காவல் அதிகாரிகள் போன்றவர்கள் அழைத்துச் சென்றார்கள்.

அங்கு திரும்பி, இங்கு திரும்பிப் பத்து நிமிடங்கள் கழிந்து அவர்கள் ஓர் அறையை அடைந்தார்கள். இப்போது வேறு இருவர் செபாஸ்டியனை ஒரு கைதி போல அழைத்துச் சென்று ஓர் அறுவைச் சிகிச்சை அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே படுக்கையில் ஒரு நோயாளி பேச்சு மூச்சற்றுக் கிடந்தான்.

செபாஸ்டியன் தான் ஏதோ சூழ்ச்சியில் சிக்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தார். அங்கிருந்த மருத்துவர்களில் ஒருவர், டாக்டர் தாமஸ், ''தங்கள் சிகிட்ச்சைக்காக இங்கு ஒருவர் காத்திருக்கிறார். உடனே சுத்திகரிக்கப்பட்ட மேலுடை, கையுறை அணிந்து கொள்ளுங்கள்'' என்றார்.

''நான் இந்த நாட்டில் என் சிகிட்ச்சை பற்றிப் பேசத்தான் வந்தேன். அதைச் செய்து காட்ட அல்ல.''

''மன்னிக்க வேண்டும். முன்கூட்டியே தெரிவிக்க முடியவில்லை. இன்னும் அரை மணிக்குள் ஆபரேஷன் தொடங்கி விட வேண்டும்.''

செபாஸ்டியன், இரு மானிட்டர்களைப் பார்த்தார். அப்போது இன்னும் எல்.சி.டி. திரைகள் வரவில்லை. காகித உருளைகளில் பேனா வரைந்து கொண்டே போகும். நோயாளி இன்னும் உயிருடன் இருந்ததற்கு அந்தக் காகிதச் சுருள்கள் சாட்சி.

செபாஸ்டியன் உடனே பக்கத்து அறைக்குச் சென்று உடை மாற்றிக் கொண்டார். ஆபரேஷன் மேஜைக்கு வந்தார். நோயாளியின் முகம் தெரியாதபடி மூடியிருந்தது.

''இவருக்கு மயக்க மருந்து தராது சிகிச்சை செய்ய முடியாது. முகத்தை மூடியிருப்பதை எடுத்து விடுங்கள்'' என்றார்.

''தேவையில்லை. நோயாளியின் முகத்

''இந்த ஒரு படத்தோட நீங்க ஓஹோன்னு வரப் போறீங்க பாருங்க!''

''எப்படி சார் சொல்றீங்க?''

''இதில் உங்களுக்கு 'போலிச் சாமியார் வேடம்னா' பாருங்களேன்!''

- அதிரை புகாரி



தைத் திறக்காமலே சிகிச்சை செய்து விடலாம். மயக்க மருந்து தர ஒருவர் காத்திருக்கிறார்.''

''எனக்கு விவாதத்தில் ஈடுபட விருப்பமில்லை. ஆனால் அடையாளம் தெரியாத நோயாளிக்கு நான் சிகிச்சையளிக்க முடியாது.''

செபாஸ்டியன், தன் முதுகில் ஒரு கைத்துப்பாக்கி முட்டுவதை உணர முடிந்தது.

''என்னைக் கொன்றால் இந்த நோயாளியைக் காப்பாற்ற முடியாது. என்னால் அடையாளம் தெரியாத நபருக்கு சிகிச்சை அளிக்க முடியாது.''

அந்த மருத்துவர்கள் புரியாத மொழியில் விவாதம் செய்தார்கள். ''நோயாளியின் அடையாளம் தெரிந்துவிட்டால் நீங்கள் உயிருடன் ஊர் திரும்ப முடியாது.''

''மன்னிக்க வேண்டும். நான் முகத்தைப் பார்த்தேயாக வேண்டும்.''

மயக்க மருந்து தரவிருந்த நிபுணர் நோயாளியின் முகத்திரையை விலக்கினார். அது தருஸ்யாவின் சர்வாதிகாரியான ஜானின் முகம். ஜான் உடல்நலமில்லாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது அந்த அறையிலுள்ள ஐந்து நபர்களைத் தவிர யாருக்கும் தெரியாது. எவ்வளவு நாட்களாக அந்த மனிதன் இப்படிக் கிடக்கிறான்?

இப்படியுள்ள கதை கொண்ட திரைப்படத்தைப் பார்த்தவுடன், பூபதிக்கு இந்திராகாந்தி மரணம் நினைவுக்கு வந்தது. பிபிசிக்காரர்கள் பன்னிரண்டு மணிக்கே உயிர் போய்விட்டது என்றார்கள். ஆனால், இந்திய அரசு மாலை ஆறே காலுக்குத்தான் மரணச் செய்தியை ஒலிபரப்பியது.

பூபதிக்கு மனம் குழம்பியது. உலகப் பிரசித்தி பெற்றவர்கள் சாவு விஷயத்திலேயே உண்மையறிய முடியாதபடி இருந்தால், சாதாரண ஏழை எளிய மக்கள் கதி என்ன? எவ்வளவு பேர் எங்கெங்கு படுகொலை செய்யப்பட்டு நடுக்காட்டில் வீசப்



''போன வருஷம், இதே மாதிரி அரிசி திருட்டுக் கேஸில், நீதானே தண்டனை அடைஞ்சே. மறுபடியும் ஏன் திருடினே?''

''ஒரு மூட்டை அரிசியை எத்தனை காலத்துக்குச் சாப்பிட முடியும் எஜமான்!''

- கோபி.ஜி.கே.எஸ். மூர்த்தி

படுகிறார்களோ?

பூபதிக்குத் தெருவில் நடப்பதற்கே அச்சமாக இருந்தது. சாலை விபத்து என்று தினம் ஐம்பது அறுபது நிகழ்கிறது. இதில் எவ்வளவு உண்மையான விபத்து, எவ்வளவு திட்டமிட்டு நடத்தப்படுவது?

திரைப்படத்தில் அந்த செபாஸ்டியன் என்ற இதய சிகிச்சை நிபுணர், கழிப்பறை ஜன்னல் வழியாக வெளியே குதித்துத் தோட்டத்து மரங்களின் நிழலில் பதுங்கிப் பதுங்கி மாளிகையிலிருந்து வெளியேறி வேகமாகச் சாலையில் நடக்கிறார். ஓடினால் யாருக்கும் சந்தேகம் வரும். அந்த நாட்டின் மொழி ஒரு சொல் தெரியாது. அவர் எப்படித் தப்ப முடியும்?

ஆனால், அது திரைப்படம். ஒரு நாடக நடிகை செபாஸ்டியனை நாடக ஒப்பனை அறைக்கு அழைத்துச் சென்று, அவருடைய முகத் தோற்றத்தைச் சிறிது மாற்றி விடுகிறாள். அதன் பிறகு அவரை நாட்டு எல்லைக்கு அழைத்துச் சென்று பெரும் ஆபத்துக்களுக்கு இடையில் அவரைத் தப்ப வைத்து விடுகிறாள்.



''இன்னிக்கு மளிகைச் சாமான், ரேஷன் வாங்கி வரணும்னு திரும்பத் திரும்பச் சொன்னேன். சினிமாவுக்குப் போயிட்டு ஏழு மணிக்கு வீட்டுக்கு வர்றீங்களே?''

நிஜ வாழ்க்கையில் இந்த மாதிரியான ஆபத்துக்களிலிருந்து தப்ப முடியுமா? இந்த நாட்டிலேயே எவ்வளவு பேர் ஆண்டுக் கணக்கில் சிறைகளில் இருக்கிறார்கள்? இவர்களுடைய சிறைவாசத்தின்போது இறந்துவிட்டால் என்ன செய்வார்கள்? சிறையிலேயே புதைத்து விடுவார்களா? மனைவி மக்களிடம் உடலைத் தருவார்களா? உயிரோடிருந்தபோது உறவினர் துளிப் பால் கூடத் தந்திருக்க முடியாது. சிறிது வசதியுள்ள குடும்பமாயிருந்தால், சாகும் தருணத்தில் கங்கை நீர் என்று விடக்கூடும். ஆனால் சிறையிலேயே செத்து விட்டால்?

பூபதி ஒரு திரைப்படம் தன்னை இந்த அளவுக்குக் கலக்கி விடக்கூடும் என்று நினைத்ததில்லை. பேய் பிசாசுக் கதைகள் வெகு எளிதில் மனதை விட்டு அகன்று விடுகின்றன. ஏதோ வெளிநாட்டில் நடந்தது அல்லது நடக்கக்கூடும் என்ற எண்ணத்தில் இப்படம் தயாரிக்கப்பட்டிருக்கும். ஒருவிதத்தில் இது வருவதை முன்கூட்டியே கூறுவது போல இருந்தது. இப்படம் வெளிவந்த பிறகுதான் ரஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலின் இறந்தான்.

ஆனால், அவன் எப்போது இறந்தான், என்ன நோய் கண்டு இறந்தான் என்று அந்த நேரத்தில் உலகுக்குத் தெரியாது. இப்போதும் தெரியாது. ஸ்டாலின் இருந்தபோது நடுநடுங்கிக் கொண்டிருந்தவர்கள் அவன் இறந்து மூன்றாண்டுகள் வரை அதே நடுநடுக்கத்தில் இருந்தார்கள். அதன் பிறகு ஒரு விமர்சனம், அப்புறம் இன்னொன்று, அப்புறம் ஸ்டாலின் மகனே தந்தைக்கு எதிராகப் பேசிக் கடைசியில், அந்த நாடே கோஷ்டி கானம் போல ஸ்டாலினை வைது தீர்த்தது. ஆனால், அவன் எவ்வளவு சாமர்த்தியசாலியாக இருந்தால் ரஷ்யா போன்ற மிகப் பெரிய நாட்டை அமைதிக் காலத்திலும் போர்க் காலத்திலும் அவனுடைய கட்டை விரலுக்கடியில் முப்பது ஆண்டுகள் வைத்திருக்க முடியும்? எது நிஜம்?

பூபதி வீட்டில் நுழைந்தவுடன் அவனுடைய மனைவி, ''இன்னிக்கு மளிகைச் சாமான், ரேஷன் வாங்கி வரணும்னு திரும்பத் திரும்பச் சொன்னேன். சினிமாவுக்குப் போயிட்டு ஏழு மணிக்கு வீட்டுக்கு வர்றீங்களே?'' என்று கத்தினாள்.

பூபதிக்கு வீட்டு உண்மையைக் கூட எளிதாகத் தெரிந்து கொண்டு விட முடியாது என்று தோன்றியது. ●

உனக்கு 28; எனக்கு 68

அனிதாகுமார்

வயதான தாயாரிடம் கோபமாகக் கத்திக்கொண்டிருந்தான் செல்வா.

''உங்களுக்கு வயசாச்சே ஒழிய கொஞ்சங்கூட... என்ன பேசறோங்கிறதைப் புரிஞ்சுதான் பேசறீங்களா...?''

''புரிஞ்சுதான்டா பேசறேன். உன்னைத் தனிக் குடித்தனம் போன்னு சொன்னதுல என்ன தப்பு?''

''உங்களை வயசான காலத்துல தனியாத் தவிக்க விட்டுட்டுத் தனிக்குடித்தனம் போக மாட்டேன்... போக மாட்டேன்!'' உறுதியாகச் சொன்னான்.

''செல்வா, அம்மா என்னோட அனுபவத்துலிருந்து சொல்றேன். கூட்டுக் குடித்தனம்ங்கிறது ஒ'ட்'டுதல் இல்லாத வெறுமையான கூடு! நீயா... நானா? போட்டி இருந்துகிட்டே இருக்கும். உப்பு சப்பில்லாத விஷயத்துக்கெல்லாம் மனசுக்குள் பகைச்சுகிட்டு, ஆளாளுக்கு ஒரு பக்கம் முகத்தைத் திருப்பிகிட்டிருக்கிறது எல்லாம் நமக்குத் தேவையா? அம்மாவுக்கும் பொண்டாட்டிக்கும் நடுவுல இடி வாங்கி இடி வாங்கி, உன்னோட உண்மையான குணம் சுத்தமா மாறிப் போயிடும். ஊர் உலகத்தைப் பத்திக் கவலைப்படாதே. நானும் உன் மனைவியும் என்னிக்கோ ஒரு நாள், ஒருத்தரை ஒருத்தர் பார்க்கும்போது சிரிச்சுப் பேசிகிட்டா அதுதான்டா உனக்கு மனநிறைவைத் தரும். அந்த ஒரு மன நிம்மதியோடு நீ வாழணும்னு நான் ஆசைபடறேன்பா!''

செல்வாவின் கண்கள் பனித்தன. ○



"ஃபிலிம் இன்ஸ்டிட்யூட்டில் படிப்பை முடித்தவர்கள் திரைப்படத் துறைக்குதான் செல்ல முடியும். ஆனால், அந்தப் படிப்புக்கு இணையான விஷுவல் கம்யூனிகேஷன் படிப்பை மேற்கொள்வோர் ப்ரிண்ட் மீடியா, வீடியோ மீடியா, சாட்டிலைட் சேனல், சினிமா, கார்ட்டூன், அனிமேஷன், கேம்ஸ் தயாரிப்பு ஆகிய துறைகளில் வேலை வாய்ப்பு பெற முடியும்'' என்கிறார் சென்னையில் சாஃப்ட்வியூ மீடியா காலேஜ் நிறுவனத்தை நடத்தும் ஆண்டோ பீட்டர்.



தொலைக்காட்சி நிறுவனங்கள், விஷுவல் கம்யூனிகேஷன் படிப்பைக் கற்ற மாணவர்களை வேலைக்கு அமர்த்துவதில் அதிக முனைப்பு காட்ட பல காரணங்கள் உண்டு. நல்ல கான்செப்ட் உள்ள நிகழ்ச்சியைத் தயாரித்து அளிக்க, அவர்களால் முடியும் என்ற நம்பிக்கை. தவிர, இவர்கள் புதிய சிந்தனையைக் கொண்டவர்களாக இருக்க வாய்ப்பு அதிகம். முக்கியமாக 'செய்திகள்' பிரிவில், துடிப்பான மாற்றங்கள் அவர்களால்தான் உண்டாக்க முடியும். தொலைக்காட்சி நிர்வாகத்தில் அலுவலகப் பிரிவு, நிகழ்ச்சித் தயாரிப்பு மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகள் உள்ளன. இந்த நிர்வாகப் பிரிவுகளுக்கான மீடியா மேலாண்மையைப் பெற விஷுவல் கம்யூனிகேஷன் அறிவு மிகவும் பயன்படும். வெளிப்புறப்படப்பிடிப்புகளுக்கான தேர்வு, அது குறித்த தேவைகள் மற்றும் அதற்கான பட்ஜெட் ஆகியவற்றைத் தயாரிக்க, விஷுவல் கம்யூனிகேஷன் கல்வி அறிவு உதவும். டாக்குமெண்டரி திரைப்படங்கள் மற்றும் குறும்படங்களைப் புதிய சிந்தனையுடன் இயக்க, விஷுவல் கம்யூனிகேஷன் மாணவர்களால் முடியும். இத்துறையில் 6000 முதல் 30000வரை, சாதாரணமாக மாத ஊதியம் பெறுகிறார்கள். ஆனால் இரவு பகல் பாராது, எந்நேரமும் பணியாற்றும் மனப்பாங்கு தேவை'' என்றவர், கம்ப்யூட்டர் துறையில் இருக்கும் முக்கியமான வேலைகள் சில குறித்தும் பேசினார்.

கம்ப்யூட்டர் கேம்ஸ் வடிவமைப்பாளர்: வரைதலில் ஆர்வம் கொண்டிருப்பவர்களுக்கு இப் பணி மிகவும் ஏற்றது. வடிவமைப்பு, ஆர்க்கிடெக்சர் போன்றவற்றில் இருக்கும் அறிவு கூடுதல் பலம். புரோகிராமிங் அறிவு பெற்றிருந்தால், வடிவமைப்பின் போது ஸ்கிரிப்டிங் செய்ய உதவியாக இருக்கும். 3-டி கிராஃபிக்ஸ்களை நொடிப்பொழுதில்

உருவாக்க முடியாது. ஆகையால் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சிகளுக்கு, உடனுக்குடன் இவற்றைத் தயாரிக்க முடியாத நிலை உள்ளது. அந் நேரங்களில் 2-டி அனிமேஷன்களையே உடனுக் குடன் செயல்படுத்த முடியும். கிராஃபிக்ஸ் மற்றும் அனிமேஷன் உலகில் நாம் உடனடியாக வேலை வாய்ப்பைப் பெற, லேட்டஸ்ட் கோர்ஸ் படித்தால்தான் நமக்கு வெற்றி கிடைக்கும். அனிமேஷன் மாணவர் களுக்கு நவீனத்தை அளித்திட, சென்னை சிஎஸ்சி சாஃப்ட்வியூ நிறுவனம் எம்டிஜிஏ (மாஸ்டர் டிப்ளமோ இன் கிராபிக்ஸ் அண்டு அனிமேஷன்) என்ற ஓராண் டுப் பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

3 டி கிராபிக்ஸ் மாடலிங் டிசைனர்: இதற்கு கணினி வரைகலையில் அடிப்படை அறிவு அவசியம்.

3 டி வடிவமைப்பாளர்: பொதுவாக வரைதலில் ஆர்வம் கொண்டிருப்பவர்களுக்கு இப்பணி மிகவும் ஏற்றது. பி.எப்.ஏ. மற்றும் எம்.எப்.ஏ. மற்றும் விஷுவல் கம்யூனிகேஷன் படிப்பு தேவை. ஆர்க்கிடெக்ச்ர் மற்றும் இன்ஜினியரிங் துறை போன்றவற்றில் இருக்கும் அறிவு, இப்பணிக்குக் கூடுதல் பலம்.

கான்ஸப்ட் ஆர்டிஸ்ட்: கதைக்களம், கருத்துக் களம், உருவ அமைப்புகளுக்கு ஏற்றவாறு விரை வாகக் கையால் வரைவது. இந்தப் படங்களின் அடிப்படையிலேயே கிராஃபிக்ஸ் கேரக்டர்கள் தயாரிக் கப்படுகின்றன.

ப்ரோகிராமர்: பொறியியல் மற்றும் கலைக் கல்லூரியில் பட்டம், கம்ப்யூட்டரில் ஜாவா, டாட் நெட், டைரக்டர், ஃபிளாஷ் அக்ஷன் ஸ்கிரிப்ட், பிளாஷ் லைட் 3டி மாக்ஸ், மாயா முதலானவை தெரிந்திருக்க வேண்டும். கற்பனைத் திறன் 3டி துறைக்கு மிகவும் அவசியம்.

ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் வல்லுநர்: திரைப்படக் காட்சி, கதாபாத்திரம் மற்றும் கிராஃபிக்ஸ் எஃபெக்ட் ஸைப் பின்னிப் பிணைத்துத் தத்ரூபமாகச் செய்யும் சிந்தனையாற்றல் தேவை. இதற்கு மாயா, கம்பஷன் மற்றும் ஃபயர் ஆகிய மென்பொருட்களில் நல்ல தேர்ச்சியும் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

வெப் டிசைனர்: நாமே சொந்தமாக முழுப் பொறுப் பில் இணையத்தை அழகுபட வடி வமைத்து, சர்வரில் பதிவு செய்திடும் பணி. எச்.டி. எம்.எல்., எக்ஸ். எம்.எல், எஃப்.டி.பி, ஃபிளாஷ் மற்றும் போட் டோஷாப் ஆகிய ஸாஃப்ட்வேர்கள் குறித்து ஆழமாகத் தெரிந்திருக்க வேண்டும். வாடிக்கையாளரின் படைப் பாக்க விளக்கத்தை அறிந்து செயல்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

விளம்பரத் துறை: அயல்நாட்டு மற்றும் இந்தியப் பல்கலைக் கழகங் கள், விளம்பர இளநிலைப் பட்டப் படிப்பை சிறப்புப் பட்டமாக நடத்து கின்றன. சான்றிதழ், பட்டயம் மற்றும் பட்டப் படிப்புகள், அச்சு மற்றும் காட்சி ஊடகங்களுக்கு ஏற்றபடி பாடத்திட் டங்கள் தயாரிக்கப்பட்டு நடத்தப்படு கின்றன. எம்.பி.ஏ. முதுநிலைப் பட்டப் படிப்பில் விளம்பரத்துறை மற்றும் விளம்பர ஆராய்ச்சித் துறை முக்கியத் துவம் பெற்று வருகிறது.

மீடியா படிப்புகளைக் கற்க சென்னை லயோலாக் கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்தைத் தொடர்பு கொள்ளவும். செய்முறைப் பயிற்சியாக மீடியா கல்வியைக் கற்க எங்கள் 'சாஃப்ட்வியூ மீடியா காலேஜ்' போன்ற அமைப்புகளை அணுகலாம்'' என்கிறார் ஆண்டோ பீட்டர்.

- ஜி.எஸ்.எஸ்.



✱ ஆண்டோ பீட்டர்

ம்ப்யூட்டர் அறிவு!

ஆபாசம் எழுதுவோரை நாடு கடத்துவோம்!

-அர்ஜுன் சம்பத்

லீனா மணிமேகலையின் கவிதைத் தொகுப்பு ஒன்று ஆபாசமாக இருப்பதாகச் சொல்லி, அதைத் தடைசெய்யவும், அவர் மீது நடவடிக்கை எடுக்கவும் சென்னை காவல்துறை ஆணையரிடம் மனு கொடுத்திருக்கிறது இந்து மக்கள் கட்சி. அதன் தலைவர் அர்ஜுன் சம்பத்திடம் பேசினோம்...



✱ அர்ஜுன் சம்பத்

"இந்தக் கவிஞரது குறிப்பிட்ட கவிதைத் தொகுப்பு சமீபத்தில்தான் கைக்குக் கிடைத்தது. அதில் சில கவிதைகளைப் படித்தவுடன், ஆபாசத்தின், அருவருப்பின் உச்சம் எனத் தெரிந்தது. ஒரு பெண் இத்தனை ஆபாசமாக எழுத முடியுமா? என்ற அதிர்ச்சிக் கேள்வி என்னைத் தாக்கியது. இவர் மட்டுமல்ல சுகிர்த ராணி, மாலதி மைத்திரி, குட்டி ரேவதி... ஆகியோரும் இந்த கும்பலில் இருப்பவர்கள்தான். பாரம்பரியமாக நாம் கட்டிக்காத்து வரும் குடும்ப அமைப்பு முறையைத் தகர்க்கும் வகையில் இவர்கள் பேச்சும், செயலும், எழுத்தும் இருக்கின்றன. வெளிநாட்டில் வாழும் தமிழர்கள், இவர்களைப் பெண் உரிமை பேணுபவர்கள் என்ற தவறான கருத்தோட்டத்தில், கூட்டங்களில் பேசவும் அழைக்கிறார்கள். அங்குள்ளவர்கள், ஓஹோ, தமிழ்நாட்டில் பெண்கள் இப்படித்தான் போலிருக்கிறது என்ற தவறான அபிப்ராயத்துக்குத் தள்ளப்படுகிறார்கள். இவர்கள் மூலம் மற்றொரு பேராபத்து என்னவென்றால், நல்ல பல சக பெண் சிந்தனையாளர்கள் மற்றும் கவிஞர்களிடத்திலும் தங்கள் தீய சிந்தனைகளை விதைத்து, அவர்களையும் பாதிப்புக்கு உள்ளாக்குகிறார்கள். இதற்கெல்லாம் துவக்கம் கவிஞர் சல்மா எனலாம். இவர் எழுதிய 'இரண்டாம் ஜாமம்' இந்த ஆபாசப் போக்கின் ஊற்றுக்கண். இதை ஆஸ்திரேலியாவில் ஆராய்ச்சி

கலாசா

அ.மார்க்ஸ்



"கதையோ கவிதையோ ஆபாசமாக இருந்தால், அதைக் கண்டிக்க உரிமை உண்டு. அதேநேரத்தில் உடலைச் சுமையாகவும், இழிவாகவும் சித்தரித்துக் கொண்டிருந்த சனாதனத்துக்கு எதிரான கலகக் குரல் என்று அந்த எழுத்துகளைக் கொண்டாடவும் உரிமை உண்டு. ஆபாசம் என்பது அவரவர் பார்வையைப் பொறுத்த விஷயம். புராணக் கதைகளில் இடம் பெறும் சிலவற்றையும் ஆபாசம் என்று கூற முடியும். ஆனால், அவற்றை எதிர்த்து இந்து மக்கள் கட்சி போராடாது. அதில் சொல்லப்பட்டதுபோல மக்கள் அன்றாட வாழ்வில் நடந்துகொள்வதுமில்லை.

“நாங்கள் கலாசாரக் காவலர்கள்தான்!”

செய்கிறார்களாம். இதுபோன்ற ஆபாசம் எழுது வோரை நாடு கடத்த வேண்டும். எங்களைப் போன்ற இயக்கங்கள் இது குறித்து ஏதேனும் செய்யவில்லை என்றால் வரும் தலைமுறைதான் கெட்டுக் குட்டிச் சுவராகும். அதேநேரத்தில் கனிமொழி, தமிழச்சி தங்கபாண்டியன், வைகைச் செல்வி, கீதாஞ்சலி ப்ரியதர்சினி, திலகபாமா, அ.வெண்ணிலா போன்ற தரமான கவிஞர்களும் உள்ளனர். லீனா மணி மேகலையின் கவிதைப் புத்தகம் உடனடியாகத் தடை செய்யப்பட வேண்டும். இல்லையேல் எங்கள் போராட்டம் தொடரும்.

ஆபாசமாக எழுதும் ஆண் எழுத்தாளர்களைக் கண்டு கொள்ள மாட்டீர்களா?

''ஆபாசமாகவும், நமது கலாசாரப் பண்புகளுக்கு விரோதமாகவும் யார் எழுதினாலும் விடமாட்டோம். மகுடேஸ்வரன், சாருநிவேதிதா, ஞாநி... போன்றோர் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லையேல் மாற்றுவோம்.''

எழுத்தில்தான் ஆபாசமா? பெரிய திரை, சின்னத் திரை இல்லையா?

''நித்தியானந்தா ஆபாச வீடியோ விஷயத்தில் சன் தொலைக்காட்சியை எதிர்த்துப் போராட்டம் நடத்தினோம். சிம்புவும், நயன்தாராவும் ஆபாசமான காட்சியில் நடித்த ஒரு திரைப்படத்தை எதிர்த்து, போராட்டம் நடத்தியிருக்கிறோம். ஊடகங்களில் ஆபாசம் எந்தவிதத்தில் நுழைக்கப்பட்டாலும், நாங் கள் எங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்.

காவி கட்டிய சிலர், மக்கள் நம்பிக்கைக்கு வேட்டு வைக்கும் விதமாக நடந்துகொள்கிறார்கள். இதை மீடியா அம்பலப்படுத்தும் போது, 'இந்து மதத்துக்கு எதிரான சதி' என்று சிலர் திசைதிருப்புகிறார்களே?

''நித்தியானந்தா போன்ற போலிகளின் முகமூடியைக் கிழிப்பதில் எந்தவித மௌனமும் இருக்கக்கூடாது. களைகள் பிடுங்கி எறியப்பட வேண்டும்.''

நீங்கள் கலாசார போலீஸா?

● லீனா மணிமேகலை



''தறிகெட்ட ஆபாச, எழுத்து களைச் சட்டத்தின் பரிசீலனைக்குக் கொண்டு வந்து தடை செய்யப் போராடும் அளவில் நாங்கள் கலாசாரக் காவலர்கள். அதே சமயத்தில், காதலுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல.''

-ப்ரியன்

போலீஸைக் கண்டிப்போம்!

இதை எழுது, அல்லது எழுதாதே என்று தடைவிதிப் பதும், காவல்துறை அதிகாரங்களை எழுத்தாளருக்கு எதிராகப் பிரயோகிக்க முயற்சி செய்வதும், வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். மக்கள் ஏற்றுக் கொள்ளாத, எந்த எழுத்திலும், எதுவும் நிலைத்து நிற்காது. ஆபாசமோ இல்லையோ, கருத்துச் சுதந்திரத்தை முடக்கிப்போடும் இந்தப் பழைமைப் போக்கு துவக்கத்திலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்" என்கிறார் எழுத்தாளர் அ.மார்க்ஸ்.

'ஒரு காலத்தில், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் தான் அகில இந்திய நிர்வாகப் பணியிலும் (ஐ.ஏ.எஸ்.) காவல் பணியிலும் (ஐபிஎஸ்) அதிக அளவில் இருந்தார்கள். ஆனால், இப்போது இந்தப் பதவிகளுக்கான தேர்வில் தேர்ச்சி எண்ணிக்கை தமிழகத்தைப் பொறுத்தமட்டில் ஒற்றைப் படை எண்ணில் போய் விட்டதே' - இந்தப் புலம்பல் நான்கைந்து வருடங்களுக்கு முன்னர் தமிழகக் கல்வி மற்றும் நிர்வாக வட்டாரங்களில் கேட்டதுதான். இன்றோ, நிலைமை மாறி, பெரிய மறு மலர்ச்சியே உண்டாகியிருக்கிறது. இதற்கு முக்கியக் காரணம், சைதை சா.துரைசாமியின் மனிதநேய அறக்கட்டளை நடத்தும் இலவச ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி மையம்தான். கடந்த நான்கு வருடங்களில் மட்டும் இங்கு பயிற்சி பெற்ற நாற்பது பேர் இந்தியா முழுவதும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். அதிகாரிகளாகவும், மற்றும் பல்வேறு உயர் நிர்வாகப் பணிகளிலும் இருக்கிறார்கள்'' என்கிறார் சா.துரைசாமி.

இதுபோன்ற இலவசப் பயிற்சி மையம் ஏற்படுத்தக் காரணம்?

''சமுதாயத்துக்குத் தொண்டாற்றிடக் கிடைத்த ஒரு வாய்ப்புதான் அரசியல். கொள்கைகளை உருவாக்குபவர் அரசியல்வாதி; அதைச் செயல்படுத்துபவர் அதிகாரி. எனவே, நல்ல அரசியல்வாதியும், நல்ல அதிகாரியும் இணையும் போது, மக்களுக்கு நிறைய நன்மைகளைச் செய்ய முடியும். நல்ல அரசியல் வாதிகளைத் தேர்வு செய்யும் பொறுப்பு மக்களுடையது. அதேசமயம், நல்ல அதிகாரிகளைத் தேர்வு





ஐ.ஏ.எஸ்

செய்வதில் நம்மால் முடிந்த பங்களிப்பைச் செய்யலாமே என்ற கருத்தோட்டத்தின் அடிப்படையில் உருவானதுதான் இந்தப் பயிற்சி மையம்.''

இலவசப் பயிற்சிக்கு எப்படித் தேர்வு செய்கிறீர்கள்?

''சாதி சமயமெல்லாம் பார்ப்பது கிடையாது. தகுதிதான் அடிப்படை. பொருளாதார நிலையில் கீழே இருப்பவருக்கு முன்னுரிமை உண்டு. கிராமப் பகுதி இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் ஆர்வமும் திறமையும் இருக்கிறது. வாய்ப்புக் கிடைத்தால் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் சாதுர்யமும் இருக்கிறது. ஏழ்மையில் போராடுபவர்கள்தாம் வெற்றிக்காகக் கடுமையான உழைப்பைத் தருவார்கள். இதை உணர்ந்து, எங்கள் தேர்வில் சற்றுத் தகுதி குறைந்தாலும், கணிசமாக கிராமப் புறத்தைச் சேர்ந்தவர்களைத்

தேர்ந்து எடுக்கிறோம். விருதுநகர் கூலித் தொழிலாளி ஒருவரின் மகள் முத்துமாரி, எங்கள் பயிற்சி மையத்தின் மூலம் தேர்வு பெற்றுத் துணை கலெக்டர் அந்தஸ்தில் பணிபுரிவது இதற்குச் சான்று!''

நற்பணி



மறுமலர்ச்சி!

மாணவ, மாணவிகள் சந்திக்கும் சவால்கள்?

''கிராமப்புறத்திலிருந்து வருபவர்கள் புத்திசாலிகளாக இருந்தாலும், ஆங்கில அறிவு குறைவாக இருக்கும் காரணத்தால் சற்றுத் தடுமாறுகிறார்கள். இதைச் சரிசெய்கிறோம். மற்ற படி, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., என்று மட்டுமல்லாமல், தமிழக அரசின் நிர்வாகப் பணியான க்ரூப் ஒன்று, இரண்டு ஆகிய தேர்வுகளுக்கும் மாணவர்களைத் தயார் செய்கிறோம். மற்ற பயிற்சி மையங்களில் படித்து ஐ.ஏ.எஸ். மெயின் தேர்வு பாஸ் செய்தவர்களுக்கு, தில்லியில் எங்கள் மாணவர்களுடன் இலவசமாகத் தங்குமிடம் உணவு, உடை ஆகியவற்றைக் கொடுத்து நேர்முகத் தேர்வுக்குத் தயார் செய்கிறோம். பத்தாவது படிக்கும் ஐம்பது ஏழை மாணவர்களுக்கும் ஐ.ஏ.எஸ். தேர்வுக்கான பயிற்சியைத் தருகிறோம் இப்போதிருந்தே.''

எதிர்காலத் திட்டம்?

''இப்போதுதான் விதை ஊன்றப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் பிரம்மாண்டமான ஒரே வளாகத்தில், எல்லாப் போட்டித் தேர்வுகளுக்கும் இலவசமாகத் தங்குமிடம், உணவு மற்றும் பயிற்சி கொடுக்கும் வகையில் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.''

- ப்ரியன்

அந்தப் பாவம் வேண்டாம்

திருச்சி மாவட்டம் தும்பிவாடி என்ற கிராமத்தைச் சேர்ந்த துரைசாமியின் வாழ்வில் திருப்புமுனை என்பது, சென்னைக்குப் படிக்க வந்ததுதான். உயர்கல்வி படிக்க முடியாத நிலையில், அரசியல் சூழல் இவரை எம்.ஜி.ஆரின் தொண்டராக மாற்றிவிட்டது. அதன் பயன் ஒருமுறை சைதை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்! எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் முதன் முதலாக ஒரு சுயநிதிக் கல்லூரியைத் துவக்க வாய்ப்பு தேடிவந்தபோது, அதை மறுத்துவிட்டவர் துரைசாமி. ''அனைவருக்கும் கல்வி இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் அன்றே என் மனத்தில் இருந்த எண்ணம்'' என்கிறார். அதேபோல், ஒயின் ஷாப் துவக்க வாய்ப்பு வந்தபோதும், ''அந்தப் பாவத்தை நான் என்றும் செய்ய மாட்டேன்'' என்று ஒதுங்கிக் கொண்டவர் இவ

''இந்தக் காலத்துல வேர்க்கடலை வறுக்கற 'டகடக' சத்தத்துக்கும், அந்தக் காலத்து சென்னை மக்கள் பயணம் பண்ணுன ட்ராம் வண்டி சத்தத்துக்கும் இம்மியளவுகூட வித்தியாசமில்லை. 1940-களில் (இரண்டாம் உலகப் போர்கள் நடைபெற்ற சமயம்) சென்னை நகரத்தின் மீது விமானம் பறந்தால் மக்களெல்லாம் ஓடி ஒளிவார்களாம். பச்சையப்பன் கல்லூரி நிறுவனர் பச்சையப்ப முதலியார், சௌகார்ப்பேட்டை கூவம் ஆற்றில் தினமும் குளித்து விட்டுத்தான் கல்லூரிக்குப் போவாராம்'' - சென்னை குறித் தான தகவல்களை ஆச்சர்யங்களோடு அடுக்குகிறார் 'மதராசப்பட்டினம்' படத்தின் இயக்குநர் விஜய். ஏற்கெனவே 'கிரீடம்', 'பொய் சொல்லப் போறோம்' என்ற வெற்றிப் படங்களில் சிக்ஸர் அடித்தவர். ஒரு வெள்ளைக்காரப் பொண்ணுக்கும், சலவைத் தொழில் செய்யும் பையனுக்கும் இடையே உறைபனியாய் திரை கட்டிநிற்கும் காதல்தான் கதை. 1940-களில் நடக்கும் கதையில், 1947 ஆகஸ்ட் 15 அன்றுதான் க்ளைமாக்ஸாம்.

''மதராசப்பட்டினம் ஆர்ட் ஒர்க் அதிகமாகத் தேவைப்பட்ட படம். அந்தக் கால மௌண்ட் ரோடு, கூவம் ஆறு, ட்ராம் வண்டி எல்லாத்தையும் ஃபிலிம்ல கொண்டு வர்றது சாதாரண விஷயம் இல்லை. இதை எல்லாத்தையும் கேளம் பாக்கத்துல செட் போட்டுத்தான் படம் பிடிச்சோம். புகைப்படத்துல மட்டுமே பார்த்து ரசிச்ச மெட்ராஸ்ல, வாழ்ந்து பார்த்த அனு பவம் வார்த்தைகளால் விவரிக்க முடியாது'' என்று சொல்கிறார் விஜய். ''இன்றைக்குச் சென்னை யில் வாழ்கிற, அறுபது வயதுக்கு மேற் பட்ட அனைவர் மனத்திலும் இருக்கும் ஓர் ஆதங்கம், 'சென்னையை இந்தக் காலத் தலைமுறை நாசம் பண் ணிடுச்சு என்பதுதான்.' நம்ம ளால சென்னைக்கு ஏதாவது நல்லது செய்ய முடியும்னா... அது, நகரத்தைச் சுத்தமா வெச்சுக்கறதுதான்'' என்றும் ஃபீலிங் டயலாக் பேசு கிறார்.



சலவை செய்த காதல்!

மதராசப்பட்டினம்



கந்தா படத்துல எழுபத்தொரு சீன்கள் இருக்கு. அவ்வொரு சீனும் ஒரு சிறுகதையைப் போல அமைக்கப்பட்டிருக்கு'' என்கிறார் படத்தின் இயக்குநர் பாபு கே.விசுவநாத்.

''பால்யப் பருவத்தின் பசுமையான நினைவுகளில் ஒன்றாக மாறிப் போகிறவர்கள் பாடம் சொல்லித்தரும் ஆசிரியர்கள். அப்படிப்பட்ட ஓர் ஆசிரியரைத் தேடி அவரிடம் படித்த ஒரு மாணவன் பயணம் போகும் கதைதான் கந்தா'' என்கிறார் பாபு கே.விசுவநாத். படம் முழுக்க முழுக்க தஞ்சையைப் பின்புலமாகக் கொண்டு இயக்கப்பட்டிருக்கிறது. 'அமைதியான தஞ்சை மாவட்டத்தில், அவ்வப்போது அடுக்கடுக்காகத் தலைகள் உருளும். பதிலுக்குப் போலீசாரின் துப்பாக்கிகளும் சில பல குண்டுகளைத் துப்பும். அதற்குப் படுகொலை என்றும் என்கவுண்டர் என்றும் பெயர் சூட்டி விடுவர். ஓர் ஆசிரியர் - மாணவரின் உறவுப் பின்னணியில் தாதாக்களின் வெறியாட்டம் ஊடுருவினால், உயிர் உறையுமல்லவா? அதுதான் திரைக்கதை'' என்கிறார் இயக்குநர்.

பயாஸ்கோப்



ஸ்ரீகாந்த்-ப்ருத்விராஜ் இருவரும் இணைந்து நடிக்கும் 'குற்றப்பிரிவு' படம் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் தயாராகி வருகிறது.

''மக்களுக்காக அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றும் நேர்மையான போலீஸ் அதிகாரிகளுக்கும், சமூக விரோதிகளுடன் சேர்ந்து தேசநலனுக்குக் குழிபறிக்கும் மோசமான அதிகாரிகளுக்குமான ஈகோ யுத்தம்தான் கதை'' என்கிறார் இயக்குநர் மன்மோகன்.

• வி.ஜி.சத்தியநாராயணன், நங்கநல்லூர்

கொசுவுக்கும், மனைவிக்கும் என்ன ஒற்றுமை?

கொசு மெய்யைக் கடிக்கும். கொசுவும் கையைக் கடிக்கும். மனைவிக்கு ஆரம்பம் First-night... கொசுவுக்கு முடிவு Good-night!

• என்.கோமதி, நெல்லை

தங்கம் மட்டும் கண்டு பிடிக்கப்படாமலிருந்தால்?

ஒல்ட் ஈஸ் ஒல்டாகவே இருக்கும். எனது கோயம்புத்தூர் பெரியம்மாவுக்கு பிளாட்டினம் என்று பெயரிட்டிருப்பார்கள்!

• ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி

தாய்க்குப் பின் தாரம்... தாரத்துக்குப் பின்?

சந்தேகமே வேண்டாம். வேறு யார்? கைகட்டி வாய்பொத்தி நிற்கும் நாம்தான்!

• ரேவதிப்ரியன், ஈரோடு

போதை வஸ்துக்களை தேவர்களும் உபயோகப்படுத்தியதாகப் புராணங்கள் கூறுகிறதே?

இது எனக்கு நீங்க சொல்லித்தான் 'தெரிய புராணம்'... ஆனால் போதையால் தேவர்களுக்கு hang-over வராது. அவங்க ஏற்கனவே வானில் hanging over!

• என்.காளிதாஸ், சிதம்பரம்

நாகேஷ் விட்டுச் சென்ற வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியவில்லையே?

நாகேஷ் சார் விட்டுச் சென்றது வெற்றிடமல்ல. வெற்றி-இடம். நகைச்சுவை விளைநிலம்... வேளாண்மை தெ தவர்கள் பயிரிட்டுப் பயன் பெறலாம்!

• மஞ்சு வாசுதேவன், அயிரோலி

மௌனத்தின் மொழி என்னவோ?

சங்கட மௌனமாயிருந்தால் worryயா சம்மத மௌனமாயிருந்தால் சரிய்யா...

• அ.முரளீதரன், மதுரை

பிற மொழிக் கலப்பின்றி ஒரு வாசக சொல்ல முடியுமா?

நீங்கள் சொன்ன வாசகமே வடமொ யாசகம்!

• மு.மதிவாணன், அரூர்

பேனாவுக்கு வாயிருந்தால்? உங்க கையில் இருக்கும் பேனா பேசினா என்ன பேசும்?



மௌனத்தின் மொழி என்ன?

பேனாவுக்கு வாயிருந்தால் பேனாவா இருக்கும். 'என்னை ஒதுக்கிவிட்டு ச களத்தி கம்ப்யூட்டரை செட்-அப் செய்து விட்டாயே' என்று இங்க் விட்டு அழுது புலம்பி, என்னை 'மசி'ய வைக்கப் பார்க்கும்!

• வெ.ராம்குமார், வேலூர்

வியப்புக்கும், மலைப்புக்கும் என்ன வித்தியாசம்?

காதலிக்காகக் கட்டிய தாஜ்-மஹால் வியப்பு. கட்டிய காதலன் ஷாஜஹானின் காதல் மலைப்பு!

• புவனேஸ்வரி, விழுப்புரம்

தங்கள் மனம் கவர்ந்த எழுத்தாளர்கள் யார் யார்?

என் மனம் கவர்ந்தவர்கள் எல்லோருமே



எழுத்தாளர்கள்தான். எமக்குத் தொழில் எழுத்தை நேசித்தல்!

● **ஜி.முருகன், சேதுநாராயணபுரம்**

ஆண்கள் அடங்குவது தலையணை மந்திரத்துக்கு... பெண்கள் அடங்குவது?

அந்தத் தலையணை மந்திரத்தை உபதேசிக்கும்போது மட்டும்!

● **அ.சு.கிருஷ்ணன், புதுச்சேரி**

நளவெண்பா, கிரேசி வெண்பா ஒப்பிடுக?

முன்னது புகழேந்தியின் நளபாகம். பின்னது கையேந்தியின் கிரேசி மோகம்!

● **த.சத்தியநாராயணன், அயன்புரம்**

அநாமதேய கடிதத்துக்கு 'மொட்டை கடுதாசு' என்ற பெயர் எப்படி வந்தது?

'உன் குடுமி என் கையில்' என்று மிரட்டுபவர்களிடம், குடுமியைக் கொடுத்த நாம் மொட்டையாகிறோம். நாம் பதிலுக்கு அவர்களை மிரட்டி எழுதும் கடுதாசு மொட்டைக் கடுதாசு!

● **அ.ராஜா ரஹ்மான், கம்பம்**

கம்பத்தைக் கடந்து செல்கையில் என்னுடைய ஞாபகம் ஏற்பட்டால்?

'கம்பத்தில்' மோதிக் கொள்வேன்!

● **கே.மோகனசுந்தரம், திருநெல்வேலி**

சுட்டுப் போட்டாலும் சிரிக்க மாட்டேன் என்பவர்களை என்ன செய்யலாம்?

நிக்க வச்சு சுடலாம். குறி தப்பினால் சிரிப்பார்கள்! ○

தமிழ்ப் புத்தாண்டு பலன்கள்

மேஷம்: பொதுப்பலன்: இவ் வருடத் துவக்கமே 'தூள்'தாங்க! சமூக சேவகர்களுக்கு விருதும், அரசியல் பிரமுகர்களுக்குப் பதவியும், உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வும் கட்டாயம் உண்டு. புண்ணிய பூமி, மகான் சந்திப்பு இயல்பாக அமையும். பழைய வழக்கு முடிவுக்கு வரும். நிச்சயம் புது வாகன யோகம் உண்டு.

பலம்: புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். அச்சு, பொறியியல் துறையில் கணிசமான முன்னேற்றம் உண்டு. கலைஞர்களாயிருந்தால், வசந்தகாலம் துவங்கிவிட்டது எனலாம். பூர்விகச் சொத்து தானாக உங்களை வந்தடையும். இது போதாதா?

பலவீனம்: இந்தப் புது வருடத்தில் ஏதுமில்லை.

ரிஷபம்: பொதுப்பலன்: வண்டியில ஸ்டார்ட்டிங் பிராப்ளம்னு சொல்லுவாங்க. அதுபோல வாழ்க்கையில மொதல் எட்டு மாசம் கொஞ்சம் கஷ்டம்தாங்க. அவசரப்பட்டு வேலையை விட்டுவிடும் முடிவுக்கு வரவே கூடாது. எந்தச் சூழலிலும் குழந்தைகள் இடமாற்றம் தவிர்க்க முடியாது. மந்தமான வியாபாரம்.

பலம்: கார்த்திகை மாதம் வந்தால்! உங்க கவலைகள், கரைய ஆரம்பிக்கும். அதுவரை கடவுளின் பாதமே கதின்னு அவனையே மனசுக்குள் நெனச்சிக்கிட்டு இருங்க. கொஞ்சம் பலம் கூடும்.

பலவீனம்: உங்கள் பொருள் திருடு போக வாய்ப்புண்டு - கவனம் அதிமுக்கியம். வாக்குவாதம்! 'உம்'கூடவே கூடாது. கடன் பிரச்னையால் தலைமறைவு வாழ்வும் வரலாம்.

பரிகாரம்: கார்த்திகைவரை நவக்கிர வழிபாடு. பளீஸ், நிறுத்தாதீங்க!

மிதுனம்: பொதுப்பலன்: அற்புதங்கள் நிகழும் ஆண்டாக அமைய இருக்கிறது. நீண்டநாள் தடைபட்ட திருமணம் இவ்வாண்டு நிறைவேறும். உறவினர் ஆதாயம் தேடிவரும். வழக்கு உங்களுக்குச் சாதகமாக அமையும். குழப்பம் தீரும். தேர்வு முடிவுகள் உங்களை குஷிப்படுத்தும்.

பலம்: கல்விக்காக மேல்நாடு செல்லும் யோகம். புதிய தொழில் முயற்சி ஆதாயம் தரும். உத்யோக உயர்வு நிச்சயம் உண்டு. இறக்குமதி-ஏற்றுமதி தொழிலால்... வீட்டில் பணம் வந்து இறங்கி, உங்கள் அந்தஸ்தை இன்னும் ஏற்றிவிடும்.

பலவீனம்: பிறந்த வீடு இடமாற்றத்துக்கு உள்ளாகும். அதைத் தவிர, இந்த வருடம் உங்களுக்கு வேறு சங்கடம் ஏதுமற்ற சந்தோஷ ஆண்டே!

கடகம்: பொதுப்பலன்: 50-50 பிஸ்கட் மாதிரி இன்பமும் துன்பமும் சரி சமமாக இவ்வாண்டு இருக்கும். மறைமுக எதிர்ப்புகள் உண்டு. அயல் தேசப் பிரயாணம் அமையும். உடல்நிலையில் கவனம் வேண்டும். மாணவர்கள் படிப்பில் இன்னும் கூடுதல் அக்கறை காட்ட வேண்டும்.

பலம்: சோஷியல் வொர்க்கர்களுக்கு நற்பெயரும் ஆதாயமும் வரும். எக்ஸ்போர்ட் & இம்போர்ட் பிசினஸ் நல்லா அமையும். எழுத்தாளர்களுக்கு விருது உண்டு. சினிமா/கலைஞர்களுக்கு நல்வாய்ப்பு கூடும்.

நடக்குமென்பார்

பலவீனம்: தந்தை உடல்நலம் பாதிக்கும். மனக்குழப்பம் தொடரும். வியாபாரம் மந்தத் தன்மை அடையும். குழந்தைகளுக்கு இடமாற்றம் ஏற்படும்.

பரிகாரம்: குலதெய்வ வேண்டுதலை உடனே நிறைவேற்றினால் போதும். அச்சக்தி ஆறுதலால் உங்களுடனே அரவணைக்கும்.

சிம்மம்: பொதுப் பலன்: இதுநாள் இருந்து வந்த மனச் சஞ்சலம் தீரும். பண வசதி பெருகும். வீடு மனை வந்து சேரும். அரசியல் செல்வாக்கு கூடும். வழக்குகள் முடிவுக்கு வரும். ஒற்றை வரியில் சொல்றேன்... இந்த வருடம் உனக்கான வருடம்... சந்தோஷமா ஜமாய்ங்க!

பலம்: புதிய தொழில் தைரியமாய்த் துவங்கலாம். சினிமா முயற்சியா? அட! ஆரம்பிச்சிடு. நீதான் ஜெயிப்பே. சமூகத்தில் மதிப்பு கூடும். வெளியூர்ப் பயணம் உண்டு.

பலவீனம்: குழந்தைகள் இடம் மாறுவர். பெரிசா ஒண்ணுமில்ல. 'உம்' பகவானைக் கும்பிட்டுப் படிப்படியா முன்னேறு!

கன்னி: பொதுப்பலன்: பொறுமையும் நிதானமும் கடைபிடித்தால், இவ்வருடத்தைப் பெரும் பிரச்னையிலிருந்து சமாளித்து விடலாம். மறைமுக எதிர்ப்பு வரும். சமாளித்து விடுவீர்கள். மனைவியிடம் வாக்குவாதம் வேண்டாம். கொஞ்சநாள் சிவனேன்னு இருந்து பாருங்களேன்.

பலம்: விசேஷமாக ஒன்றுமில்லை. உங்களின் மனத்திடமும் விடா முயற்சியும் இறை நம்பிக்கையும் சேர்ந்த கலவையால்தான், உங்களுக்கான பலாபலன் அமையும்.

பலவீனம்: வழக்கு தள்ளிப் போகும். வேலைப் பளு அதிகரிக்கும்.

நடக்கும்

தஞ்சை பரத்வாஜ்

பணி இடமாற்றம் தவிர்க்க முடியாது. கூட்டாளி பிரிய நேரிடலாம்.

பரிகாரம்: தற்போது விரையக் காலம் நடைபெறுவதால், ஆஞ்சநேய சுவாமியை தவறாது வழிப்பட்டு வந்தாலே போதும்.

(மற்ற ராசிகள் அடுத்தவாரம்...)




வேலூர்.ம.நாராயணன்
நிலைக்கும் செல்வம்!

பொற்கிழி 4

காசிருக்கும் காரணத்தால் சிலபேர் இங்கே
கற்றவரைத் துச்சமென நினைக்கின் றார்கள்
காசிருக்கும் காரணத்தால் பலபேர் இங்கே
கல்வியினால் என்ன பயன்? என்கின் றார்கள்
தூசிருக்கும் இடமெல்லாம் நோயி ருக்கும்
செல்வமது சேருமிடம் மாசும் சேரும்
மாசில்லாக் கல்வியொன்றே செல்வ மாகும்
மன்பதைக்கே அதனால்தான் பெருமை யாகும்!

படிக்கின்ற காலத்தில் ஊரைச் சுற்றிப்
பொழுதுகளைப் பொறுப்புகளைச் சிதைத்தோர் இன்று
படிக்கவில்லை தம்மக்கள் என்றால் ஏனோ
பதறுகின்றார்! புலம்புகின்றார்! என்ன நீதி?
தடித்தனங்கள் நம்நாட்டில் வளர்வ தும்ஏன்?
தருகல்வி இல்லாமை என்ப தால்தான்!
குடித்தனங்கள் இருள்மூழ்கிக் கிடப்ப தும்ஏன்?
கல்விஎனும் வெளிச்சமிலாக் கார ணந்தான்!

முறையான கல்வியினால் சேர்க்கும் செல்வம்
முப்போதும் நிலைத்திருக்கும்; பயன்கள் நல்கும்!
முறையற்ற நெறிகளிலே சேரும் செல்வம்
மின்னலென மின்னும்;பின் மறையும்! மண்ணில்
நிறைவாழ்வு என்பதெலாம் கல்வி யால்தான்!
நம்மில்பலர் வாழ்வதெலாம் வாழ்வே அல்ல!
அரைகுடங்கள் ஆர்ப்பரிப்பு! அலட்டல்! ஆமாம்!
அறிவுலகம் அன்னவற்றை ஏற்ப தில்லை!

பாடல்: நெய்வேலி நா. செல்வன்

ஜர்கண்டி... ஜர்கண்டி...!

ஆர்.ஆர்.தமன்

''பேசாமல் குமாஸ்தாவாகவே காலத்தை ஓட்டியிருக்கலாம். வேலையைப் பார்த்தோமா, போனோமான்னு இருந்திருக்கும். ரிட்டயராக இரண்டே வருஷம் இருக்கையில், அக்கௌண்டண்ட்டாகப் பிரமோஷன் வாங்கியதால் பெரும் தொல்லை... தன்னையே நொந்துகொண்டார் முகுந்தன். மிக மென்மையானவர். யாரிடமும் அதிர்ந்து பேசாதவர்.

எல்லா ஊழியர்களையும் அதட்டி உருட்டி வேலை வாங்க வேண்டிய அக்கௌண்டண்ட் போஸ்டுக்கு தான் சற்றும் லாயக்கில்லை எனப் புரிந்துகொண்டார். ஆனால் டூ லேட்! ஒருபுறம் வேலை செய்யாமல் டபாய்க்கும் ஊழியர்கள். மறுபுறம் 'ஏன் வேலை நடக்கவில்லை' என நெருக்கும் மேனேஜர். எல்லா வேலைகளையும் தன் தலையில் போட்டுக்கொண்டு, கால நேரம், விடுமுறை எனப் பாராமல் உழைத்து ஓடாகி நொந்து நூலானார். சமாளிக்க முடியாது என்ற நிலை வந்ததும், வீ.ஆர்.எஸ். வாங்கிக்கொண்டார், நிம்மதிப் பெருமூச்சுடன். ஆனால், மாங்குமாங்கென வேலை பார்த்தவரால், வீட்டில் சும்மா இருக்க முடியவில்லை, தவித்துப் போனார்.

அப்போது ஒரு நண்பர், ''முகுந்தன், ஏன் நீங்க திருப்பதிக்குப் போய் 'வாலண்டரி சர்வீஸ்' செய்யக்கூடாது. புண்ணியத்துக்குப் புண்ணியம். பொழுதும் போகும். தங்குமிடம், சாப்பாடு எல்லாம் ஃப்ரீ!'' என்றார். அவ்வளவுதான்! அன்றே திருப்பதிக்குப் பயணமானார்!

''வெல்கம் மிஸ்டர் முகுந்தன்! உங்களுக்கு தர்மதரிசன க்யூவில் டூட்டி. அந்தக் க்யூ நகரவே நகராது. எல்லாரும் அப்படியே நிப்பாங்க. நீங்க 'ஜர்கண்டி'ன்னு சிங்கம் மாதிரி கூவி, அவங்க தோளைப் பிடிச்சு முரட்டுத்தனமா பலம் கொண்ட மட்டும் தள்ளி விடணும். இதுதான் உங்க டூட்டி!'' என்றார் சர்வீஸ் சீஃப்! திகைத்துப் போனார் முகுந்தன். ○





படம் காட்டும் பா.ம.க.

நடிகர் நெப்போலியன், மத்தியில் இணையமைச்சராக இருக்கிறார் என்பதே பலருக்குத் தெரியாது. அந்த அளவுக்கு அவரது செயல்பாடுகள் இருக்கின்றன. இதற்குக் காரணம் அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள துறை. 'சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல்' என்ற இந்தத் துறையின் காபினட் அமைச்சர் முகுல்வாஸ்னிக் என்ற காங்கிரஸ் பிரமுகர். நெப்ஸுக்குக் கோப்புகள் எதுவும் வருவதில்லை. பாராளுமன்றத்திலும் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை. தில்லியில் மேஜையைத் தட்டிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், தமது தொழிலைத் தொடரலாமே என்று சென்னையில்தான் பெரும்பாலும் தங்கி, தமது வியாபார மற்றும் நடிப்புத் துறையைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். கலைஞரின், 'பொன்னர் சங்கர்' படத்தில் முக்கிய கேரக்டரில் நடிக்கும் நெப்ஸ் பற்றி பிரதமர் அலுவலகத்தில் சமீபத்தில் விவாதம் ஒன்று வந்தது. 'அமைச்சர் நடிக்கலாமா; கூடாதா' என்பதுதான் அந்த விவாதத்தின் முக்கியக் கருத்தோட்டம். கடைசியில் சட்ட அமைச்சகத்தின் கருத்துக் கேட்கப்பட, ''எந்த ஊதியமும் பெறாமல் நடிப்பதில் தவறில்லை'' என்று அந்த அமைச்சகம் சொல்லி விட்டது.

தென்மாநில தி.மு.க. அமைப்பாளராக இருக்கும் அழகிரியின் முக்கிய கோரிக்கையில் ஒன்று - தன்னை மதிக்காத கண்டுக்கொள்ளாத ஸ்டாலின் ஆதரவாளர்களான, மாவட்ட செயலாளர்கள்... கருப்பசாமிப் பாண்டியன் (நெல்லை) கே.கே.எஸ்.எஸ்.ஆர். (விருது நகர்) சுபதங்கவேலன் (ராமநாதபுரம்) சுரேஷ்ராஜன் (குமரி) ஆகியோரைப் பொறுப்பிலிருந்து உடனடியாகத் தூக்க வேண்டும் என்பதுதான். அண்ணன் தம்பி மோதலில் இவர்களின் பலி நிச்சயம் என்கின்றனர் உடன்பிறப்புகள். தென் மாவட்டங்களில் உள்ள ஸ்டாலின் ஆதரவாளர்களின் புதிய பட்டியலையும் அழகிரி தயாரித்துள்ளாராம். ''தளபதி இதுபோன்ற சமயங்களில் எங்களுக்கு உதவிக்கு வருவதில்லை'' என்று வருத்தப்படுகிறார் தென் மாவட்டப் பிரமுகர் ஒருவர். தென் மாவட்டக் கூட்டங்களுக்கு வருவதற்கு ஸ்டாலின் தயக்கம் காட்டுகிறார் என்கிறார்கள். ஸ்டாலினின் இந்தப் போக்கால்தான், திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் ஐ.பெரியசாமியும் தேனி மாவட்டச் செயலாளரான மூக்கையாவும் இப்போது அழகிரி பக்கம் தாவிவிட்டார்களாம்.



காதில் விழுந்தவை

– சஞ்சயன்

உலகுக்கே உதவலாம்

உலகின் பல நாடுகளிலும், உலகம் மாசுபடல் மற்றும் வெப்பமாதல் குறித்தான பொறுப்பு அதிகமாக, அதன் ஓர் அங்கமாகச் சுற்றுச்சூழல் கல்வி பரவலாகவே அறிமுகமாகி வருகிறது. நல்ல ஊதியம் மட்டுமின்றி, உலகுக்கு உதவும் திருப்தியையும் அளிக்கக்கூடிய துறை இது.

ஒரு தொழில் நிறுவனம் தொடங்கும் போது, அவர்கள் முதலில் பெறவேண்டிய ஆவணங்களில் ஒன்று, மாசுக்கட்டுப்பாடு வாரியத்திலிருந்து தடையில்லாச் சான்றிதழ். இப்படிப் பெறுவதற்கு என்னென்ன விஷயங்களில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதுகூடச் சுற்றுச்சூழல் அறிவியல் படிப்பின் ஒரு பகுதிதான்.

கழிவுகளை மறுசுழற்சி மூலம், நமக்கு வேண்டிய பொருட்களாக மாற்ற முடியுமா? என்பது குறித்த சிந்தனையையும் இந்தப் படிப்புகள் தூண்டுகின்றன.

ஆலைக் கழிவுகளை (Waste Management) எப்படிக் கையாள்வது என்பதில் கூடுதல் கவனம் தேவையாகிறது. விஞ்ஞான ரீதியில், கழிவு மேலாண்மை முறைகளை அறிமுகப்படுத்திச் செயல்படுத்துவதில் அதிக முனைப்பு காட்டத் தொடங்கியுள்ளனர். எனவே, சுற்றுச்சூழல் தொடர்பான படிப்புகளுக்கு முக்கியத்துவம் ஏற்பட்டு வருகிறது.

சில பொறியியல் கல்லூரிகளில், சுற்றுச்சூழல் பொறியியல் குறித்த கல்வியும் அளிக்கப்படுகிறது.

ஈக்காலஜி, மாசுக்கட்டுப்பாடு, நீர் தொழில்நுட்பம், கடல்வாழ் உயிரினக் கல்வி, கடலோரப் பகுதி மேலாண்மை... என்று பல விதங்களில் கிளைகள் விரித்துப் பரவியுள்ளது சுற்றுச்சூழல் கல்வி. ஒவ்வொன்றிலும் பட்டப்படிப்பும் பட்டமேற்படிப்பும் உண்டு.

பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்புக்குப் பிறகு, பல கிளைகளில் ஸ்பெஷலைஸ் செய்யலாம். உதாரணத்துக்கு இ-வேஸ்ட் மேனேஜ்மெண்ட்.

பேட்டரிகளிலிருந்து கம்ப்யூட்டர் வரை- சுலபத்தில் மக்கிவிடாத இவை பூமிக்குப் பெரும் பாரம். எரித்தாலோ சுற்றுச்சூழலுக்கும் பெரும் பாதிப்பு. இதுபோன்ற பொருட்களை என்ன செய்யலாம்? இதற்குத்தான் மின்னணுக் கழிவுப்பொருள்களுக்கான மேலாண்மைக் கல்வி. இந்திய வணிக மற்றும் தொழில் கூட்டமைப்பு (ASSOCHAM) இதற்கான பயிற்சி வகுப்பு நடத்துகிறது. இந்தோ ஜெர்மன் சுற்றுச்சூழல் திட்ட வரைவில், (ASEM) மனிதவளப் பிரிவு, கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி வகுப்புகள் வழங்குகிறது.



இந்தியாவில் WWF (உலக வனவியல்

தியம்), சுற்றுச்சூழல் சட்டத்திற்கான ல்வியை ஆன்லைனில் வழங்கி, வெற்றி பற்றவர்களுக்கு டிப்ளமா வழங்குகிறது.

மும்பையில், ஐ.ஐ.டி. 'சுற்றுச்சூழல் அறி ியல் மற்றும் பொறியியல் மையம்' என்ற பயரில், ஒரு தனிப்பிரிவாகவே இயங்கி, ற்றுச்சூழல் பொறியியல் கல்வியை அளிக் றது.

பிஎஸ்சி. (என்விரோன்மெண்ட் மேனேஜ் மெண்ட்) பட்டப்படிப்பை முடித்தவர்கள், வேறு சில துறைகளிலும் கூடப் பட்டமேற்



படிப்பு படிக்கலாம். அதாவது, சுற்றுப்புறச் சூழல் அறிவியலில் பட்டப் படிப்பு பெற் றவர்கள், நச்சியல் (விஷம்), உயிரித் தொழில் நுட்பம், உயிரி வேதியியல், நுண்உயிரியல் (Toxicology, Bio Technology, Bio Chemistry, Microbiology) ஆகியவற்றிலும் பட்ட மேற்படிப்பைத் தொடர்வதில் தடையில்லை.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது, நிர்வகிப் பது, சூழல் கேடு நேராமல் தடுக்க என் னென்ன வழி முறைகளைப் பின்பற்றுவது என்பதற்காகத்தான் இந்தப் படிப்புகள் அமைந்துள்ளன. தவிர, ஒரு தொழில் நிறுவனத்தைத் தொடங்கும்போது, கட்டு மானம், இயந்திரம் ஆகியவற்றுக்கு முதலீடு செய்வது போல், மாசுத் தடுப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றுக்கும் போதிய அளவு முதலீடு செய்தாக வேண்டும். இந்தத் தகவல்களை அறிந்துகொள்வதற்கும் மேற் காணும் படிப்புகள் உதவுகின்றன.

ஊதியம் என் **லட்சம் நிச்சயம்!**

கிற அளவிலும் சுற் றுச்சூழல் அறிவியல் படிப்புகள் உற்சாகம் அளிப்பவையாகவே உள்ளன. இதில் பட்டப் படிப்பை முடித்தவர்களுக்கு மாத ஊதியம் சுமார் 20,000/- ரூபாயிலும், பட்டமேற் படிப்பை முடித்தவர்களுக்கு சுமார் 40,000 ரூபாயிலும், ஆராய்ச்சிப் படிப்பை முடித்தவர் களுக்கு சுமார் 65,000 ரூபாயிலும் வேலை கிடைக்கிறது. ஒரு 'லைசென்ஸ் பெற்ற பொறி யாளர்' (licensed engineer) மாதம் ஒரு லட்சம் ரூபாய் கூட ஊதியம் பெற முடி யும்.

எம்.ஈ., எம்.டெக் அளவிலான சுற்றுச் சூழல் கல்வியை டெல்லி, சென்னை, கான் பூர், கரக்பூர் ஆகிய நகரங்களில் உள்ள ஐ.ஐ.டி. கல்வி நிறுவனங்கள் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் அளிக்கிறது. தவிர, பாட்டியாலாவிலுள்ள தாப்பர் இன்ஸ் டிட்யூட் ஆஃப் என்ஜினியரிங் அண்ட் டெக் னாலஜி, சிக்மகளூரில் உள்ள விஸ்வேஸ் வரய்யா தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவை அளிக்கின்றன.

உச்சநீதிமன்ற ஆணைப்படி, பள்ளி மற்றும் கல்லூரிகளில் சுற்றுச்சூழல் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தக் கல்வியை நடத்துவதற்குரிய ஆசிரியர்களுக் கான வேலைவாய்ப்பும் கணிசமாக உருவாகி யுள்ளது.

- ஜி.எஸ்.எஸ்.

படூரா, பூரி, நூடுல்ஸ், பிட்ஸா, பர்கர்... என ரிச்சான உணவுகளைச் சாப்பிடாமல், எளிமையான இட்லிகளைச் சாப்பிட்டால் டாக்டர்களை அணுக வேண்டியிருக்காது.

மூன்று இட்லிகளில் சுமார் 130 கலோரிகள் இருக்கலாம். நியூட்ரிஷன் வேல்யூ அதிகம். புரோட்டின், கார்போஹைட்ரேட் கிடைக்கிறது. கொழுப்பு கிடையாது. எளிதில் ஜீரணமாகிவிடும். பிரேக்ஃபாஸ்ட், லஞ்ச், டின்னர் என எந்தவேளையிலும் தாராளமாக இட்லியைச் சாப்பிடலாம். இது ஒரு ஹோல்ஸம் ஃபுட்!

இட்லி என்பது தமிழர்களின் கண்டுபிடிப்பு, தமிழர் வீடுகளில் நடக்கும் நித்ய வைபவம். காலம் காலமா செய்யறோமாக்கும்... என்பவர்களுக்கு இட்லியின் பின்னணி...

முதன்முதலாக இட்லியைப் பற்றிய விவரம், கன்னட பண்டிதரான சிவக்கோட்டி ஆச்சார்யாவின் 920 ஏ.டி.யில் எழுதியவற்றில் வருகிறது. கறுப்பு உளுந்தை அரைத்துச் செய்தார்கள் என்ற விவரத்தை அடுத்து, கன்னட என்ஸைக்ளோபீடியாவான 'லோகோபகாரா'வில் சற்றே டீடெய்லாகக் கொடுத்திருக்கிறார்கள். கறுப்பு உளுந்தை மோரில் ஊறவிட்டு மையாக அரைத்து, தயிரில் மேலாகத் தங்கி நிற்கும், மோர்த் தண்ணீரில் கரைத்து உணவு சமைத்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதில் அரிசியைப் பற்றிய விவரம் இல்லை. இட்லியின் மெயின் பொருள்!

இந்தோனேஷியா இட்லி!

ஆவியில் வேகவைத்துச் சாப்பிட வேண்டும் என்ற ஸ்டீமிங் டெக்னிக்கை நமக்கு கற்றுக் கொடுத்ததே இந்தோனிஷியர்கள் தானாம். சீன சரித்திரத் தொகுப்பாளரான யுவான் ஸேங் (கண்ணை கட்டறதே பேரு) சொல்லுவது என்னவென்றால், ஏழாம் நூற்றாண்டு வரை இந்தியாவில் ஆவியில் சமைக்கக் கூடிய பாத்திரங்களே கிடையாது. புழக்கத்தில் இல்லை என க்ளியராகக் குறிப்பிட்டிருக்கிறார்.

800-லிருந்து 1200 ஏ.டி. வரை இந்தோனிஷியா அரசர்கள் தென்னிந்தியா வந்த

மைசூர் மல்லிகை இட்லி

தேவையானவை : இட்லி அரிசி - 3 கப், உ. பருப்பு - 1½ கப், சாதம் - ஒரு கைப்பிடி, அவல் - ஒரு கைப்பிடி, தயிர் - 1 கப், உப்பு - தேவையான அளவு.

செய்முறை : அரிசி, உளுந்தை தனித்தனியாக சுமார் 4 மணி நேரம் சற்றே சூடான நீரில் ஊறப்போடவும். முதலில் பருப்பை நன்றாக மையாக அரைத்து எடுக்கவும். பிறகு அரிசியையும் நன்றாகவே அரைத்து இதனுடன் ஊற வைத்து அவல், சாதம், தயிர் கலந்து அரைத்து கொள்ளவும்.

இரு கலவைகளையும் சேர்த்து உப்பு போட்டுக் கலந்து வைக்கவும். சுமார் 10 மணி நேரம் பொங்குவதற்கு வைக்க வேண்டும். இட்லி தட்டில் சிறிது எண்ணெய் தடவி இக்கலவையை ஊற்றி 15 - 20 நிமிடங்கள் வைக்கவும்.

சற்றே ஆறிய பிறகு, நிதானமாக இந்த மல்லிகை இட்லிகளைப் பொறுமையாக எடுக்கவும். சட்னி, சாம்பாருடன் ருசிக்கவும்.

போது, பாத்திரங்கள், சமையல் நிபுணர்களைக் கூட்டி வந்ததுடன், 'கேட்லி' என்ற உணவு வகையையும் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். 'அரைத்து, புளிக்க வைத்துப் பிறகு அவித்து என்ற' டெக்னிக்கின் ஆதாரப் பாடத்தை நமக்குத் தந்திருப்பது இந்தோனேஷியர்கள்.





லதா சேகர்

ஆக மொத்தம் இட்லி + உளுந்து அரைத்து ஆவியில் வேகவைத்து, வெள்ளை வெளேர் இட்லிகளைத் தமிழர்கள் உருவாக்கியிருக்கலாம்.

காஞ்சிபுரத்தில் வரதராஜப் பெருமாளுக்கு நிவேதனமாகப் படைக்கப்படும் குடலை இட்லி வெகு பிரசித்தம்.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது, அரிசித் தட்டுப்பாடு காரணமாக எம்.டி.ஆர். நிறுவனரால் கண்டுபிடிக்கப்பட்டதே ரவே இட்லி. சாதா இட்லி, ரவே இட்லி இரண்டையுமே ஒரு கை பார்க்க பெங்களூரு மாவள்ளி டிஃபன் ரூமில் ஏகப் போட்டி, தினமுமே..! அப்படி ஒரு டேஸ்ட்!

''எங்காத்துப் பிள்ளைக்கு இட்லியும் இளையராஜாவும் இருந்தா போதும்'' என ஒரு அம்மா ஜாதக பயோடேட்டாவில் பெருமையாகக் குறிப்பிட்டாராம்.

இட்லிகளில் பலவிதம் - ப்ளையின் இட்லி, காஞ்சிபுரம் இட்லி, ரவை இட்லி, சேமியா இட்லி, ராகி ஓட்ஸ் இட்லி, பிரெட் இட்லி, டம்ளர் (அ) கடுபு இட்லி, கொள்ளு இட்லி (இது ரொம்ப ஓவர்), அவல் இட்லி... என நூறுக்கும் மேலான இட்லிகள்.

சாஃப்ட் இட்லி பண்ணுவது ஈஸிதான். சில விஷயங்களைச் சேர்ப்பதால் கூடுதல் மல்லிப்பூ இட்லி கியாரண்டி. ●

அஞ்சலில் படிக்கலா
அரியப் படிப்புகள்...

இந்தியக் கல்வியில், கிராம மக்களை மேம்படுத்துவதற்காகத் துவக்கப்பட்ட அஞ்சல் வழிக் கல்வி திட்டம், நகர மக்களிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. யார் வேண்டுமானாலும், எங்கிருந்தும் தமக்கு விருப்பமான பாடத்தில் உயர் கல்வியைப் படிக்கலாம். இதற்க கட்டணம் என்பதும், பெருமளவில் குறைவு.

இந்திரா காந்தி திறந்த வழி பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழி கல்வி பயிலும் ஒன்றரை மில்லியன் மக்களில், பெரும்பாலானோர் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியாவில் பதினைந்து திறந்த வழி பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. ஐம்பத்து நான்கு இன்ஸ்டிட்யூட்டுகளும் இந்த அஞ்சல் வழிக் கல்வியைப் பயிற்றுவிக்கின்றன.

இவற்றில் கலை, இசை, உடற்பயிற்சி தொடங்கி, சில பொறியியல் படிப்புகளும் பாடத் திட்டத்தில் இருக்கின்றன.

தமிழகத்தைச் சேர்ந்த அழகப்பா பல்கலைக்கழகம், சென்னை சைதாப்பேட்டையில் உள்ள மதர்தெரெஸா மகளிர் பல்கலைக்கழகம், பாட்டியாலாவில் உள்ள பஞ்சாபி பல்கலைக்கழகம், மற்றும் திருப்பதியில் உள்ள 'ஸ்ரீ பத்மாவதி மஹிளா விஸ்வ வித்யாலயம்' - இங்கெல்லாம் மகளிர் கல்வியைப் பற்றிய முதுநிலை பட்டபடிப்பு நடத்தப்படுகிறது.

சுற்றுலாத் துறை அபார வளர்ச்சி பெற்று வரும் இந்தத் தருணத்தில், அந்தத் துறையில் ஏற்கனவே தடம் பதித்தவர்களும் சரி, புதிதாக நுழைய விழைபவர்களும் சரி, அழகப்பா பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் இந்திரா காந்தி திறந்த வழி பல்கலைக்கழகங்களில் சேர்ந்து அஞ்சல் வழியில், சுற்றுலாத்துறை மேனேஜ்மென்ட்டில் எம்.ஏ, எம்.எஸ்.சி. மற்றும் எம்.பி.ஏ. மேற்படிப்புகளைப் படிக்கலாம்.



தம்மை மேம்படுத்திக் கொள்ள முனைவர்களால், பெரிதும் விரும்ப படுபவை (அஞ்சல் வழி) பி. ஜி. டிப்ளமா கோர்ஸுகள்... ஹிந்தி மொழிபெயர்ப்பு, ஈ காமர்ஸ், திறந்த வழிக் கல்வியின் இயக்கம், உயர் கல்வி, சுற்றுச் சூழல், மனித உரிமை... இவை போன்ற படிப்புகளைப் பல


பல்கலைக்கழகங்கள் அள்ளி வழங்குகின்றன.

ப்ளம்பிங், மீன் வளர்ப்பு, தோட்டக்கலை, சிறு குழந்தைகள் பராமரிப்பு, ரேடியோவுக்காக எழுதுவது... என இப்படி ஏகப்பட்ட தொழில் சார்ந்த துறைகளில் சான்றிதழ் கோர்ஸ்களையும் திறந்த வழிப் பல்கலைக்கழகங்கள் வழங்குகின்றன.

'பணத்துக்குப் பணமும் மிச்சம்; நேரத்துக்கு நேரமும் மிச்சம். வயது என்பதும் ஒரு தடையே இல்லை' என இப்படி ஏகப்பட்ட ப்ளஸ்களைத் தன்னிடம் கொண்டுள்ளததாலேயே, இந்த அஞ்சல் வழிக் கல்வி என்பது அமோக ஆதரவை மக்களிடையே பெற்றுள்ளது.

- என்.எஸ்.கே.





புதுசா படிக்க, படிச்சதை விரிவாக்க...



எப்படி நோய் எதிர்ப்புச்சக்தி முழுவதும் இழந்த, மரணத்தின் விளிம்புக்குச் சென்று விட்ட எய்ட்ஸ் நோயாளிகளுக்குக் காய்ச்சல் வருவதில்லையோ, அது மாதிரி ஈகோ முற்றிலும் அழிக்கப்பட்ட மனிதன், சமூக நியதிகளைப் (Social Norms) பற்றியெல்லாம் கவலைப்படாமல் இருக்க வாய்ப்பு உண்டு. தீவிரமான மனச்சிதைவு நோயாளி அழுக்கான, நீளமான முடி, தாடியுடன், துண்டு பீடி பொறுக்கிப் புகைத்துக்கொண்டு அலைவதைப் பார்த்திருப்போம். அந்த மனிதருக்குக்கூட ஈகோ அறவே கிடையாது. அவரிடம் சென்று, 'மனநல ஆலோசனை பெறலாமே' என்று சொன்னால், அவரின் ரியாக்ஷன் பெரும்பாலும் கேட்ட கேள்விக்குச் சம்பந்தமேயில்லாமல் இருக்கும். காரணம், அங்கே ஈகோ கிடையாது.

ஆனால், மிதமான மனநலப் பிரச்னைகளை உடையவர்களிடம், அவர்களின் மனோநிலை உணர்ந்து, அவர் நலன் கருதி, அப்படியொரு பரிந்துரை செய்தால், அவரின் ஈகோ எச்சரிக்கை அடைந்து விடும். அதன் விளைவு கீழ்க்கண்ட மாதிரி பேசுவார்.

''அதெல்லாம் தேவையில்லப்பா! போகப் போகச் சரியாயிடும்.''

''பணப்பிரச்னை முடிஞ்சதுன்னா எல்லாம் சரியாயிடும்.''

''அந்தளவுக்கு ஒண்ணுமில்லப்பா! கொஞ்சம் பிஸினெஸ் டென்ஷன்.''

''வேண்டாம்! வேண்டாம்! யோகா செய்ய ஆரம்பிச்சுட்டேன்.''

மற்றொரு வெளிப்பாடு கோபம்.

கோபம் கூட ஒருவித மனோதற்காப்பு உணர்ச்சிதான். கோபம், தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலைத் தற்காலிகமாகவாவது இழக்க வைத்துவிடும்.

''என்னை என்ன பைத்தியக்காரன்னு நினைச்சியா?'' என்றோ, ''நீ பைத்தியம். உங்க அப்பா பைத்தியம். உன் பரம்பரையே பைத்தியம். முதல்ல நீ உங்க



டிப்ரஷன் டிஸ்டர்ப்!

டாக்டர். பி. ஆனந்தன்

குடும்பத்தைப் போய்ப் பாரு'' என்றோ வெளிப்படும். காரணம், நம் சமூகத்தில் மனம், மனநல ஆலோசகர் போன்ற வார்த்தைகளை 'மெண்டல், பைத்தியம், கிறுக்கன்' போன்ற பதங்களுடன் இணைத்துப் பார்த்தே பழகிவிட்டோம்.

மனநோய் பற்றிய ஒரு தெளிவு தேவை.

உண்மையிலேயே, இருப்பது ஒரே ஒரு மனநோய் மட்டுமில்லை, ஒரு மனிதனைப் 'பைத்தியம்' என முத்திரை குத்த! எப்படி உடலில் டைபாய்டு, காசநோய், புற்று நோய் என்று பல்லாயிரக்கணக்கான நோய்கள் இருக்கின்றனவோ, அதேபோல மனதிலும் (உலக சுகாதார அமைப்பின் பட்டியல்படி) முந்நூறுக்கும் அதிகமான மனநலப் பிரச்னைகள் உள்ளன. ஒவ்வொரு நோய்க்கும், நோயின் தன்மையைப் பொறுத்து, சிகிச்சை அளிக்க சில நாட்களோ, சில வாரங்களோ, சில வருடங்களோ ஆகும். உதாரணத்துக்கு டிப்ரஷன் எனும் நோயை எடுத்துக் கொள்வோம்:

கவலை (worry) சோகமானதொரு மனோநிலையைக் கொடுக்கும் தருணம், (sadness) மனஇறுக்கம் (stress tension) போன்ற உணர்வுகளையும் பட்டியலிடலாம். 'இருபது வருஷத்துக்கு முன்னால இவனுக்கு டிப்ரஷன் வந்தது. ஏர்போர்ட்ல கண்ணாடியை எல்லாம் உடைச்சு, ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணி, ஷாக் கொடுத்துதான் சரிபண்ணினோம்' எனவும் கூறுவதுண்டு.

இப்படியாக கவலை, சோகம், இறுக்கம் என அன்றாடம் எல்லா மனிதர்களுக்கும் வந்து போகும் இயல்பான உணர்ச்சிகளைக்கூட டிப்ரஷன் என்றும், கண்ணாடியை உடைத்து முரட்டுத்தனமாக நடந்து கொண்டு ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுக்க வேண்டிய தருணத்தில் இருந்தவர் பாதிக்கப்பட்டிருப்பதும் டிப்ரஷன் எனவும் கூறுவதன் மூலம், டிப்ரஷன் என்ற பதத்தை

மிக மேலோட்டமாக, சரியான அர்த்தம் புரியாமல் பிரயோகிக்கிறோம்.

உண்மையிலேயே, டிப்ரஷன் என்றழைக்கப்படும் மனச்சோர்வு நோய் டைஃபாய்டு மாதிரி, மலேரியா மாதிரி, சின்னம்மை வருவது மாதிரி, மூட்டுத் தேய்மானம் மாதிரி ஒரு மருத்துவப் பிரச்னை (Depression is a medical illness).

ஒரு மருத்துவப் பிரச்னை என்றால் டாக்டரைப் பார்க்கிறோம். இன்னும் ஒரு படி மேலே போய், தொண்டையில் வலி ஏற்பட்டால் காது, மூக்கு, தொண்டை நிபுணரையும் (ENT Doctor), எலும்பு முறிந்து போனால் ஆர்த்தோ டாக்டரையும் பார்க்கிறோம். ஆனால், மனம் என்பது நம் உடலின் செயலியல் (Physiological Process) சம்பந்தப்பட்டது என்பதை எத்தனை முறை விளக்கினாலும், அதற்குரிய டாக்டரைப் பார்ப்பது என்பதை சமூகநாணமாக (social stigma) நினைக்கிறோம்.

''நான் ஹார்ட் பேஷண்ட்.''

''இருபது வருஷமா இன்சுலின் போட்டுக்கிட்டு இருக்கேன்.''

முப்பது வருஷமா 'அல்சர்', 'கேஸ் டிரபிள்', 'ஆஸ்துமா' என்றெல்லாம் இயல்பாக, சமயங்களில் பெருமையாகப்(!) பேசும் நாம், மனநல மருத்துவரைப் பார்க்கச் செல்வதை மட்டும் - ஏதோ தப்பு செய்தவன் போலீசுக்குப் பயந்து ஒளிவதைப் போல, பயந்து, ஒளிந்து செய்கிறோம். காரணம் விழிப்புணர்வு இல்லாமை.

டிப்ரஷன் என்பது டைஃபாய்டு மாதிரி ஒரு நோய்தான்!



டிப்ரஷன் எனப்படும் மனச்சோர்வு காமன் கோல்டு (common cold) என்றழைக்கப்படும் ஜலதோஷம், காய்ச்சல் மாதிரி யாருக்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், ஏற்படும் ஒரு நோய்.

பச்சிளங்குழந்தைகள் முதல் பல் போன தாத்தா வரை, அரசன் முதல் ஆண்டி வரை, அறிவாளி - முட்டாள்; ஏழை-பணக் காரன் படித்தவன் - படிக்காதவன்; பட்டிக்காட்டான் - பட்டணத்தான்; ஐ.ஏ.எஸ். அதிகாரி, டாக்டர், நாட்டையாளும் மந்திரிகள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி, போப்பாண்டவர் - தலாய்லாமா - மகரிஷி, ஓசாமா பின்லேடன், ஒபாமா என.. மூளை இருக்கும் எந்தவொரு மனிதருக்கும் டிப்ரஷன் வர வாய்ப்பு உள்ளது. இவர்களுக்கெல்லாம் காய்ச்சல், இருமல் வருவதற்கு எப்படி சாத்தியமோ அப்படித்தான் டிப்ரஷனும்!

இயல்பாக ஒரு மருத்துவரைப் பார்க்கப் போவது போல, நாம் மனநல மருத்துவரை அணுகுவது கூச்சமின்றி இயல்பாக நடக்கும் சூழல் வரவேண்டும். அதற்குத் தேவை... இன்னும் இன்னும் மனநலம் குறித்தான விழிப்புணர்வும் அதை நோக்கிய நகர்வுதான் இந்தத் தொடர். அதற்கொரு துவக்கமாய் இருந்திருக்கும். நன்றி.

(முற்றும்)

"கல்யாணமான புதிதில் கணவரோடு பம்பாயில் குடித்தனம் இருந்த போது, தெருவில் பையன்கள் எப்போதும் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டே இருப்பேன். கிராமத்திலிருந்து வந்திருந்த எனக்கு, அந்த விளையாட்டு புரியவே இல்லை. கணவரிடம் கேட்டபோது, மிகப் பொறுமையாக, எளிதில் புரியும்படி சொல்லிக் கொடுத்தார். டீ.வி. வந்ததுக்கு அப்புறம் இன்னும் நன்றாகப் புரிந்துகொண்டேன். கணவரைப் போலவே என் இரண்டு பிள்ளைகளும் கிரிக்கெட் ஆட்டக்காரர்களாக இருந்ததால், வீட்டில் எல்லோருக்கும் கிரிக்கெட் நன்றாகப் புரியும். அனேகமாக எல்லா சர்வதேச மாட்ச்களையும் விடாமல் பார்த்திருக்கிறேன்" என்று சொல்லும் சரஸ்வதி வைத்தியநாதன், சச்சினின் அதி தீவிர ரசிகை. சச்சின் விளையாட ஆரம்பித்த நாளிலிருந்து இன்றுவரை, அவரது சாதனைகள் பற்றிய எந்தக் கேள்விக்கும் அனாயாசமாகப் பதில் தரும் இவரின் வயது அதிகமில்லை. எண்பத்தேழுதான்!

"முதலில், கவாஸ்கரின் ரசிகையாகத்தான் இருந்தேன். ஞாபகமிருக்கிறதா 1993 ஹீரோ கப் மாட்ச்? தென்னாப்பிரிக்காவோடு மோதியபோது கடைசி ஓவர் - வெற்றிக்கு ஆறு ரன்கள் தேவை என்ற நிலையில், தயங்கிய அஸாருதின் கையிலிருந்து பந்தை வாங்கி இந்தக் குட்டிப்பையன் (சச்சின்) செய்த பௌலிங்கில், பேட்ஸ்மென் ரன் அவுட்டாக 3 ரன்னில் நாம் ஜெயித்தோமே- அன்றிலிருந்து சச்சின்தான் என்னுடைய ஃபேவரிட்" என்று, ஏதோ போனவாரம் பார்த்த மேட்ச்சைப் பற்றிப் பேசுவது போலப் பேசுகிறார். இரவு ஒரு மணியானாலும், சச்சின் விளையாடினால் கண் விழித்துப் (வீட்டில் மற்றவர்கள் தூங்கினாலும்) பார்த்து கையிலிருக்கும் சிறு பேப்பரில் ஸ்கோர் விவரங்களைக் குறித்துக்கொண்டு, அதை மறுநாள் நோட்டில் எழுதி வைக்கிறார். ஒருமுறை எழுதிய பின்னர், அவர் அந்த விவரங்களை மறப்பதில்லை. இந்த வயதிலும் இந் நினைவாற்றல் எப்படிச் சாத்தியமாகிறது என்றால், "பகவான் அருள்" என்கிறார்.

"ஆஸ்திரேலியாவிலிருக்கும் பேரனைப் போய், பார்ப்பதைவிட சச்சினை நேரில் பார்த்தால் சந்தோஷப்படுவேன்' என்று சொன்ன இவரது பேட்டியை அறிந்து நாளிதழில் படித்த சச்சின், ஐ.பி.எல். மேட்ச்சுக்காகச் சென்னை வந்தபோது, அவரை அழைத்துச் சந்தித்தார். வரும் ஏப்ரல் 24ல்



சரஸ்வதியின் ஆசி... சச்சின் குஷி!

பிறந்த நாள் கொண்டாடும் சச்சினுக்கு, "இன்டர்நேஷனல் கிரிக்கெட்டில் 100 செஞ்சுரி அடிக்க இன்னும் 7 பாக்கியிருக்கிறது, சீக்கிரம் அதைச் செய்ய ஆசிகள்" என்று சொல்லி ஒரு சிறு வெள்ளிப்பிள்ளையாரைக் கொடுத்தபோது, இவரின் காலைத் தொட்டு வணங்கி அதைப் பெற்றிருக்கிறார் சச்சின்!

- ரமணன்









[+] ப்ளஸ்
[-]மைனஸ்=
பெரும்புள்ளி

பா.ஜ.க.வின் அகில இந்தியத் தலைவரான பிறகு, முதன்முறையாக சென்னைக்கு (10.4.2010) வரும் நிதின் கட்கரி, கட்சித் தொண்டர்களையும் குடிசைப் பகுதி மக்களையும் சந்திக்க இருக்கிறாராம்.

ப்ளஸ்

● ஆர்.எஸ்.எஸ்-ஸின் தாயகமான நாக்பூரில் வளர்ந்த நாற்று. அரை நிஜார் பருவத்திலேயே ஸ்வயம் ஸேவக்காகிவிட்டவர்.

● வழக்கறிஞர் ஆக விரும்பி சட்டம் படித்தாலும், மேற்படிப்புக்கு ட்ராக் மாறி காமர்ஸ் எடுத்தது, தொழிலதிபராக வெற்றி பெறக் கை கொடுத்தது.

● ஆர்.எஸ்.எஸ் டு அரசியல் கட்கரிக்கு ரொம்ப சின்ன ஸ்டெப்தான். தியோரஸ், ராஜு பைய்யா போன்ற சீனியர்களின் கண்மணி வேறு; கேட்க வேண்டுமா வளர்ச்சிக்கு?

● சர்க்கரை, எரி சாராயம், மின் உற்பத்தி ஆகிய துறைகளில் லாபம் அள்ளிய தொழிலதிபர் முகமும் இவருக்கு உண்டு.

● கட்கரி, மஹாராஷ்டிர அரசியலில் நுழைந்த வேளை, (மஹாராஷ்டிர பா.ஜ.க. தலைவர்) பா.ஜ.க.-சிவசேனா ஆட்சியைப் பிடித்தது. பொதுப்பணித் துறை அமைச்சராகப் பிளந்து கட்டினார் 38 வயதில்! ஐந்தே வருடங்களில் மும்பையில் 55 மேம்பாலங்கள், மும்பை - பூனே அதிவேக எக்ஸ்பிரஸ் பாதை என்று கண்ணுக்குத் தெரிந்த மாற்றங்கள் மலர்ந்தன! பெரிய,

38 வயதில் 55 மேம்பாலங்கள்.
எங்கே? மும்பையில்...

அசந்துபோன

பெரிய கட்டுமானங்களில் BOT (உருவாக்கி, நிர்வகித்து, அரசுக்கு மாற்றி விடுவது) என்ற முறையைத் துணிந்து புகுத்தியவர். இவரது செயல்பாடு கண்டு ரத்தன் டாடாவே மூக்கின் மேல் விரல் வைத்தார்!

சொல்கிறார் தமிழிசை சௌந்தர்ராஜன்:

சமீபத்தில் இந்தூரில் பா.ஜ.க.வின் தேசியக் கவுன்ஸில் கூட்டம் நடந்தது. தொண்டர்களின் சிறுசிறு தேவைகளைக் கவனிப்பதில் ஆகட்டும்; பத்திரிகையாளர்களை மென்மையாகக் கையாள்வதில் ஆகட்டும்; கடுகடுப்பில்லாத புன்சிரிப்புடன் கூடிய அவரது அணுகுமுறை, தொண்டர்களை ரொம்பவே கவர்ந்து விட்டது.

மைனஸ்

● கட்கரியின் ஜகஜ்ஜாலம் பால்தாக்கரேயிடம் வொர்க் ஆவுட் ஆகவில்லை. ராஜ் தாக்கரேவுடன் லடாய் வேண்டாம் என்று கட்கரி எவ்வளவு சொல்லியும், அவர் ஏற்கவில்லை! சிவசேனாவில் ஏற்பட்ட பிளவு, காங்கிரஸுக்கு வசதியாகப் போய் விட்டது.

● 2009 பாராளுமன்றத் தேர்தலில் தோற்ற பிறகு, தலைவர் ராஜ்நாத் சிங்கை காவு வாங்கப் பெருந்தலைகள் முட்டி மோதிக் கொண்டிருக்க, 'கொண்டு வா கட்கரியை!' என்று ஆர்.எஸ்.எஸ். ஆணை போட்டுவிட்டது! தலைமைப் பொறுப்பு, தேடாமலேயே வந்த அவசர அந்தஸ்து.

● தேசியக் கட்சியான பா.ஜ.க.வில், முந்தைய தலைவர்கள் அளவுக்கு தென் மாநிலங்களில் அறியப்படாத முகம். கட்சி மாநாட்டில் பழைய ஹிந்தி சினிமாப் பாடல்கள் பாடித் தொண்டர்களைக் கவர்ந்ததுபோல், வோட்டுகளைக் கவர்வது சுலபமில்லையே!

- ஸ்ரீநி



ரத்தன் டாட்டா!

உங்கள் மகன் அல்லது மகள் ப்ளஸ் டூ-வை முடித்துவிட்டவுடன், உங்கள் மனத்தில் எழும் கேள்வி இதுதானே? 'பிரபல காலேஜில் இடம் கிடைத்தால் நல்லது? ஆனால், கிடைக்குமா...'

இதற்கான விடைகள் மிக முக்கிய மானவை. உங்கள் வாரிசின் வருங்காலத்தையே கூட இது திசைதிருப்பக் கூடும்.

பல பெற்றோர்களும் மாணவர்களும் பொதுவாகக் கொண்டுள்ள கருத்துகள் ஏன் தவறானவை என்பதற்கு விளக்கங்கள்...

கிராமத்துப் பள்ளிகளில் படித்த இளைஞர்கள், பெருநகரங்களில் உள்ள பெரும் கல்லூரிகளில் சேருவதால், அவர்கள் வருங்காலம் ஓஹோ என்று இருக்கும் அல்லவா?

''பள்ளிகளில் தமிழ் மீடியத்தில் படித்துவிட்டு, பெருநகரங்களின் கல்லூரிகளில் ஆங்கில மீடிய பாடத் திட்டங்களில் திணறும் மாணவர்கள் கொஞ்சநஞ்சமல்ல. போதாக்குறைக்கு, சக மாணவர்கள் ஆங்கிலத்திலேயே பேசுவதைப் பார்த்து மேலும் தாழ்வுமனப்பான்மை ஏற்படலாம். எனவே, உங்கள் ஊருக்கு அருகிலேயே நல்ல கல்லூரி ஒன்றை நாடுவது நல்லது.''

நூறு சதவிகித ப்ளேஸ்மென்ட் என்று அறிவிக்கும் கல்லூரியில் நம் மகனை அல்லது மகளைச் சேர்த்துவிட்டால், அவர்கள் வருங்காலப் பணியைப் பற்றிய கவலை இருக்காது. சரிதானே?

''இந்தச் சதவிகித ப்ளேஸ்மென்ட் என்கிற வார்த்தைகளில் நூறு பலவித ஜாலங்கள் உண்டு. இதற்கு அர்த்தம், சில நிறுவனங்களில், முதல் மூன்று ஆண்டுகளின் தேர்வுகளில் எந்த சப்ஜெக்டுகளிலாவது ஃபெயிலாகியிருந்தால் (அதற்குப் பிறகு அந்த அரியர்ஸை க்ளியர் செய்திருந்தாலும்) அவர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். ஆக 'தகுதியுள்ளவர்களுக்கு நூறு சதவிகித ப்ளேஸ்மென்ட் என்றுதான் அர்த்தம்' என்று கல்லூரி நிர்வாகம் விளக்கம் அளிக்கும். தவிர இப்படி வேலைக்குச் சேர்த்துக்கொள்வதாகக் கூறும் நிறுவனங்கள் எந்த அளவு நிலையானவை, நேர்மையாக நடக்கின்றன என்பனதெல்லாம் கவனிக்கவேண்டிய விஷயம்.''

என்ன கோர்ஸை எடுத்துக்கொள்கிறோம் என்பதைவிட என்ன கல்லூரியில் படிக்கிறோம் என்பதுதான் முக்கியம். அப்படியா?



தப்பு செய்யாதீங்க...

உங்க ஓட்டு எந்த காலேஜுக்கு?

''மாணவருக்கு விருப்பமான கோர்ஸில் படிப்பதுதான் மிக முக்கியம். சுமாரான கல்லூரியில், சிறந்த பிடித்தமான கோர்ஸில் சேருவதுதான் சிறந்த கல்லூரியில் அவ்வளவாகப் பிடிக்காத கோர்ஸில் சேருவதை விடப் புத்திசாலித்தனம்.''

கல்லூரிகளின் வலைத்தளங்கள் மற்றும் அவை அளிக்கும் தகவல் ஏடுகளைக் (pamphlets) கொண்டு அவற்றின் தரத்தை நிர்ணயிக்கலாம். உண்மைதானே?

''அவை அளிக்கும் தகவல்களில் எந்த அளவு உங்களுக்கு நிஜமாகவே தேவை என்பதை மனத்தில் கொள்ளவில்லையென்றால் ஏமாந்து போவீர்கள். உதாரணமாக ஒரு கல்லூரி தன் வளாகத்தில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றைக் கொண்டுள்ளது என்பது உங்களுக்கு அவசியமான விஷயமா?''

அப்படியானால் நேரடியாக அந்த வளாகத்துக்கே சென்று அதைச் சுற்றிப் பார்த்து முடிவுக்கு வரலாம் அல்லவா?

''நீங்கள் தேர்ந்தெடுக்க இருக்கும் கோர்ஸ் தொடர்பான 'லேப்'கள் (பரிசோதனைச் சாலைகள்) எந்த அளவில் உள்ளன என்கிற அளவில், இதுபோன்ற நேரடி மேற்பார்வை பலன் தரும். ஆனால், அதைவிட முக்கியம் அந்தக் கல்லூரியில் உள்ள ஆசிரியர்களின் தரம். பள்ளியிலாவது ட்யூஷன் என்கிற ஒன்று உண்டு. கல்லூரிகளில் அப்படி இருப்பதில்லை.''

எனக்குத் தெரிந்த சிலர், நாலைந்து வருடங்களுக்கு முன் ஒரு கல்லூரியில் படித்தவர்கள். அந்தக் கல்லூரியில் ஆசிரியர்கள் சிறப்பாகப் பாடம் நடத்துவதாகக் கூறுகிறார்கள். இதை நம்பிச் செயல்படுவதில் என்ன தயக்கம்?

''நாலைந்து வருடங்களுக்கு முன்பாக அங்கு இருந்த ஆசிரியர்கள் இப்போது அங்கு இல்லாமல் போயிருக்கலாம் (பொறியியல் கல்லூரிகளில் இது சகஜம்). எனவே, இப்போது அங்கு படிக்கும் மாணவர்களை இது குறித்து விசாரியுங்கள். அப்படி உங்களுக்குத் தெரிந்த யாரும் அங்கு படிக்கவில்லையென்றால், நேரடியாகக் கல்லூரிக்குச் சென்று அங்குள்ள மாணவர்களை விசாரிக்கலாம்.''

நிறையப் பேருந்துகள் கொண்ட கல்லூரி என்றால் நம்பிச் சேர்க்கலாம். போக்குவரத்து அவஸ்தை மிச்சம். இப்படி முடிவெடுப்பது இயற்கைதானே?

''அந்தப் பேருந்து உங்கள் வீட்டுக்கு அருகில் நிற்குமா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள் (உங்கள் பகுதி வழியாகச் சென்றால் மட்டும் போதாது). சில கல்லூரிகளில் காலையில் மட்டும் அப்படி நிறுத்தி ஏற்றிக் கொண்டு மாலையில் தள்ளி எங்கேயோதான் நிறுத்துவார்கள். அதையும் சரிபார்த்துக்கொள்ளுங்கள்.''

- ஜி.எஸ்.எஸ்


கல்கி
வழங்கும்
கோடைக்கால கொண்டாட்டம்!
6 வார ஆரவாரம்
நீங்க சொன்னா... நாங்க கேட்போம்!
இ-மெயில்: kalki@kalkiweekly.com
முகவரி: கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை-32.
இதழ்களில்...
02.05.2010 கூலா சாப்பிடுங்க (உணவு)
09.05.2010 வெயிலோடு விளையாடி... (சுற்றுலா)
16.05.2010 வாட்டாத வகுப்புகள் (கோடை வகுப்புகள்)
23.05.2010 ஜில்லுன்னு ஜோரா... (உடல் நலம்)
30.05.2010 சம்மர் செலக்ஷன் (ஃபேஷன்)
06.06.2010 ஓடிப்போச்சுக் கோடை (ஜில் ஜில் கலாட்டா)
கலகலன்னு வருது... ச்சும்மா கலக்கலா வருது...

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11* Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11* Registered as a Newspaper in Srilanka.